நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 36, 15-31 டிசம்பர் 1993, விலை 7/=

### ஆற்றிலே போட்டு விட்டு ....

ஆற்றிலே போட்டுவிட்டு குளத்திலதை எடுத்ததென்ன
ஏற்றமிகு அற்புதங்கள் எம்மட்டாம்? - நாற்புறமும்
பார்த்திருக்க நடுத்தெருவிற் பிடிபட்டோர் பிணமாய் பின்
மோச்சறியில் முளைப்பதற்கு முன்.

- ஈழமோகம்

## வட-கிழக்கில்

# வைத்தியசாலைகளும் புறக்கணிப்பு

பரன் - தம்பு திருநாவுக்கரசு

வட-கிழக்கிலுள்ள பிரதானமான வைத்தியசாலைகளில் போதிய மருத்துவர்களும், மருந்துகளுமின்றி நோயாளர் பெரும் அவதிக்குள்ளாகி வருவதாகத் தெரிய வருகிறது. குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலை, வவுனியா வைத்தியசாலை மட்டக்களப்பு வைத்தியசாலை என்பன இவ்வாறான நெருக்கடி நிலையைத் தொடர்ந்து எதிர் நோக்கி வருகின்றன. வட-கிழக்கிலுள்ள இந்த வைத்தியசாலைகள் அவை எதிர்நோக்குகிற நெருக்கடிகள் பற்றி அரசுக்குத் தெரிவித்து வந்தும் இவ்வைத்தியசாலைகளுக்குத் தேவையான வைத்தியர்களையோ, போதியளவு மருந்துகளையோ, மருத்துவ உபகரணங்களையோ அனுப்பி வைப்பதில் அரசு அக்கறையற்றிருப்பதாகவும் இந்த வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கில் வைத்தியசாலைகளில் புலிகளுக்கே சிகிச்சையளிக்கப்படுகிறது மக்களுக்கல்ல. எனவே அங்கு மருந்துப் பொருட்கள் அனுப்புவதை அரசு தடை செய்ய வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் அரசு தரப்பிலிருந்தும் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் எழுந்த நிர்ப்பந்தங்களையடுத்தே வட-கிழக்கிற்கு மருந்துப் பொருட்கள் அனுப்புவதில் அரசு அக்கறை காட்டவில்லை என்றும் இதனாலேயே அங்கு மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரியவருகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, வடக்கில் பருவகால மழை பொழிய ஆரம்பித்திருப்பதையடுத்து நீரினால் பரவும் நோய்கள் வேகமாகப் பரவ ஆரம்பித்திருக்கின்றன. ஒருபுறம் நோயாளர் போதிய மருத்துவ வசதிகளின்றி அல்லற்படுகின்ற அதே வேளை யாழ். போதனா வைத்தியசாலையில் புலிகளே சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகளை அனுப்புவது புலிகளுக்கு அனுப்புவதற்கு ஒப்பானதாகும். எனவே யாழ் வைத்திய சாலைக்கு மருந்துகள் அனுப்புவதைத் தடை செய்ய வேண்டும் எனும் பேரினவாதிகளின் குரல் ஒலித்து வருகிறது. மறுபுறத்தில் விமானப் படை விமானங்கள் வைத்தியசாலைப் பகுதிகளிலே குண்டு வீசக்கூடாது என்பதையும் மீறிக் குண்டுகளைப் பொழிந்து வருகின்றன.

### மட்டக்களப்பு வைத்தியசாலை

மட்டக்களப்பு வைத்தியசாலையிலும் இதே நிலைமையே நிலவுகிறது. மருந்துகள் இல்லை. நஞ்சருந்துபவர்களைக் காப்பாற்ற ஊசி மருந்தோ மூளைக் காய்ச்சலுக்குரிய கியூனைன் மருந்தோ கிடையாது. இதனால் அண்மையில் மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு இருவர் இறந்தனர்.

வைத்தியர்களுக்கு, சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கு எல்லாமே தட்டுப்பாடு தான். இதனால் தனியார் மருந்துச் சாலைகளிலேயே பணம் கொடுத்து மருந்து வாங்குவதுடன் தகுதியற்ற வைத்தியர்களினால் மாறிக்கொடுக்கும் மருந்துகளினால் இறக்க நேரிடுகின்றது. இந்த நிலைக்குத் திணைக்களத் தலைவரின் மனைவியும் ஆளானார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா வைத்தியசாலை

வடபகுதியின் பிரதான ஆதார வைத்தியசாலைகளில் ஒன்றான வவுனியா வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் சில அத்தியாவசிய மருந்துகள் அறவே இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் வைத்தியசாலை தனியே வவுனியா மாவட்டத்துக்கு மட்டும் உரியதொன்றாக இல்லாமல் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் உரியதொன்றாக விளங்குவது தெரிந்ததே. அதாவது யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அடுத்த படியாக வடக்கு மக்களின் நோய் தீர்க்கும் வைத்தியசாலையாக இதுவே விளங்குகிறது.

அதனால்தானோ என்னவோ அரசாங்கமும் அதன் சுகாதார அமைச்சும் அவ் வைத்தியசாலை பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் இருக்கின்றன.

அண்மைக் காலமாக அடை மழைக்கு உட்பட்டுள்ள வவுனியாவிலும் அதன் அயல் மாவட்டங்களிலும் மலேரியா, வயிற்றோட்ட நோய்கள் அதிகமாகப் பரவியுள்ளன. நாளொன்றுக்கு 600-700 வரையில் வருகின்ற நோயாளிகளில் 70%மானவர்கள் மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளனர். 25%மானவர்கள் வயிற்றோட்ட நோயினாலும் 5%மானவர்கள் ஏனைய நோய்களினாலும் பீடிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

ஆனால் இம் மலேரியாவைக் குணப்படுத்துகின்ற பிறிமா குயின் (Prima quine) குளோரோ குயின் (Chloro quine) ஆகிய பிரதான மருந்து வகைகள் இவ் வைத்தியசாலையில் தீர்ந்து போயுள்ளன. என்னினும் இற்றைவரை இவற்றை அனுப்பி வைப்பதற்கான முயற்சிகள் எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை.

மேலும் இம் மலேரியாக் காய்ச்சலை அடையாளம் காண்பதற்கான நுணுக்குப் பரிசோதகர் (Micro Technologist) பதவியும் காலியாகவே உள்ளது. அதனால் காய்ச்சல் என வருபவர்களை தனியார் பரிசோதகர்களிடமே அனுப்புகின்றனர் வைத்தியசாலை வைத்தியர்கள். இவ்வாறு தனியார் வைத்திய நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்வதற்கு 15/= அறவிடப்படுகின்றது. எனினும் இவ் வைத்திய நிலையங்களிலும் கூட முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமல் அனுமானத்தாலேயே குணம்குறிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன.

யாழ் குடாநாட்டிலுள்ள யாழ் போதனா வைத்தியசாலை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. புலிகளே அங்கு சிகிச்சை பெறுகிறார்கள் எனக் கூறி அரசாங்கம் மருந்து வகைகளையும் மருத்துவ உபகரணங்களையும் அனுப்புவதைத் தடுத்து வைத்துள்ளது. அல்லது கட்டுப்படுத்தியுள்ளது.

ஆயின் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா வைத்தியசாலையிலும் புலிகளா சிகிச்சை பெறுகின்றார்கள்? அல்லது புலிகளா வைத்தியம் செய்கின்றார்கள்? அன்றி புலிகளின் கட்டுப்பாட்டிலா வவுனியா நகரம் உள்ளது? என்பது வன்னி வாழ் மக்களின் கேள்வி.

சுகாதார அமைச்சும், அரசும் என்ன பதில் சொல்லப் போகிறது?

## பூநகரியை இராணுவம் மீளக் கைப்பற்றவில்லை

பூநகரியில் இராணுவம் முன்னர் நிலைகொண்டிருந்த இடத்தை மீளவும் இன்னும் கைப்பற்றவில்லை என்றும், பூநகரி-சங்குப்பிட்டி வீதியிலிருந்து மேற்குப்பக்கமாக சுமார் நாலுமைல் தூரத்தில் கடற்கரையை அண்டிய ஓரிடத்திலேயே அவர்கள் முகாம் அமைத்து நிலை கொண்டிருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கிடைத்த செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

பூநகரி-சங்குப்பிட்டி பாதை இராணுவத்தினரின் பிடியில் இருந்து விடுபட்டுள்ளதையடுத்து இதனூடாக யாழ் குடாநாட்டிற்கான போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு விடுதலைப்புலிகள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இந்த வீதியின் மேற்புறத்தில் மணற்குன்றுகள் நிறைந்த கௌதாரி முனை என்னுமிடத்தில் முகாமிட்டுள்ள படையினரின் எறிகணை வீச்சிற்குப் பயணிகள் உள்ளாக நேரிடலாம் என்பதனால் அந்த ஆலோசனையைப் புலிகள் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தொடர்ந்து நடைபெறும் கிளாலியூடான படகுச் சேவை தற்போது போதிய பயணிகள் இல்லாத நிலையில் முன்னிலும் பார்க்க கிரமமாகவும், விரைவாகவும், ஆபத்துக்களின்றியும் நடைபெற்று வருகின்றது.

இதேவேளையில் பூநகரிப் பேரழிவை அடுத்து அந்தப் பிரதேசத்தில் - கௌதாரி முனையில் நிலை கொண்டுள்ள ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொண்ட இராணுவ முகாமினால் எதுவித பிரயோசனமும் இல்லை என்பதை நன்கு உணர்ந்துள்ள இராணுவத் தலைமைப் பீடம் இந்த முகாமிலிருந்து வெளியேறுவது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகப் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாகதேவன்துறையில் அமைந்திருந்த கடற்படை முகாமைத் தாக்கி, அங்கிருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து 'வோட்டர் ஜெட்' அதிவேகப் படகுகளைக் கிளாலிக் கடலேரிப் பிரயாண மார்க்கத்தில் பாதுகாப்பு வழங்குவதற்காகப் பயன்படுத்தி வரும் புலிகள் ஆனையிறவு முகாம் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பயன்படுத்தக் கூடும் என்ற சந்தேகமும் பாதுகாப்பு பகுதியினருக்கு ஏற்பட்டுள்ளது.

நீரை உறிஞ்சி வெளித் தள்ளுவதன் மூலம் கிடைக்கும் அதிவேகம் கொண்ட உந்து சக்தியைப் பெற்றுக் கொள்ளும் தன்மை வாய்ந்த 'வோட்டர் ஜெட்' அதிவேகப் படகுகள் ஒன்றரை, இரண்டடி ஆழம் உள்ள பரவைக் கடல் நீர்ப்பரப்பிலும் ஓடிச் செல்ல வல்லது.

மண்டைதீவு கடற்படைத் தளததில் இருந்து கடந்த வருடம் அபகரிக்கப்பட்டது உட்பட இப்போது புலிகள் வசமுள்ள ஆறு வோட்டர் ஜெட் படகுகளையும், அத்துடன் குறிப்பாக பூநகரி இராணுவ முகாம் தொகுதியிலிருந்து கைப்பற்றிய 120 m.m கலிபர் துப்பாக்கிகள், ஷெல்களை ஏவும் பீரங்கிகள் என்பவற்றைப் பயன்படுத்தி 'தவளைப் பாய்ச்சல்' பாணியிலான ஒரு தாக்குதலை ஆனையிறவு முகாம் மீது மேற்கொள்வது புலிகளின் அடுத்த தாக்குதல் திட்டமாக இருக்கலாம் என்ற சந்தேகம் பாதுகாப்புப் படையினரின் தலைமைப் பீட வட்டாரங்களில் வலுத்து வருகின்றது.

### வாசகர்களுக்கு,

சரிநிகர், வாசகர்களுக்குத் தனது நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அத்துடன் இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தியும் உங்களுக்கு. இதுவரை மாதம் இரு இதழாக வெளிவந்த சரிநிகர் 1994 ஜனவரி முதல் இரு வாரத்திற்கொரு முறை வெளிவரும். அதாவது ஒன்று விட்டு ஒரு வெள்ளி சரிநிகர் உங்கள் கைகளில் தவழும். அதுவும் 16 பக்கங்களுடன். சந்தோஷம் தானே உங்களுக்கு.

கூடவே இன்னொரு விடயமும், அடுத்த இதழ் 1994 ஜனவரி 14 வெள்ளியன்றே வெளிவரும். ஆனால் அதிக பக்கங்களுடன் சிறப்பிதழாக. சரிதானே.

'94 இல் சந்திப்போமோ?

ஆ-ர்

நன்றி - நூலகத்திட்டம்





# வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட போது துன்புறுத்தப்படவில்லை என்கிறார் அன்ரன் பாலசிங்கம்

**கௌள்ரர் பெயின்ற்: மனித உரிமைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் நடத்தைகள், குறிப்பாக அதன் தடுப்பு முகாம்கள் இன்று பலரது கவனத்தையும் ஈர்க்கின்ற ஒரு பிரதான பிரச்சினையாக உள்ளது. எத்தனை முகாம்கள் அல்லது தடுப்பு முகாம்கள் இப்போது உங்களிடம் உள்ளன? உங்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது நிலைமை என்ன?**

அன்ரன் பாலசிங்கம்: நீங்கள் கொழும்பில் இருக்கும் விடுதலைப்புலிகள் விரோத சக்திகளுடைய பேச்சுக்களையும் தகவல்களையும் வைத்து இப்படிக் கேட்கிறீர்கள். நான் உங்களுக்கு நேர்மையாகக் கூற விரும்புகின்றேன், பல காலங்களுக்கு முன்பு இங்கு அராஜகம் தலைவிரித்தாடும் ஒரு நிலைமை இருந்தது உண்மைதான். சட்டம், ஒழுங்கு எதுவும் நடைமுறையில் இருக்கவில்லை. எந்த அரச அதிகாரமும் இங்கு இருக்கவில்லை. பல்வேறு குழுக்கள் ஆயுதங்களுடன் உலவின. அப்போது சண்டைகள் நடந்தன; பரஸ்பரக் கொலைகள் நடந்தன; பரஸ்பரக் கைதுகளும், தடுத்து வைப்புக்களும் இருந்தன. அது ஒரு முற்று முழுதான அராஜகக் காலமாகும். பின்பு இந்திய இராணுவம் வந்தது. இது நிலைமையை மேலும் மோசமாக்கியது. ஏனென்றால் அனேகமாக எல்லா ஆயுதமேந்திய குழுக்களும் இந்திய இராணுவத்துடன் சேர்ந்துகொண்டு எமக்குச் சார்பான சக்திகளை துடைத்தழிக்கத் தொடங்கின. அப்போது பெரியளவிலான கொலைகள் நடந்தன. உங்களுக்கே தெரியும் இந்தியர்கள் எவ்வாறு முறைகேடாக நடந்தார்கள் என்று. இந்தியர்கள் போன பின் நாம் சில பகுதிகளை குறிப்பாக யாழ் குடாநாட்டையும் குடாநாட்டுக்கு வெளியிலுள்ள வடக்கின் ஏனைய பகுதிகளையும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளையும் எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தோம். இந்தியர்கள் வெளியேறி மூன்று மாதத்துக்குள் இன்னொரு யுத்தம் ஆரம்பமானது. நாம் எமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் கொண்டு வர விரும்பினோம். நாம் பொலிஸ் படையை ஸ்தாபித்து எல்லா இடங்களிலும் பொலிஸ் நிலையங்களை உருவாக்கினோம். அண்மையில் சட்ட நீதிமன்றங்களையும் உருவாக்கியுள்ளோம். மிக அண்மைக்காலமாகத் தான் சமூகக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அங்கிருந்து அவர்கள் நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணையின் பின் சட்ட முறைப்படி தண்டிக்கப் படுகிறார்கள். ஆகவே நான் எதை உங்களுக்கு அழுத்திக் கூற விரும்புகிறேன் என்றால் இப்போது இங்கு மற்றவர்களால் கூறப்படும் விதத்தில் தடுப்பு முகாம்கள் எதுவும் இல்லையென்பதையே. நான் இன்னுமொன்றையும் கூற வேண்டும். உண்மையில் எல்லா நாடுகளும் இராஜ துரோகக் குற்றத்துக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். எமது 'துரோகி' என்ற கருத்தமைவை நீங்கள் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், இதை ஏற்றுக் கொள்வீர்கள். ஏனென்றால் நாங்கள் பல சக்திகளுக்கெதிராகப் போராட வேண்டியுள்ளோம். மிகப் பலம் வாய்ந்த ஸ்ரீ லங்கா இராணுவம், ஆயுதமேந்திய குழுக்கள், இந்திய உளவுப்பிரிவினர் -இது எந்த நேரமும் ஊடுருவக் கூடும். எமது எதிரிகளுக்குத் தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் இந்த உளவாளிகள் இங்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். எமது தலைவர்களின் நடமாட்டங்கள் பற்றியும் எமது முகாம்கள் பற்றிய வரைபடங்களையும், அவர்கள் எதிரிக்கு வழங்குகிறார்கள். அவர்கள் குண்டுகளைக் கொண்டு வருகிறார்கள். இப்படியான சம்பவங்கள் கணக்கற்று நடந்துள்ளன. ஆகவே நாம் 'துரோகி' என்ற இந்தக் கருத்தமைவைப் பாவித்து அவர்களைத் தண்டிக்கிறோம்.

**கௌ.பொ : நீங்கள் கூறும் துரோகிகள் அவர்கள் கொல்லப்படாத பட்சத்தில் எங்காவது தடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? அப்படியானால் அவை தடுப்பு முகாம்களாகத்தானே இருக்க வேண்டும்?**

அ.பா : தகவல் கொடுப்பவர்களை காணும் போது அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் நாம் அவர்களுக்கு மரண தண்டனை வழங்குகிறோம். நாம் இது தொடர்பான விபரங்களைப் பத்திரிகைகளுக்குத் தருகிறோம். யார் யார் எந்தக் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டார்கள் என்பதையும், அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டதையும், அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையும், அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதையும் நாம் அறிவிப்போம். தண்டனை வழங்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு உடனடியாகவே இதை நாம் அறிவிப்போம். குற்றவாளியாகக் காணப்படாதவர்கள் பகிரங்கமாக விடுவிக்கப்படுகிறார்கள். சிலர் குறிப்பாக இலங்கை இராணுவத்தையும், பொலிசையும் சேர்ந்தவர்கள் எமது தடுப்பில் இருந்த போதும் அவர்களை நாம் I.C.R.Cக்குக் காட்டியுள்ளோம்.

**கௌ.பொ : சில குறிப்பான நபர்கள் பற்றி உதாரணமாக செல்வி, மனோகரன். இவர்கள் உங்களது தடுப்பு முகாமில் இருக்கிறார்களா?**

அ.பா : ஆம். அவர்கள் எமது தடுப்புக் கைதிகளாக உள்ளனர்.

**கௌ.பொ: அவர்களது குற்றங்கள் என்ன?**

அ.பா: எனக்கு, அவர்களது குற்றங்கள் சம்பந்தமாக அவ்வளவு பரிச்சயமில்லை. அனேகமாக அவர்கள் தகவல்களைக் கடத்தியிருக்கக் கூடும். எமது தலைவர்களின் தங்குமிடங்களையும், அவர்களைப் பற்றித் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அவற்றை வெளியே மற்றவர்களுக்கு கடத்துவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள்.

**கௌ.பொ: இப்பொழுது நீங்கள் இரு குறிப்பான நபர்கள் பற்றிய தகவல்களைக் கூறினீர்கள். இன்னும் எத்தனை பேர் தடுப்புக் காவலில் உள்ளனர்?**

அ.பா: மிகச் சிலரே நான் சில மனித உரிமைகளுக்கான அமைப்புக்களின் அறிக்கைகளை பார்த்திருக்கிறேன். அவை நாலாயிரம் பேர் வரை பல்வேறு முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றன. ஆனால் அப்படி எந்த முகாமும் இங்கு இல்லை. கைதிகளின் தொகை ஒரு 30-40 வரை இருக்கலாம்.

**கௌ.பொ: செல்வி பற்றிக் குறிப்பாக அவர் பாதுகாப்பாக இருப்பதாக தனிப்பட்ட முறையில் உங்களால் உத்தரவாதம் தர முடியுமா? உங்களுக்குத் தெரியுமென நினைக்கிறோம்; அவர் தொடர்பாக ஒரு சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.**

அ.பா: எனக்குத் தெரிந்த அளவில் நான் அவர் உயிருடன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன். ஏனென்றால் எங்களுக்குத் தெரியும் அவர் தொடர்பாகக் கொஞ்சம் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது...

**கௌ.பொ: ஏன் நீங்கள் குடாநாட்டிற்கு வெளியே மக்கள் போவதை அனுமதிப்பதில்லை?**

அ.பா: அதற்குப் பல காரணங்கள் உண்டு. 1983இல் இருந்து தொடர்ச்சியான தமிழர்களின் வெளியேற்றம் நடந்து கொண்டிருக்கின்றது. நாம் பல சிறந்த புத்திஜீவிகளை, விஞ்ஞானிகளை தொழில்நுட்பவியலாளர்களை இழந்துள்ளோம். எனவே இரண்டாவது ஈழ யுத்தத்தின் பின் நாம் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியேற்பட்டது. ஏனென்றால் இங்கிருந்து போகும் தமிழர்களில் பலர் கொழும்பில் உள்ள பல்வேறு நாட்டுத் தூதராலயங்களில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள், மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமைகள் பற்றி முறைப்பாடு செய்கின்றனர். எந்த விதமான சரியான காரணங்களும் இல்லாமல் பெருமளவில் யாரும் வெளியேறுவதை நாம் விரும்பவில்லை. உண்மையில் அரச ஊழியர்களையும், வங்கி ஊழியர்களையும் கொழும்பில் கல்வி கற்க அனுமதி கிடைத்துள்ள மாணவர்களையும், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்க அனுமதி கிடைத்துள்ள மாணவர்களையும் கொழும்பில் உத்தியோகம் கிடைத்துள்ளவர்களையும் நாம் ஒருபோதும் தடுப்பதில்லை. எல்லா நேர்மையான நோக்கங்களுக்காகப் போக விரும்புபவர்களையும் நாம் அனுமதிக்கிறோம். வெளிநாட்டுக்குச் செல்லும் சிலரது நிலைமை மிகவும் மோசமானது. அவர்கள் போதை வஸ்துகள் கடத்துவதிலும், இது போன்ற பிற குற்றச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். அவர்கள் தமிழ் மக்கள் பற்றிக் குறிப்பாகவும் ஸ்ரீ லங்கா பற்றிப் பொதுவாகவும் ஒரு மோசமான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்துகிறார்கள். மேற்கு நாடுகள் இவர்களை இப்போது திருப்பி அனுப்ப விரும்புகின்றன. ஆகவே தான் நாம் இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம்.

**கௌ.பொ: வெளியேற விரும்பும் மக்களைப் போகவேண்டாம் எனத் தடுக்கும் நீங்கள் இதற்கு எதிர்மாறாக முஸ்லீம் மக்களைப் போகச் சொல்லிச் சொன்னீர்கள். இதை எப்படி விளக்குவீர்கள்?**

அ.பா: முஸ்லீம் மக்களின் நிலைமை தனியாக ஆராயப்பட வேண்டியதொன்று. கிழக்கில் ஆயுதமேந்திய

→

# முஸ்லிம்களும் — * அயோத்தியும், * குணசிங்கபுரமும், * செந்தாமரையும்

-சுந்தரன்-

டிசெம்பர் 6ம் திகதியுடன் பாபர் மசூதி இடிக்கப்பட்டு ஒரு வருடமாகின்ற இவ்வேளையில் வட இந்தியாவில் நடைபெற்ற ஐந்து மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்களின் முடிவுகள் பா.ஜ.கட்சியின் வீழ்ச்சியைக் காட்டுவனவாகவுள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சி இந்தத் தேர்தலில் 'கரசேவகர்களுக்கு துப்பாக்கிக் குண்டு. ஹஸ்ரத்பாலைக் கைப்பற்றியவர்களுக்குப் புரியாணி' என்று என்னதான் முஸ்லிம்களுக்கு எதிராக இந்துவத்தைத் தூக்கிப் பிடித்து உரத்துக் கத்தியும் பெரிய வெற்றி எதனையும் சாதிக்க முடியாமல் போய்விட்டது.

இருந்ததையும் இழந்து வெறும் கையோடு திரும்பிய மாதிரித்தான்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு ஒரு வருடமாகின்ற இவ்வேளையில் கொழும்பிலும் முஸ்லீம்களுக்கு எதிரான பேரினவாத அச்சுறுத்தல்கள் வெளிக்கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன.

அண்மையில் நடத்து முடிந்த குணசிங்கபுர மோதல் (சிங்கள-முஸ்லீம் மோதல்) தனிநபர் பிரச்சினையாக வெளிப்படையாகத் தோற்றம் காட்டினாலும் இதன் பின்னணியைச் சற்றுக் கூர்ந்து நோக்குபவர்க்கு தவிர்க்க முடியாதபடி பல கேள்விகள் எழுந்து விடும்.

இம் மோதலில் அரச படைகள் நடந்து கொண்டவிதம் சந்தேகத்திற்கு உரிய ஒன்றாகவே முஸ்லீம்களால் நோக்கப்படுகிறதாகத் தெரிய வருகின்றது.

மோதலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும், நிலைமையைச் சுமூகமாக்கவும் எனவும் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட பொலிஸாரும் அரச பாதுகாப்புப் படையினரும் முஸ்லீம்கள் மீதான தாக்குதலைக் கண்டும் காணாது மெத்தனமாக இருந்திருக்கிறார்கள் என்பதும் யாராலும் கண்டு கொள்ளப்படாத ஒரு விடயமாக இருக்கிறது என்பதும் முஸ்லீம்களது குற்றச்சாட்டு.

பெரும்பாலான பத்திரிகைகள் இதனை வெறும் கோஷ்டி மோதலாக வர்ணித்துப் பரபரப்பான வியாபாரமாக்கிவிட்டு பிரச்சினையை அமுக்கி விட்டன.

இதன் பின்னணியையோ முஸ்லீம்களுக்கு எதிரான அச்சுறுத்தலாக இது வெளிக்கிளம்பியதையோ அக்கறையில் கொள்ளவில்லை என்பதும் ஒரு முக்கியமான விடயம்.

முஸ்லீம் அரசியல் தலைமைகள் கூட தமது நலன்கள் காரணமாக அரசைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதில் கவனமாய் இருந்தன.

தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான சிறு பிரச்சினையைக் கூட ஊதிப் பெருக்க வைத்து விடும் இச் சக்திகள் இதில் ஏன் மௌனமாக இருந்தன என்று கேட்பதில் அர்த்தம் ஏதுமில்லை.

அவர்களுடைய சாயம் வெளுக்கிற ஒரு சாட்சி இது.

ஆனால், இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு தமிழ் இனவாதத்தின் முஸ்லீம் விரோதப் போக்கைப் பின்தள்ளி விட்டு விட முடியாது.

முஸ்லீம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட மூன்றாவது ஆண்டில் இதனைக் கண்டிக்கும் முகமாகவும், அவர்களை அதே இடங்களில் மீளக் குடியமர்த்துவதை வலியுறுத்தும் முகமாகவும் கனடாவில் ஒரு கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியிருந்தது தமிழர் வகைதுறை வள நிலையம் எனும் அமைப்பு. தேடல் எனும் சஞ்சிகையை வெளியிடும் இவ் அமைப்புடன் சரிநிகர் உட்பட கனடாவிலிருந்து வெளிவரும் பல்வேறு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இப் பொதுக் கூட்ட ஏற்பாட்டில் பங்கு கொண்டிருந்தன.

விடயம் என்னவென்றால் தன்னை நடுநிலைப் பத்திரிகையாகக் கூறிக் கொண்டு கனடாவிலிருந்து வெளிவரும் செந்தாமரை என்ற பத்திரிகை பின்வருமாறு ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது என்பது பற்றித்தான்.

'தயவு செய்து எங்களைப் பாவிக்காதீர்கள்' - தேடகம் குழுவிற்கு யாழ் முஸ்லீம்கள் வேண்டுகோள் என்ற தலைப்பில் அச் செய்தி அமைந்திருந்தது.

அச் செய்தியில் முக்கியமான மூன்று குறிப்புகளை வலியுறுத்தியிருந்தது செந்தாமரை. ஒன்று: வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து அஷ்ரப் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை பள்ளிவாசல்களில் ஆர்ப்பாட்டங்களை நடாத்த முற்படுவதோடு இலங்கை அரசின் மறைமுக ஆதரவுடன் வெளிநாடுகளிலும் இது பற்றிப் பிரச்சாரம் செய்ய முற்படுகிறது என்பது.

இரண்டாவது: கனடாவில் உள்ள தமிழர் வகைதுறை வள நிலையமும் இதே முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது என்பது.

மூன்றாவது; வடக்கிலிருந்து கனடாவுக்கு இடம்பெயர்ந்து இருக்கும் சில முஸ்லீம்கள் தம்மைப் பாவிக்க வேண்டாமென்று தமிழர் வகைதுறை வள நிலையத்தைக் கோருவதான குறிப்பு.

இந்த மூன்று குறிப்புகளுக்கூடாகவும் செந்தாமரை சாதிக்க விரும்புகின்ற விடயங்கள் பட்டவர்த்தனமாக வெளித் தெரிகின்றன. வெளித் தெரிய வேண்டும் என்று தான் செந்தாமரையும் எழுதியதாகக் கொள்வதிலும் தவறில்லை.

எனது ஞாபகத்திற்கு எட்டியவரை முஸ்லீம்களின் வாழ்வதற்கான ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டு அங்கிருந்து அவர்கள் ஓட ஓட விரட்டப்பட்டது பற்றி இதுவரை எதுவுமே எழுதாத செந்தாமரை, சிறுபான்மையினர் என்பதற்காக தாம் ஒடுக்கப்படுகிறோம் என்று கூறி அதற்கெதிராகப் போராடும் தமிழ் மக்கள்தரப்பிலும் சிறுபான்மையினரான முஸ்லீம்கள் மீதான ஒடுக்குமுறை குறித்து மௌனம் சாதித்து வரும் செந்தாமரை, அவர்கள் விரட்டப்பட்டது தவறு என்று புலிகளுக்கு எதிராக கண்டனக் கூட்டம் ஒழுங்குபடுத்தியவுடன் மட்டும் முஸ்லீம்களை தேடகம் பாவிப்பதாகவும், அவர்களைக் காப்பது தன் கடன் என்பது போலவும் தேடகம் மீது பாய்ந்திருக்கிறது.

இது 'ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதை' தான் என்பதை சொல்லித்தான் புரிய வைக்க வேண்டும் என்பதில்லை.

சரி, அப்படியே உண்மையில் சில முஸ்லீம்கள் தான் தங்களைப் பாவிக்க வேண்டாம் என்று கூறியிருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட டி.பி.எஸ்.ஜெயராஜ் என்ற அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளரை ஆசிரியராகக் கொண்ட செந்தாமரை ஒரு செய்திக்குப் பின்னால் உள்ள அரசியல் போக்கை இனம் காணாமல் வெறுமனே செய்திக்குப் பின்னால் எப்படி இழுபட்டுப் போகிறது என்பது கேள்வியாகிறது.

அரசாங்கத்தில் பாஸ்கரலிங்கம், கணேசலிங்கம் போன்ற லிங்கங்கள் அங்கம் வகிப்பதை வைத்துக் கொண்டு அரசு தமிழர்களை ஒடுக்குவதில்லை அவர்களது உரிமைகளை மதித்தே நடக்கிறது என்று கூறுவதற்கும்,

பாரதீய ஜனதாக் கட்சியில் முஸ்லீம் வேட்பாளராக ரம்ஜன்கான் நிற்பதால் பா.ஜ.கட்சி முஸ்லீம் விரோதக் கட்சி இல்லை என்று கூறுவதற்கும்,

தமிழர்களுடன் பகைமையின்றியே வாழ்கிறோம் என்று இந்த முஸ்லிம்கள் கூறுவதற்கும் எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்காக இலங்கை அரசு பேரினவாத அரசு இல்லை என்றோ, பாரதீய ஜனதாக் கட்சி முஸ்லீம் விரோதக் கட்சி அல்ல என்றோ புலிகள் முஸ்லீம்களை விரட்டவில்லை என்றோ அர்த்தப்பட்டுப் போவதில்லை.

இதேபோல் இலங்கை அரசின் பேரினவாத ஒடுக்குமுறை சரி என்றோ பா.ஜ.கட்சி மசூதி தகர்ப்பில் ஈடுபட்டது சரி என்றோ, புலிகள் முஸ்லீம்களை விரட்டியதோ சரி என்றும் அர்த்தப்பட்டுப் போவதில்லை.

இதே மாதிரித்தான் இவ்வாறான செய்திகளை வெளியிடுவதால் செந்தாமரை நடுநிலைப் பத்திரிகையாகி விடுவதுமில்லை.

அதுமட்டுமல்ல; இந்த நடுநிலைப் பத்திரிகை என்ற பம்மாத்து நீண்ட காலத்திற்கு நில்லாதோய்!

நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு-03
தொலைபேசி:574047

பிரதம ஆசிரியர் உ. சேரன்



# சிசில் போட்ட குண்டு

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினாவை ஒய்வெடுத்துக் கொள்ளுமாறு அரசு தரப்பினர் நிர்ப்பந்தித்தனர்.

அடுத்தடுத்து கிளாலியிலும் பின்னர் பூனகரியிலுமாக இடம்பெற்ற பாரிய இராணுவத் தோல்விகளை அடுத்து அவர்மீது இந்த நிர்ப்பந்தம் பிரயோகிக்கப் பட்டது.

எதிர்வரும் மேமாதம் வரை பதவியிலிருக்கக்கூடிய அவரை அவசர அவசர மாகப் பதவியிலிருந்து ஓய்வெடுக்குமாறு கோரியது அவருக்கு ஒரு வகை யான 'பணிஷ்மன்ற்' தான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஓய்விற் செல்லும் தளபதி, சும்மா ஓய்வு பெற்று விடவில்லை.

இதற்கு முன்பும் பல தடவைகள் இத்தகைய 'கட்டாய ஓய்வு' கள் பலருக்கு வழங்கப்பட்டிருந்தன -இந்த யூ.என்.பி அரசில்.

இவற்றில் குறிப்படத்தக்க ஒன்றுதான் முன்னாள் பொலீஸ்மா அதிபர் உடுகம் பொல அவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு.

அவர் 'பூனை போல' போய் பிறகு 'புலிபோல' பாய்ந்த கதை இப்போது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் சிசில் வைத்தியரத்ன இதை எதிர் கொண்ட விதம் சற்று வித்தியாசமானது.

புலிகள் மீதான தாக்குதல் என்ற பேரால் வடக்கு கிழக்கு முழுவதும் குண்டுகளை வீசிப் பழகிப் போன அவர், ஓய்வு பெற முன்னரும் ஒரு குண்டை வீசினார்.

அக்குண்டு வீசப்பட்டது தெற்கில்! அதுவும் இராணுவத்தினர் மத்தியில்!

இன்று பல சர்ச்சைகளைக் கிளப்பியுள்ள அந்தக் குண்டு ஒன்றும் சாதாரண குண்டு அல்ல.

'தோல்வி பெறும் இராணுவத்திற்கு தளபதியாக இருப்பதினை நான் விரும்பவில்லை' என்ற அவரது அறிவிப்புத்தான் அந்தச் சக்திவாய்ந்த குண்டு!

அந்தக் குண்டு மேறபார்வையில் ஒரு கேலிக்குரிய குண்டாக தெரியக் கூடும். ஒரு தளபதி, தனது இராணுவத்தின் வெற்றி தோல்விக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பது போல இவ்வாறு அறிவிப்பது கேலிக்குரியதுதான்.

ஆனால் விடயம் அதைவிட ஆழமானது.

இந்திய 'அமைதி காக்கும் படையின்' தளபதிகள் அடிக்கடி கூறியது போல, தனது கைகளும் கட்டப்பட்டிருந்தன அன்று அவர் கூற முனைந்ததாக இதை அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

அல்லது, தளபதியாக இருந்தும், இராணுவத்தினர் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவில்லையே என்பதையே அவர் இவ்வாறு கூறியதாக எடுத்துக் கொள்ளலாம்.

அல்லது, இராணுவம் தோல்வியடையக் கூடிய ஒரு பாதையில் அதை அரசாங்கம் செயற்படுத்தி வருவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

அல்லாவிட்டால், தோல்வியடையும் இராணுவத்திற்கு தளபதியாக இருக்க தான் விரும்பவில்லை என்று அவர் எப்படி - சற்றும் தர்க்கப் பொருத்தமில்லாமல் கூறியிருக்க முடியும்?

அதுவும் அடுத்தடுத்து இரண்டு பாரிய இழப்புக்களை இராணுவம் எதிர் கொண்டிருக்கும் ஒரு உணர்ச்சிமயமான வேளையில்...

இராணுவத்தினரின் மனோநிலை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, கிளாலிச் சம்பவங்களைப் பற்றிய உண்மைகளை எழுதிய பத்திரிகையாளர், ஒருவரை 'பழைய ரயரை' ஞாபகப்படுத்தி மிரட்டிய ஒரு தளபதி, ஒரு சில நாட்களுக்குள் தானே அப்படி ஒரு மனோநிலையைப் பாதிக்கும் அறிவிப்பை வெளியிட்டார் என்றால் அது ஒன்றும் சாதாரண விடயம் அல்ல.

அரசுக்கும், இராணுவத்திற்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ள ஒரு குண்டுதான் அது -சந்தேகமில்லாமல்...

ஆனாலும் அவர் ஒரு விடயத்தைச் சரியாக கவனிக்கவில்லை.

அவர் சொன்ன 'தோல்வி பெறும் இராணுவத்திற்கு தளபதியாக இருத்தல்' என்பதில் ஒரு உண்மையை அவர் கவனிக்கத் தவறி விட்டார்.

அதுதான் இராணுவம் ஒருபோதும் தோற்பதில்லை என்பது...

யுத்தத்தில் ஈடுபடும் இருசாராரிலும் ஒரு சாரார் தோற்பது என்பதும் ஒரு சாரார் வெல்வது என்பதும் தவிர்க்க முடியாத உண்மைகள்.

ஒரு யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் யாராவது ஒரு சாராருக்கு மட்டுமே எப்போதும் சொந்தமானதில்லை.

ஒரு குறிப்பிட்ட யுத்தத்தில் ஒரு சாரார் வெல்வதும் இன்னொன்றில் தோற்றுப் போவதும் சாத்தியம், சகஜம்.

யுத்தங்களின் வெற்றியும் தோல்வியும் இராணுவத்தின் வெற்றியும் தோல்வியுமாகக் கருதப்படுவதில்லை.

யுத்தங்களில் தோற்பதும் வெல்வதும் தளபதிகளின் சட்டைகளில் அணியப்படும் நட்சத்திரங்களின் எண்ணிக்கைகளை கூட்டவோ குறைக்கவோ கூடும்.

ஆனால் முடிவான இறுதி வெற்றி என்பது எந்த தளபதிகளால் தீர்மானிக்கப்படுவதில்லை.

அது எப்போது என்ற கேள்வி எந்த இராணுவத்தளபதிகளாலும் பதிலிறுக்க முடியாத கேள்வி.

ஏனென்றால் இதைத்தீர்மானிப்பது இராணுவத்தளபதிகளின் மூளையோ, இராணுவ தளபாடங்களோ, ஆட்பலமோ அல்ல.

இதைத் தீர்மானிப்பது யுத்தத்திற்கான காரணிகள்.

யுத்தம் தோன்றுவதற்கான காரணிகள் இல்லாமல் போகும்வரை யுத்தம் தவிர்க்கப்பட முடியாமல் நடந்து கொண்டேயிருக்கும்

யுத்தத்திற்கான காரணிகள் யுத்தத்தை உருவாக்குகின்றன.

இக் காரணிகள் உருவாக்கும் காரணர்கள் யுத்தங்களை நடத்துகின்றனர்.

வெற்றியும் தோல்வியும் அவர்களுக்குத்தான் உரியது.

இராணுவம் வெறும் கருவியே!

கருவிகள் தோற்பதோ வெல்வதோ இல்லை.

யுத்தத்தின் தோல்வியால் மனமுடைபவர்கள் ஓடிப்போவார்கள்; அல்லது 'ஓய்வு' எடுப்பார்கள்; வெற்றியால் உந்தப்படுபவர்கள் மேலும் உற்சாகத்துடன் போரிடுவார்கள்.

ஆனால் யுத்தம் இவற்றுக்கு சம்பந்தமில்லாமல் நடந்து கொண்டு தான் இருக்கும்.

யுத்தத்தை நடாத்தும் ஆற்றலோ நிறுத்தும் ஆற்றலோ யுத்தத்தில் ஈடுபடும் படைகளுக்கு இல்லை!

→ 11

## தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை:

# கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை

பாசமறுப்பான்

தமிழ் மக்களின் அரசியல் தலைமையின் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலான வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரியும்.

அதுதான் அவை முன்னால் எடுத்து வைப்பது போலத் தோற்றங்காட்டிய ஒவ்வொரு அடிகளும் பின்னோக்கிய இரட்டை அடிகளாகவே இருந்திருக்கின்றன என்பதாகும்.

'ஓரடி முன்னே ஈரடி பின்னே'

கோரிக்கைகளில் இருந்த வேகம் அவற்றை வென்றெடுப்பதற்கான உழைப்பில் ஒருபோதும் காட்டப்பட்டதில்லை. இதன் தர்க்க ரீதியான வளர்ச்சியாக, அவர்களின் உழைப்புக்கு ஏற்ற விதத்தில் கோரிக்கைகள் குறுகிப்போயின.

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது போல.

சமஸ்டியில் தொடங்கிய கோரிக்கை, ஈழம் என்று ஆகியது. பிறகு அது திம்புக் கோரிக்கையாகக் குறுகி வட்டமேசைக்குப் போனது. இணைப்பு 'சீ'யாக பேப்பர் கிளிப்புக்குள் தொங்கியது. பிறகு இந்தியாவின் கருணையின் கீழ் 13வது திருத்தச் சட்டம் என்று சொல்லிக் கொண்டு மாகாண சபைக்கு வந்தது. இப்போது மாகாண சபையும் இல்லையென்று ஆனபின் சிராவஸ்திப் படிக்கட்டுக்குள் நின்றபடி நாலம்சக் கோரிக்கைக்குப் போனது. இறுதியாக அதுவும் இல்லையென்றானபின் திரும்பவும் திரும்பவும் ஒற்றையாட்சிக்குள் அரசுடன் இவர்கள் பேச முயற்சிசெய்த ஒவ்வொரு தடவையும் இவர்கள் தமது அரசியல் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்கவே வேண்டியிருந்திருக்கிறது. ஈழம் என்ற கோரிக்கையைத் தவிர மற்ற அனைத்துக் கோரிக்கைகளும் அரசிடம் கேட்கப்பட்ட கோரிக்கைகளே. ஆயினும் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான குறிப்பைக் கூட அரசு காட்டியதில்லை. ஆக, 1949ல் வைக்கப்பட்ட சமஸ்டிக் கோரிக்கையையே இப்போது திரும்பவும் உச்சரிக்கின்ற நிலைக்குத்தான் இக்கட்சிகள் வந்திருக்கின்றன.

அர்சியல் கோரிக்கைகளைப் பேசிய மாத்திரமே பெற்றுக்கொள்ளலாம் என்ற கருத்தை கடந்த 44 ஆண்டுகால அனுபவங்களுக்குப் பிறகும் திரும்பவும் கூறிக்கூறி தமிழ் மக்களை ஏமாற்றுவது ஒன்றும் இலங்கை அரசாங்கம் அல்ல. சாட்சாத் "தமிழ்மக்களை" பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக் கொள்ளும் தமிழ்க்கட்சிகளே தான்!

அரசியல் கட்சிகளின் நேர்மையற்ற இப்போக்கைப்பற்றி இப்பத்தியில் எழுதப்போக அது ஈ.பி.ஆர்.எல்.எவ்.இனருக்குத் தாக்கியிருக்கிறது. குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும் என்பது உண்மை தான். குறுகுறுப்பை அமுக்கிக் கொண்டு பேசாமல் இருக்கமுடியாமல் சண்டைக்கு வந்து நிற்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.பின் புதிய கண்ணோட்டம்! அவர்களின் தோழரடிப் பொடிக்கும் விநாயகமூர்த்தி அவர்கவிட்ட தோழரடிப்பொடிகளுக்கு இந்த வீண்பிரயத்தனம் எதையும் சாதிக்கப் போவதில்லை என்று 93ம் ஆண்டிலும் புரியாவிட்டால்... மற்றவர்கள் என்ன தான் செய்ய முடியும்.

புலிகளின் பாசிசத்தைப் பற்றி வாய்திறப்பதில்லை என்று குற்றம் சுமத்தும் இவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். புலிகளின் நடவடிக்கைகளைப் பற்றி தொடர்ச்சியான அம்பலப்படுத்தல் இப்பத்தியிலும், பத்திரிகையிலும் செய்யப்பட்டுத்தான் வருகிறது. இங்கே விடயம் என்ன வென்றால், புலிகளின் "பாசிச"த்தைக் காரணம் காட்டி இவர்கள் தம்மை நியாயப்படுத்துவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே.

விடயத்துக்கு வருவோம்.

இப்பத்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முக்கியமான விடயமான அவர்களது அரசியல் வங்குரோத்துத் தனத்தைப் பற்றிப் பதில் சொல்லவேண்டிய தேவையை வசதியாக மறந்துவிட்டு, புலிகளில்லா ஊரில் பிழை பிடிக்கப் புறப்பட்ட பத்திரிகையாளர், பத்திரிகை அரசியல் தீர்வு சொல்லத் தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு இருப்பது தானே என்ற கருத்துப்பட அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஈ.பி.ஆர்.எல். எப் இன் கடந்த கால வரலாறு முழுவதையும் ஆராயப் புறப்பட்டால் அதன் குத்துக்கரணங்கள், இந்தியாவிடம் அது சரணடைந்தமை, சோவியத் பாணி சோசலிசத்தைப்பற்றியும் புரட்சியைப் பற்றியும் கூறி மக்களை ஏமாற்றியமை, அப்பாவித்தனமாக அதை நம்பிக் கட்சியில் சேர்ந்தவர்களை களையெடுத்தமை அல்லது மிரட்டியமை, கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பு, முஸ்லிம்கள் மீதான தாக்குதல் என்று பட்டியலே போட முடியும். அதையெல்லாம் விட்டுவிட்டு வெளிப்படையாக அவர்கள் எப்படி செயற்பட்டார்கள் என்று பார்த்தால் கூட இந்தியப்படையின் தீர்வுகாணும் முயற்சியில் 'சற்றும் மனந்தளராத' வேதாளங்களைப் போல-மன்னிக்கவும், விக்கிரமாதித்தனைப் போல தமிழ்க் கட்சிகளின் குரல் ஒலிக்கிறது....

இந்த எந்தக் கோரிக்கைகளையும் இன்று ஜனநாயகவழிக்குத் திரும்பி விட்டதாகக் கூறிக்கொள்ளும் எந்தக் கட்சிகளும் ஒருபோதும் இதய சுத்தியுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காகப் போராடியது - மன்னிக்க வேண்டும் - முயற்சித்தது கிடையாது. இலங்கைகளுக்கும் எப்பாடுபட்டாவது தமது கட்சியை காப்பாற்றிவிடும் ஆவல் இருப்பதை பாராட்டத்தான் வேண்டும். ஆனால் இந்த ஆவலால் ஆகப்போவது ஒன்றுமில்லை. ஏனென்றால், பொய்யையும் போலித்தனத்தையும் மூடி மறைத்து நியாயப்படுத்தி விடுவது சாத்தியமில்லை. உண்மை மிகவும் சக்திமிக்கது. அது எப்படியும் வெளிப்பட்டுத்தான் ஆகும். கட்சியை நியாயப் படுத்திப் படுத்தியே பழகிப் போய்

→ 11

# இல்லாத ஊருக்கு......

காங்கேசன்துறை சந்தி

யாழப்பாணம் போவதாகச் சொல்லிக் கொண்டு ஒரு பஸ் புறப்படத் தயாராக நின்றது

யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் என்று ஒரு பையன் கத்திக் கொண்டிருந்தான்.

முண்டியடித்து கொண்டு ஏறிய சனங்கள் ஆசனங்களில் நிறைந்து போக, மீதிப்பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

பஸ் புறப்பட்டது.

சற்றுத்தூரம் போனதும், தாம் போய்க் கொண்டிருக்கும் பாதையைவிட இலகுவான குறுக்குப் பாதை ஒன்று இருப்பதாக கூறிய ஓட்டுனர் பஸ்சை திருப்பினார்.

வேண்டாம், வேண்டாம் இப்பாதையில் போனால் போய்ச்சேர்வது நிச்சயம் இல்லை என்று சொன்னார்கள் சிலர்.

அவர்களை 'விருப்பம் இல்லா விட்டால் இறங்கிப் போங்கோ' என்று ஓட்டுனர் கூறினார். பஸ்திருப்பப்பட்டது.

ஓட்டுனர் போகும் வழியில் தனது உறவினர் வீட்டுக்குப் போய்ச் செல்வதற்காகவே பஸ்ஸை திருப்புகிறார் என்று சிலர் முணுமுணுத்தனர். ஆயினும் பஸ் திரும்பி ஓடியது.

சிறிது தூரம் போனதும் பஸ் நின்றது. ஓட்டுனரின் நண்பர்கள் சிலர் அவருடன் வந்து உரையாடினர்.

தாம் காட்டும் வழியில் போனால் விரைவாக போகலாம் என அவர்கள் கூறினார்கள்

வேண்டாம் என்று பஸ்ஸில் இருந்த பயணிகள் கத்தினர்.

'விருப்ப மில்லாதவர்கள் இறங்கிப் போகலாம்' என்று மீண்டும் கூறினார் ஓட்டுனர்.

ஓட்டுனர் திருப்பிய பாதையில் போகும் சிலர் அதில் ஏறிக் கொண்டனர்.

ஓட்டுனரின் நண்பர்களில் சிலர் கொடுத்த சில பொருட்களையும் ஏற்றிக் கொண்டு பஸ் பாதையில் ஓடியது.

பஸ்ஸிற்குள் இருந்தவர்களிபலர் பஸ் திசைமாறி போவதை திரும்பத திரும்ப குறிப்பிட்டனர்.

அவர்கள் பலவந்தமாக இறக்கப்பட்டனர்.

இப்போது பஸ் போகும் பாதையைக் கண்ட சிலர் புதிதாக ஏறிக் கொண்டனர்.

சில நிமிட நேரத்துள் அவர்கள் பஸ்சை திருப்பச் சொன்னர்கள். ஓட்டுனரும் திருப்ப முயன்றார்.

யாழ்ப்பாணம் போகவென ஏறியவர்கள் எல்லோரும் இனியும் இந்த பஸ்ஸில் போவதில் பிரயோசனமில்லை என்று இறங்கிக் கொண்டனர்.

ஆயினும் புதிதாக ஏறியவர்களால் பஸ் நிறைந்திருந்தது.

யாழ்ப்பாணம் போவதாக சொல்லிக் கொண்டு புறப்பட்ட பஸ் இப்போது போவது யாழ்ப்பாணத்துக்கல்ல என்பது ஓட்டுனருக்கும் பயணிகளுக்கும் தெரிந்திருந்தது.

ஆயினும் யாழ்ப்பாண போட் போடப் பட்டிருந்தது.

பாதை யோரத்தில் நின்றவர்கள் இதைப்பார்த்துச் சிரித்தார்கள்; பாதை பிழை பாதை பிழை என்று சிலர் கூறவும் செய்தார்கள். ஓட்டுனர் அதுபற்றி அலட்டிக்கொள்ளவில்லை. ஏனென்றால் அவருக்கும் அது தெரிந்திருந்தது ஓட்டுனர் பெயர்ப்பலகையை மாற்றிக் கொண்டார்.

பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் போகாத அந்த பஸ்சைப் பற்றி பிறகு யாரும் கவலைப்படவில்லை.

பஸ் போறவரைக்கும் சவாரி செய்ய விருப்பமானவர்கள் மட்டும் அதில் சாசுவதமாக அமர்ந்திருந்தார்கள்.

பி.கு: இப்போது சில பயணிகள் சரியான பாதை எது என்று கேட்கிறார்கள். பாதை தெரியவில்லை. ஆனால் திசை தெரியும் என்று சிலர், பதில் சொன்ன போதும் அந்தத் திசைக்கு வண்டியை திருப்பாமலே 'பாதையை காட்டு' என்று கூறிக் கணக்கு விட்டபடி தமது பதையில் அவர்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்ப்பாணம் இன்று 14

செய்வதற்கு ஒரே ஒரு வழி இருந்தது. அதனைத்தான் பலர் செய்தனர்.

பலரின் அனுபவங்களைத் திரட்டியதிலிருந்து ஒவ்வொன்றும் பலவிதமான பயங்கரமான அனுபவங்கள்.

யாழ்ப்பாணத்தை விட்டுத் தப்பியோடிய வழிவகைகள் புதிதானவை.

1990 ஒக்ரோபரில் புலிகள் சிறிய இடைவெளி கொடுத்தார்கள். அதாவது யாரும் பாஸ் எடுக்கத் தேவையில்லை. கொழும்புக்குப் போகலாம். இவ்வாறு அனுமதிக்கப்பட்டது மூன்று நாட்கள் மாத்திரமே.

அந்த நாட்களில் தப்பிப் பிழைத்தவர் அனேகர். 'குண்டி மண்ணைத் தட்டி விட்டு, முண்டியடித்து ஓடினார்கள்

அப்படிக் கொழும்பிற்குத் தப்பியோடிய ஒருவர் கூறுகிறார் "கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. என் வாழ்க்கை இப்படித் திசைமாறும் என்று நினைக்கவில்லை. மரணத்திற்கான நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன். இதோ தப்பி விட்டேன் என்பதை நம்பக் கூட முடியவில்லை. இன்னும் மீள முடியாத அதிர்ச்சி" அவர் அதிர்ச்சி முகம் முழுக்கப் பரந்திருந்தது.

இவ்வாறு தப்பியவர்கள் சிலர்.

வேறு எவ்வாறு?

கவிதை மிகச் சுலபமான வடிவம்.

கவிஞர் பத்துச் சொற்களில் சொல்வதனை கட்டுரையாளர் நூறு சொற்களிலும் சொல்லி முடியாது.

இரு கவிஞர்களின் கவிதைகளைக் காட்டுகின்றேன்.

ஒரு கவிஞர் காட்டு வழி தப்புவது பற்றி ஒரு கவிதை சொன்னார். வெளிநாடுகளில் ஒருநாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு இடம்பெயர்வதிலும் பார்க்க இது மிக மோசமானது; கடினமானது.



**வெயிலோ புழுங்கும்**

கடக்கப்படாத எல்லை என்பது கவிதையின் தலைப்பு.

"நம்பிக்கை குலைகிறது/ ஒரு காலத்தில் அப்படி ஒரு காட்டுப் பாதை/ இருந்தது எனச் சொல்கிறார்கள்./ ஒரு மாதத்திற்கு முன்னால் கடந்தவர்களும்/ இருக்கிறார்கள்.../ இருபது நாட்களாக இங்கு தங்கியிருந்தேன்./ ஒரு ஒற்றையடிப் பாதையைத் தானும்/ கண்டடையவில்லை./ ஊருக்குத் திரும்பி என்னத்தைச் சொல்வேன்./ அங்கே எனக்கு/ கல்லறை கட்டி எழுதியும் விட்டிருப்பார்கள்./ 'காட்டு வழியாய் எல்லையைக் கடந்தவன்"/ மிதிவெடிகளுக்கும்/ ஆட்காட்டிக் குருவிகளின் சிடுசிடுப்புகளுக்காகவும்/ தேசத் துரோகிகளுக்கு விழும் அடிகளுக்காகவும்/ என் ஜீவனே இரவில் பயப்படுகிறது/ பகலில் ஒரு பீடி இழுக்கிற போது/ எல்லாம் செய்யலாம் போலுள்ளது/ வனாந்தரங்களில் கரிகொண்டு/ பல் துலக்கி நாள் கழிகிறது/ சாவும் போரும் நகர்கிறது"/ (நட்ஷத்திரன் செவ்விந்தியன்)

இவ்வாறு காட்டு வழியே தப்பினார்கள். ஓமந்தைக் காடுகளில் இடையாகப் பயணம் செய்து வவுனியாவிற்கு சமீபமாகத் தண்டவாளத்தடியில் மிதப்பார்கள். இதோ எல்லை கடந்தாகிவிட்டது.

புலிகளிடம் அகப்பட்டால், தண்டனை பற்றிச் சொல்லவே வேண்டாம். மரண தண்டனை மிகச் சாதாரணம்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் ஒருவனைப் பிடிக்கிற போது, கையை உதறித் தப்பியோடி காட்டு வழியே மீண்டவனும் இருக்கிறான்.

இது புனர் ஜென்மம்தான்.

இவர்கள் எந்த நாட்டை விட்டு எந்த நாட்டிற்குத் தப்பியோடுகிறார்கள் எனும் கேள்விதான் துக்கமானது. நமது தாய் மண்ணை விட்டு அந்நிய மண்ணிற்கு ஓடுகிறார்கள்.

நான் சொன்ன இரண்டாவது கவிதை இதுதான். **எல்லைக் கடத்தல்**, அதன் தலைப்பு **"...மணற்காட்டுவெளியும் / புதுக்காட்டுச் சந்தியும்/ தாண்டிக்குளமும் தாண்டி / நீள நடந்தேன். / குனிந்த தலை நிமிரவில்லை. / எனது மண்ணில் நிச்சயமற்றுப் போய்விட்ட எனது இருப்பை/ உறுதிப்படுத்த / பிறந்த மண்ணின் எல்லையைக் கடந்தேன்./ இறுதியாகப் பாதங்களில் ஒட்டியிருந்த / செம் மண்ணையும் தட்டியாயிற்று. / செம் மண்ணும் போயிற்று./ எம்மண்ணும் போயிற்றுப் போ"/** (ஔவை)

இவ்வாறே பலர் நீண்ட தூரம் நடையாக நடந்து மீண்டார்கள்.

ஒருவரின் அனுபவம் இது: "எனக்குத் தெரியும். இரண்டு மூன்று நாட்களுள் அகப்படுவது நிச்சயம். புலிகளின் ஒவ்வொரு மட்டமும் கையை விரித்து விட்டது. உளவுப் பிரிவின் முன்னால் ஒரு வரது கதையும் எடுபடாது. இனித் தப்புவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

வேற்றூர் சென்று பல்வேறுகாரணம் சொல்லி பல்வேறு விதமாகச் 'சுத்துமாத்து'ச் செய்து (வழிமுறைகள் பற்றி இதில் எழுதுவது சரியல்ல.) பாஸ் எடுத்தேன். நண்பரை பஸ்ஸிற்கு அனுப்பிவிட்டு புறப்படுகிற நேரம் ஓடி வந்து பஸ்ஸிற்குள் இருட்டான பகுதியில் மூலைக்குள் இருந்தேன். பஸ் புறப்பட்டு விட்டது. நெஞ்சு திக்திக்கென்று. இடையில் சாப்பாட்டிற்கு இறங்கிச் சாப்பிடச் சென்ற போது இருவர் கவனித்துக் கொண்டிருந்தனர். ஒரு பயம். அருண்டவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்.

உண்மையைச் சொல்லுகிறேன் எப்பொழுது தாண்டிக்குளம் தாண்டி ஆமியிடம் வந்தேனோ அப்போது தான் எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது. இனி எனக்கு ஆபத்தில்லை என்று உணர்ந்தேன்.

அவர் அனுபவம் அப்படி.

அதுதான் கொடுமை. எதிரி படையினிடம் செல்வதே நிம்மதியென்று படுகின்றதென்றால் யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற 'போராட்டம் யாருக்கானது? இந்த விடுதலை எவருக்கு?

புலிகளுக்கு கண்டவர்கள் எல்லோரும் துரோகிகள். முன்னர் வேறு அமைப்புகளில் வேலை செய்தவர்கள் யாவரும் சமூக விரோதிகள். அவர்களைக் கைது செய்வதற்கும், சித்திரவதை செய்வதற்கும் கொல்லுவதற்கும் காரணம் இல்லை. மாற்று அமைப்புகளில் இருந்தார்கள் என்பது ஒன்றுதான்.

ஒரு புறம் பார்த்தால் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது யாவரும் வாய்மூடி மௌனியாக இருக்க வேண்டும்.

ஆனால் அதுவும் உண்மையல்ல; வாய்மூடிமௌனியாக இருந்தாலும் விடுகிறார்கள் இல்லையே.

நமது நண்பன் ஒருவரின் கதை இது:

எனக்குத் தெரிய அவர் 1986 இன் முன்னர் மாற்று அமைப்பில் அரசியல் வேலை செய்தவர். 1986 டிசம்பரில் ஜனநாயகம் முற்று முழுதாக மறுக்கப்பட்ட பின்னர், திருமணம், மனைவி பிள்ளைகள் என்பது அவர் வாழ்க்கை.

இரண்டாவது யுத்தம் தொடங்கிய போது, யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வவுனியா என்று மோட்டார், சைக்கிளில் வியாபாரம் செய்தார். சாரக்கட்டுடன், கேரதீவில், சங்குப்பிட்டியில் எத்தனையோ தரம் அவரைக் கண்டிருக்கிறேன்.

அவருடைய மனைவியின் தம்பி (மைத்துனன்) புலிகளைச் சேர்ந்தவர். மைத்துனன் ஒரு முறை தன் அக்காவுடன் கதைத்திருக்கிறான். (நண்பர் பெயர் பாஸ்கரன், இயக்கப் பெயர் விக்ரர்"). இந்த இடத்திலை முந்தி.........

இயக்கத்திலை வேலை செய்த விக்ரர் எண்டவரை தேடுறாங்கள். என்னட்டையும் கேட்டவங்கள். உனக்குத் தெரியுமோ அவனை"?.

பாஸ்கரனுக்கு விளங்கி விட்டது தான் தான் தேடப்படுகிற நபர் என்பது. உடனே தப்ப வேண்டும்.

பாஸ்கரனும் விண்ணப்பம் கொடுத்தான் பாஸ் கிடைக்கவில்லை. ஏதோ விசாரணை என்றார்கள். ஒரு நிமிடம் நின்றாலும் ஆபத்து.

நண்பர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் ஏறிக் காட்டுப் பக்கமாக வந்தார் இராணுவ முகாமை அண்டிய காட்டுப் பிரதேசத்துள் புகுந்தார். சாதாரண தொழிலாளியாக வேஷம் போட்டு அங்குள்ள தொழிலாளிகளுடன் கள்ளுக் குடித்து நண்பரானார். இராணுவ முகாமின் வழிகளைக் கண்டு பிடித்தார்.

மூன்றாம் நாள் நன்கு குடித்து விட்டு, ஒரு போத்தலில் கள்ளும் எடுத்துக் கொண்டு, இராணுவ முகாமை நோக்கிக் கத்திக் கொண்டு போனார். எது நடந்தாலும் சரி என்பது போல.

இராணுவத்தினர் அவரைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்று விசாரித்த போது அவர் நிலைமை புரிந்தது. இராணுவத்தினர் அவரை உபசரித்து, கொழும்புக்கு அனுப்பினர்.

அவர் பின்னாலுள்ள சோகம் பற்றி இங்கு ஒன்றும் குறிப்பிடவில்லை. அவர் மனைவி, பிள்ளைகள், மண், நாடு, என அவர் வாழ்வின் உயிர்க் கூறுகளை இழந்து போனார்.

இவை சிலச் சில உதாரணங்கள்

யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையில் இவற்றிற்கும் பங்கு உண்டு.

புழுக்கம் நிறைந்த யாழ்ப்பாணம்/பல்வகையிலும்-புழுக்கம். **வெயிலோ புழுங்கும்** வெயில் மாத்திரமல்ல. மனமும் புழுக்கம். மனமும் முகமும் இருண்ட புழுக்கம்.

ஆனால் இவற்றிலிருந்தும் கூட யாழ்ப்பாணத்து மக்கள் வாழ்கிறார்கள். அதுவே முக்கியமானது.

**அருணா பரமேஸ்வரன்**

அவ்வளவு தான்.

இக்கட்டுரைத் தொடரை இத்துடன் முடித்துக் கொள்ளலாம்.

நிறைவாக, இக்கட்டுரை 1990இன் பின்னரான இன்றைய நிலையின் சில அம்சங்களை கோடிட்டுக் காட்டியது. இவ்வளவும் தான் என்றல்ல. இவைதாம் எமக்குக் கிடைத்த சில அனுபவங்களின் கூறுகள்.

ஒரு புறம் சிறீலங்காவின் இனவாத அரசினால் யாழ்ப்பாணத்து மக்கள் அல்லற்படுகிறார்கள்; துயரடைகிறார்கள்; இறந்து படுகின்றனர்.

→11

## நாலு வார்த்தை எழுத விடு

சூர்யா

### புது இரத்தம்

தமிழுக்குப் புதிய வடிவமாகச் சோலைக்கிளியின் கவிதைகள் விளங்கின.

மறுபுறத்தில் ஒரு வினா அல்லது கவலை எழுகிறது.

சோலைக்கிளி தொடர்ந்தும் இவ்வாறான கவிதைகளைத் தான் படைப்பாரானால், சோலைக்கிளியின் கவிதை தன் உயிரை விட்டு விடுமா? அல்லது சோலைக்கிளி இவ்வளவும் தானா?

ஏனென்றால், படிமங்களே கவிதையாகி விடுகிற, ஒரு வகை ஆபத்து சோலைக்கிளியில் காணப்படுகிறது. கவிதையில் ஒரு அம்சமாகவே படிமம் கையாளப்பட வேண்டும். போகிறபோக்கில் படிமங்கள் அதிகம் கவிதையில் வேண்டப்படுகிறது. அது கூடப் பரவாயில்லை. ஆனால் படிமமே கவிதையாகிவிட முடியாது.

படிமக் கவிதைக்கு ஒரு உதாரணமாகப் பின் வரியை முன்னர் குறிப்பிடுவதுண்டு. **"பூமித்தோலில்/ அழகுத் தேமல்/ பரிதிபுணர்ந்து/ படரும்விந்து** ஆனால் இத்தகைய படிமம் கவிதைக்கு உதவாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

இது ஒரு வகையில் அணியிலக்கணங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது.

தமிழில் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற **உள்ளுறை உவம அணி** தமிழிலக்கியத்தின் ஆரம்பத்தில் காணப்பட்டது. பின்னரும் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை. உவமை, உயர்வு நவிற்சி, தன்மை நவிற்சி, தற்குறிப்பேற்றம், உருவகம் எனும் அணிகளில் தமிழில் உலா வந்தன. (தயவு செய்து, இவ்வணிகள் பற்றிய விளக்கத்தைத் தமிழிலக்கணகாரரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்)

மேலே குறிப்பிட்டவற்றுள் உருவக அணியை ஒத்திருக்கிறது படிமம். படிமத்தின் பல்வேறு அம்சம் உருவக அணியென்றே சொல்ல வைக்கிறது. மேற்குறிப்பிட்ட அணிகள் 10ஆம் நூற்றாண்டுகளில் தமிழிலக்கியத்தில் பெரிதும் பயிலப்பட்டதெனின், படிமம் எனும் அணி 20ம் நூற்றாண்டிற்குரியது எனலாம்.

ஆயினும், படிமம் கலந்து வருகிற கவிதைகளில் ஈழத்துக் கவிதைகள், வேறுபட்ட தரத்தினது. உதாரணமாக **விஜயேந்திரனது** கவிதை வரி ஒன்று. **விழியின் மணியில் / தீப்பொறிஏந்தினேன்,**

இங்கு படிமம் சரியாக உட்கலந்து வரும் அனுபவம் காணப்படுகின்றது.

இவைகளிலிருந்தும் கூடச் சோலைக்கிளியின் படிமத்தன்மை வேறுபடுகின்றது. சர்ரியலிஸத்தடன் கூடிய படிமம் சோலைக்கிளியின் கவிதையில் உட்பொதிந்து வருகிறது. இது சரியானது.

ஆனால் இதுதானா தொடர்ந்தும் நிகழப்போவது? சோலைக்கிளியின் கற்பனையாற்றல், கவித்திறன் பற்றி யாருக்கும் சந்தேகம் எழல் அநாவசியம். ஆனால் அவர் கவிதை குறித்து எழுகிற கவலையும் அவசியம். சோலைக்கிளி தன் கவி உருவத்தை மாற்ற முயற்சிக்கலாம். அவ்வாறு மாற்றுதல் நன்று.

இது பணிவுடன் கூறுகிற விடயம்.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறித்தஎம்.**எல்.எம். அன்ஸார் என்.ஆத்மா, எஸ்.எச்.எஸ்.கதீர்** போன்றோரிடமும் சோலைக்கிளியின் அம்சங்களைக் காண முடிகிறது. ஆனால் அது தோல்வி என்றல்ல. அதுவே தொடர்ந்தால் தான் சில கேள்விகள் எழலாம். ஆனால் இதனைச் சோலைக்கிளி ஒரு தலைமுறையை உருவாக்கிக் கொள்ளுகிறார் என்றே பொருள் கொள்ளலாம்.

**'வயிறு கிழி த வேப்பைமரம்', அவளைப் பற்றிய கோடை மழைக் கவிதை** போன்ற தலைப்புக்களைக் கவனியுங்கள். **கதிரையில் வந்தமர்ந்த பூமரம், மாடு சப்பிய சூரியன், காகம் கலைத்த கனவு** எனும் சோலைக்கிளியின் தலைப்புகளுடன் ஒப்பிடுகிறபோது இது கவனமாகத் தெரிகிறது.

ஆனால் இது தவிர்க்க முடியாதது என்றும் தெரிகிறது. ஆரம்பத்தில் பாரதியாரின் பாதிப்பு பின்வந்தோரிடமும், **மகாகவியின்** பாதிப்பு அவர் பின்வந்தோரிடமும், **சேரனின்** பாதிப்பு பிறகு வந்தவர்களிடமும் தெரிந்தது.

**"கோடாரியால் முழங்காலைக் கொத்திவிட்டாய்/ எனது இடுப்பை வாளின் பற்கள் கடித்து விட்டன/ வயிறு கிழிந்து கிடக்கிறேன் சவம் போல/** எனும் அன்ஸாரின் வரிகளும், **"நாங்கள் எங்கள் பழைய காதலிகளைக் கழுவிக்/ கொண்டிருக்கிறோம். நண்பர்களில் ஒருவன்/ சொன்னான் 'அவளுக்குப் புரையேறும்' என்று"/** எனும் கதீரின் வரிகளும், **"எதிற் கொழுவிப் பீத்தலாகினவோ இம்/ முகிற்பைகள்"** எனும் **ஆத்மாவின்** வரிகளும், படிமத்தைத் தொட்டு நிற்கின்றன. சோலைக்கிளியின் பாதிப்பில் தோய்ந்து வருகின்றன.

ஆனால் முழுமையாகவும் அப்படிக் கூற முடியவில்லை. கற்பனையாற்றலும் இவர்களிடம் அச்சொட்டாக விழுகின்றது.

இந்த இளையவர்களிடம் கவிதை என்ன மாதிரி அழகாக வருகின்றது. **பெய்யாதோ மாரி என அவாவ நான் தொடங்கிற்றே சராலெனத்/ தலையினிலோர் நீர்க்குண்டை வீழ்த்தி"/** என **ஆத்மாவும், "கவலை மறந்து கிடந்த எங்களைப பரவலாக"/ விழுந்த மழைத்துளி வீட்டுக்கனுப்புகிறது"/** என்று கதீரும் **"என்னைக் கிழித்து ஜன்னல் ஆக்கு/ கட்டில் நிலை கதவு என்றும்/ குந்தியிருக்கும் எனது ஆவி"/** என **அன்சாரும்"/ வண்ணாத்தும் பூச்சியே எனக்கு வானம்தா/ அதில் முழுக்க மேகம்வை/ சந்திரனைச் சொட்டுக்கிள்ளிவை/ நிலவொளியில் சிறிது ஊற்று/ என் முகத்தில் குந்தியிருந்து நடைபழகு"/** என **நற்பிட்டி முனை பளீலும்** கவிதையில் அற்புதம் விளைவிக்கிறார்கள்

இவர்கள் புது இரத்தத்தால் உருவானார்கள். ஆதலினால், இவர்களிடமிருந்தே புதிய கவிதை பிறக்கிறது. இவர்களிலும் **என். ஆத்மா, நற்பிட்டிமுனை பளீல்** ஆகியோரிடம் படிமம் அளவாக, அழகாகக் கையாளப்படுகிறது.

**நட்சத்திரன் செவ்விந்தியன்** இக்காலத்தைய ஒரு பிறப்புத்தான். மேற்கூறியவர்களிலிருந்தும் சற்று வேறுபடுகிறது இவர் கவிதை. இவரிடம் சோலைக்கிளியின் பாதிப்பு காணக்கிடைக்கவில்லை. இந்த விளைச்சல் வேறொரு மண்ணிற்குரியது. இவர் கவிதை அந்த மண்ணின் மணத்தை நுகர்ந்து கொண்டு வருகிறது. **ந.செ** இன் கவிதை முற்றிலும் வேறு உருவம், புதிய வடிவம். சில வரிகளில் அவர் பேனா புதுமை ஊற்றிக்கொள்கிறது. இது சேரன் பரம்பரையின் தொடர்ச்சியோவெனில் அப்படியும் அல்ல என்று தோன்றுகின்றது. இது புதிய பிறப்பு புது இரத்தம். **இளவேனிற் காலம்-1991** எனும் அவரது கவிதை இப்படி முடிகிறது. **"மம்மல் உரசிக்கொண்டு போகிறது/ இருட்டில் தார்**

→11

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டாவின் புஸ்வாணம்

எம்.என்.ராஜன்

ஒன்றரை நூற்றாண்டுக்கு மேல் உழைத்து உழைத்து உருக்குலைந்த மக்களின் வாழ்க்கையை மேன்மேலும் நாசமாக்கும் எண்ணத்துடன் இருபத்திரண்டு பல்தேசிய தனியார் கம்பனிகளிடம் அனைத்து பெருந்தோட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கையானது இம்மக்களது கலை கலாசாரங்களையும், இவர்களது தேசிய தன்னடையாளங்களையும் சிதைக்கும் நோக்குடன் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இம்மக்களது வாழ்க்கை முறையானது இன்று மிக மோசமான இலக்கை நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றது.

தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டு ஒரு வருடம் கூட பூர்த்தியடையாத நிலையிலேயே மக்கள் மனங்களில் பல்வேறு வகையான அதிருப்திகள் எழத் தொடங்கியுள்ளன. இவ்வாறு ஒரு நிலைமை தனியார்மயத்தின் மூலம் ஏற்படும் என்று மலையகத்தில் முற்போக்கு ஜனநாயக சக்திகள் ஏற்கனவே ஆருடம் கூறியிருந்தன. ஆனால் இன்று மலையகத்தில் தனக்கு நிகரில்லாத் தலைவர் என்று கூறும் தலைவர்களும் ஐம்பது வருடங்களுக்கு மேல் மலையகத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்ட தொழிற்சங்க வாதிகளும் இதனைச் சற்றும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறுவதை விட தமது நலன்களினடிப்படையில் இதனை ஏற்கவும் செய்தார்கள் என்பதே பொருத்தமானதாகும்.


மாறாக இவர்கள் தனியார்மயப்படுத்தப்பட்டால் அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையில் ஒருவகையான மாற்றம் ஏற்படும் என்றும் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை தங்களது வாழ்க்கையில் எதுவித முன்னேற்றத்தையும் கண்டிராத மக்களுக்கு இம்மாற்றம் அவசியம் என்றும் இதனாலேயே நாம் தனியார் மயமாக்கலை ஆதரிக்கின்றோம் என்றும் தொண்டமான் போன்ற தொழிற்சங்கவாதிகள் தெரிவித்திருந்தனர்.

ஆரம்பத்தில் தோட்டங்களில் கட்டாயமாக 26நாட்கள் வேலை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. வேலையாட்களின் தொகை எவ்விதத்திலும் குறைக்கப்பட மாட்டாது என்றும் வேலை வழங்காவிட்டாலும் 26 வேலை நாட்களுக்கான சம்பளம் கட்டாயம் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. ஆனால் இன்று எத்தனை தோட்டங்களில் மேற் குறிப்பிட்டது போன்று சம்பளம் வழங்கப்படுவது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

பெரும்பாலான தோட்டங்களில் 15,18நாட்கள் மாத்திரம் வேலை வழங்கப்படுவதோடு, 55 வயது நிரம்பிய ஆனால் வேலை செய்யும் ஆற்றல் படைத்த ஒருவருக்கு கட்டாய பென்சன் வழங்கப்படுகிறது. அதேவேளை 14 வயது நிரம்பியவர்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ள வழமையாகக் கையாண்ட முறை தற்போது கைவிடப்பட்டுள்ளது. இன்று வேலைக்குப் புதிதாக ஆட்களை அமர்த்துவது மிகக் குறைவாக காணப்படுகின்றது. தவிர்க்க முடியாமல் சிலரை வேலைக்கு அமர்த்தினாலும் அவர்களுக்கு நிரந்தரமான பெயர்ப்பதிவு இடம்பெற மாட்டாது. இது ஒரு வகையில் மறைமுகமான ஆட்குறைப்பு என்றால் அது மிகையாகாது.

அத்தோடு அண்மையில் வலப்பனை பகுதியில் மஹாகுடகல எனும் தோட்டத்துத் தேயிலை தொழிற்சாலை தாய்வான் நாட்டுக் கம்பனியினரின் மேற்பார்வையில் கொண்டு வரப்பட்டுள்ளது. அதற்கு (THAIWAN GREEN TEA LTD) என்று பெயரும் சூட்டப்பட்டுள்ளது . இங்குள்ள உத்தியோகத்தர்கள் அனைவரும் தாய்வான் நாட்டைச் சார்ந்தவர்கள். சாதாரண தொழிலாளர்களாக தோட்டத்தில் உள்ளவர்களை வேலைக்கமர்த்தி அவர்களுக்கு அவர்களது சின்னம் பொறிக்கப்பட்ட சீருடைகளை வழங்கி மூன்று குழுக்களாகப் பிரித்து வேலைக்கமர்த்தியுள்ளனர். இவர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் எதுவிதமான சம்பந்தமும் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இக் கம்பனியினரின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு வெளியேறினால் அங்கு வேலை செய்யும் ஊழியர்களின் நிலைமை என்னவாகும் என்புது கேள்விக்குறியாகவுள்ளது. இவர்கள் அனைவரும் நிர்கதியாகி நடுத்தெருவில் வேலையற்று அலைவர் என்பது மட்டும் உண்மை.

இவ்வாறு பல்தேசிய கம்பனிகளது செயற்பாட்டால் ஏற்படும் அபாயத்துக்கு மலையக தொழிற்சங்கங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? இவற்றை தொழிற்சங்கங்கள் கண்டும் காணாதது போல் இருப்பதன் காரணம் என்ன? என்பது இன்னும் விடை காணப்படாத வினாக்களாக உள்ளது.



தோட்டங்களைத் தனியார்மயப்படுத்திய பின்பு அனேக தோட்டங்களில் மாற்றுப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கரும்பு, அன்னாசி, கிழங்கு, கரட் போன்ற பயிர்கள் இன்று பெரும்பாலும் பயிரிடப்படுகின்றது. இவற்றின் மூலம் இப்பகுதி மக்களது வேலைநாட்களை குறைப்பதோடு, 1977ம் ஆண்டுக்குப் பின்பு தெளிவாக கண்டு கொள்ளப்படாத தனித்துவ தன்னடையாளங்கள் அனைத்தையும் சிதைப்பதற்கான நடவடிக்கைகளாகவுமே இவற்றை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

தனியார்மயமாக்கல் இடம்பெற்றால் மேற் குறிப்பிட்டது போன்று தாக்கங்கள் இம் மக்கள் மத்தியில் ஏற்படும் என்பதை முற்போக்கு சக்திகள் தெளிவாக ஆரம்பம் முதலே கூறி வந்த போதிலும் அண்மையில் தான் ஆளும் வர்க்கத்தின் கைக்கூலிகளான இரண்டு தொழிற்சங்கங்கள் இணைந்து ''தனியார் மயமாக்கல் கடந்த காலங்களில் மக்களின் மனதில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது எனவே இத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்'' என்று கூறியுள்ளன.

ஆனால் உண்மையில் மலையக மக்களின் நலன்களில் உள்ள அக்கறை காரணமாகவே இவ்வாறு கூறியுள்ளனவா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது. ஏனெனில் தனியாருக்கு வழங்கப்பட்ட தோட்டக்குத்தகை 5 வருடத்திலிருந்து 30 வருடங்களாக நீடிக்கப்படுவது பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும், தொழிலாளர்களுக்கு 300நாள் வேலைக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்றும், இன்னும் பல கோரிக்கைகளுடன் புறப்பட்ட அமைச்சர் தொண்டமான் இப்போது இவற்றைப்பற்றி எதுவுமே பேசாது ''ஐ.தே.கவுக்கும் இ.தொகாவுக்கும் இடையே அடுத்தது வருமளவில் நல்லுறவு ஏற்பட்டுவிடும். சில அரசாங்க அதிகாரிகளே இ.தொ.கா-ஐ.தே.க. உறவு சீர்குலையக் காரணமாயிருந்தனர். தற்போது இவை பற்றிப் பேசி வருகிறோம்'' என்று கூறியிருக்கிறார்.

ஆக, தொண்டமானுக்கோ, வேறெந்த தொழிற்சங்கங்களுக்கோ மலையக மக்கள், அவர்களது நலன்கள் என்பவை குறித்து எந்த அக்கறையும் எப்போதும் இருக்கவுமில்லை. இனிமேல் இருக்கப் போவதுமில்லை.

எனவே ஒன்றரை நூற்றாண்டாக அடக்குமுறைக்கும் சுரண்டல் முறைக்கும் ஆளாகிய மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சரியான அரசியல் அணுகுமுறையின் மூலம் தீர்வுகள் முன்வைக்கப்படுவது அவசியம். தனியார் மயமாக்கல் வெறுமனே இம்மக்களை மேலும் மேலும் தனிமைப்படுத்தி மலையக இனத்தினைச் சிதைக்கவே வழிவகுக்கும். சரியான அரசியல் மார்க்கத்தால் சகல முற்போக்குச் சக்திகளும் ஐக்கியப்பட்டுப் பொதுத் தீர்வினை முன்வைக்கும் பொழுது இப்பிரச்சினை ஓரளவாவது தீர்க்கப்படலாம். இப்பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினை தேசிய சர்வதேசிய நிலைமைகளில் மலையக மக்களது பிரச்சினைகள் நோக்கப்படல் வேண்டும். அவர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும். தொண்டமான் போன்றவர்கள் ஒரு போதும் மலையக மக்களின் நலன்களிலிருந்து இப்பிரச்சினையை அணுகிப் போவதில்லை என்பதும் மீளவும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

## மௌன இடிகள்

கண்களாலும் காதுகளாலும்
பூக்களைப் பிரசவிக்கும்
மரம் நான்.
அலரி இல்லை
வாகை அதுவுமில்லை;
முல்லை இல்லை
பூவரசை இல்லை! இல்லை!
என்ன சாதி மரமென்று
எனக்கும் தெரியவில்லை
இலைகளை ஈனுகிறேன்.
வேரை
விரும்பிய பக்கமெல்லாம் அனுப்புகிறேன்.
கொப்புகளை யாரும்
தறிக்காத உயரத்துக்கு படர விடுகிறேன்.
போர்செய்ய வரும் புயலுடன்
பலதடவைகள் ஒப்பந்தம் செய்துள்ளேன்
கறையான்களுக்கும்
கிளிகளுக்கும்
காகங்களுக்கும்
நம்பிக்கைக்குரிய மரம் நான்.
தூக்கம் எனக்கு
இலகுவில் வருவதில்லை;
காட்டெருமை,
விடமுள்ள புடையன்
என்றெல்லாம் வரும் உறவினர்களிடம்
அடிக்கடி நான் வலியுறுத்துவது-
வயலை அழிக்காதீர்கள்
கள்ளமுட்டை குடிக்காதீர்கள் என்பதையே.
சினமுள்ள சில மரங்களிடம்
ராப்பிச்சை கேட்டு வரும்
பறவை இனங்களை
நான் வெறுப்பது உண்மையே!
பக்கவாட்டில்
ஒன்றா இரண்டா..
ஒருமுறை
வல்லாரை இனம்
என் எல்லையில் குடியிருப்பதை எதிர்த்த
சிலகுடி சனங்கள்...
பின்னர்
ஆதரவோடு தழுவி ஆய்ந்து கொண்டு போனதை
எண்ணினால்
அவர்கள் முகங்களை
அழிக்க வேண்டும் போல ஆத்திரம் பொங்கும்.
பொறுமை மேலிடும் போதுதான்
நான் மெல்ல அசைந்து கொள்வது.
குந்தி மலம் கழிக்கும் தறுவாயிலும் கூட
எட்டி உதைக்கும்
சில புல்லினங்கள்...
ஒரு சொட்டு மழையும்
என்னிலே பெய்யக் கூடாதென்று
வானெங்கும் பிரகடனம் செய்து
துண்டுப்பிரசுரம் எறியும்
ஆகாய மரங்களும்
எனது வியர்வையில் நனையும் போது
கம்பளி ஆடைகளைத் தேடுவதுண்டு.
கட்டையாகவும்
விறகுகளாகவும் மாறுகின்ற நேரம் வருமுன்
வானத்தைப் பிளந்து கொண்டு
மறைந்து விடு என்கிறது மனம்.
மௌனமாக உள்ளேன்;
ஈஸா நபி,
இறங்கும் வரை.

றிஸ்வியூ முஹம்மத் நபீல்,
கல்முனை

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டா விவகாரம்: இலங்கை முஸ்லீம்கள் பெற வேண்டிய படிப்பினைகள்!

மருதூர் பஷீத்

அமைச்சர் தொண்டமானுக்கும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலை, மீண்டும் ஒருமுறை பௌத்த-சிங்களப் பேரினவாத உணர்வலைகள் கொந்தளித்துக் கிளம்பும் சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது. சிங்கள நபர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பத்திரிகைகள், மத அமைப்புகள் பௌத்த-சிங்கள நலன் பேணும் நிறுவனங்கள்... என்பவற்றிடமிருந்து மிகத் தீவிரமான உணர்வுகள் கிளம்பியிருக்கின்றன. மலையக மக்கள் சம்பந்தமாக அமைச்சர் தொண்டமான் முன்வைத்திருக்கின்ற கோரிக்கைகளும் அவை தொடர்பாக, ஐ.தே.கவுடனான அரசியல் உறவுகளில் ஏற்பட்டிருக்கின்ற விரிசல்களும் பௌத்த-சிங்களப் பேரினவாத சக்திகளினால் இத்துணை தீவிரத்துடன் பிரச்சாரப்படுத்துவது குறித்து ஒரு சிறுபான்மைச் சமூகம் என்ற வகையில், இலங்கை முஸ்லீம்கள் அக்கறையின்றி இருக்க முடியாது.

அமைச்சர் தொண்டமானின் அரசியல் நிலைப்பாடுகள் குறித்தோ, பெரும்பான்மை இனக் கட்சிகளுடன் இ.தொ.கா ஏற்படுத்தக்கூடிய உறவுகள் குறித்தோ கருத்துத் தெரிவிக்கும் நோக்கத்தை இக் கட்டுரை கொண்டிருக்கவில்லை. பதிலாக, பல்லின மக்கள் ஒரே அரசில் வாழ்கின்ற ஒரு ஜனநாயக நாட்டில் ஒவ்வொரு இனத்திற்குமுள்ள அரசியல் உரிமைகள் குறித்த அக்கறையையே இக் கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

அமைச்சர் தொண்டமானும் இ.தொ.காவும் இன்று முன்னெடுத்துள்ள அரசியல் தீர்மானங்கள் மற்றும் கோரிக்கைகள் குறித்து எழுப்பப்பட்டிருக்கின்ற கண்டனக் குரல்களில் கவனத்தில் கொள்ளவேண்டியவை என பின்வருவனவற்றைக் கூறலாம்: மலையக மக்களின் உரிமைகள் குறித்து மட்டும் பேசுவதன் மூலம் தொண்டமான் இந் நாட்டிலுள்ள ஏனைய மக்களின் உரிமைகளை உதாசீனப்படுத்துகிறார். இதுவரை காலமும் ஐ.தே.க அரசாங்கத்துடன் இணைந்திருந்து அளவுக்கதிகமான சலுகைகளை மலையக மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த தொண்டமான் இப்போது எதிர்க் கட்சிகளுடன் இணைந்து இன்னும் அதிகமான சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முயல்கிறார். தோட்டத் தொழிலாளர்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் நோக்குடன் தொண்டமான் முன்வைத்திருக்கின்ற கோரிக்கைகள் தோட்ட நிர்வாகங்களினால் நிறைவேற்றப்பட முடியாதவை. பிரிவினைக்கெதிராக அரசு போராட வேண்டிய இக்கட்டான நிலையில் தொண்டமானின் இன்றைய செயற்பாடுகள் அரசைப் பலவீனப்படுத்தும் என்றவாறும் இக் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இக் கண்டனங்களின் தர்க்க ரீதியற்ற தன்மையையும் அவற்றில் அடங்கியுள்ள பௌத்த-சிங்கள பேரினவெறியையும் அடையாளங் காணத் தவறுவது, ஒரு சிறுபான்மைச் சமூகம் என்ற வகையில் இலங்கை முஸ்லீம்களுக்குப் பாதகமாகவே அமையும்.

இந்நாட்டின் அரசியல் சாசனம் இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இன, மத, கலாசார, பிரதேச வேறுபாடுகள் இன்றி சமஉரிமையுள்ளவர்கள் என்று குறிப்பிடுகிறது. இந்த அரசியல் சாசனத்தை ஆதாரமாகக் கொண்டுதான் சிங்கள அரசியல்வாதிகளும், சிங்கள புத்திஜீவிகளும் இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்களுக்குச் சகல உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்று உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்த அரசியல் சாசனத்தை ஆதாரமாகக் கொண்டால், தொண்டமானின் அரசியல் செயற்பாடுகளோ அல்லது அவரது கோரிக்கைகளோ எவ்விதத்திலும் பிரச்சினைக்குரியதாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் எமது அரசியல் சாசனத்தின் பிரகாரம், இனரீதியாக அரசியல் கட்சிகள் அமைத்துச் செயற்படுவதோ, அல்லது தொழிலாளர் பிரச்சினைகளுக்காகக் கோரிக்கைகள் எழுப்புவதோ தடை செய்யப்படவில்லை.

பலஇன மக்கள் ஒரே அரசில் வாழ்கின்ற சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கின்ற சகல ஜனநாயக நாடுகளிலும் ஒவ்வொரு சிறுபான்மை இனமும் தனக்கென தனியான அரசியல் கட்சிகளையும் சொந்த அரசியல் பிரதிநிதிகளையும் கொண்டிருப்பது இயல்பான அம்சமே. எமது நாட்டைப் பொறுத்த வரையில் இந்தப் பொதுவான நிலைக்கும் ஒருபிடி மேலே போய், அரசியல் சாசனமானது **பெரும்பான்மை இனத்தின் மதத்தை** -பௌத்த மதத்தை - அரசமதமாக நிறுவியிருக்கிறது. **பெரும்பான்மை இனத்தைப் பாதுகாக்கவென** "சிங்கள பாதுகாப்பு இயக்கம்" (SAS) "ஹெல உருமய" ... போன்ற நிறுவனங்களும் கூட இனவாத சக்திகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பெரும்பான்மை சிங்கள இனத்தின் மதத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கென சட்டமும், நிறுவனங்களும் இருக்கும் போது தொண்டமானும் அவரது கட்சியும், தமது **சொந்த** சிறுபான்மை இனத்தின் உரிமைகளுக்காகச் செயற்படுவதில் எந்தத் தவறும் இல்லை.

பல இனமக்கள் ஒரே அரசில் வாழ்கின்ற சூழலில், அரசியல் சாசனமானது சகல இனங்களினதும் சமஉரிமை பற்றி எவ்வளவுதான் எழுத்தில் கொண்டிருக்கின்ற போதிலும் நடைமுறையிலோ பெரும்பான்மை இன மக்களுக்குச் சாதகமாகவே நிலைமைகள் உருவாக்கப்படுகின்றன. ஆட்சிமன்றத்தில் கொண்டுள்ள தமது பெரும்பான்மை, தமது மொழியின் பயன்பாட்டு ஆதிக்கம், அரச மற்றும் நிர்வாகத்துறைகளில் தமது எண்ணிக்கை ரீதியிலான மேலாண்மை... எனப் பல காரணிகளினால் பெரும்பான்மை இனமக்களுக்குச் சாதகமான நிலைமைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்நிலையில் சிறுபான்மை இனங்கள் தமது சொந்த அரசியல் நிறுவனங்களுக்கூடாக தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் போராடுவதன் மூலமே தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றன. நிலைமை இவ்வாறிருக்க அரசியல் சாசனமும், சமூக, அரசியல் நிறுவனங்களும் வெளிப்புடையாகவே பெரும்பான்மை இனத்திற்கு ஆதரவாக அமைந்திருக்கின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் சிறுபான்மை இனங்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவது இன்னும் அழுத்தம் பெறுகிறது.

இந்தப் பின்னணியில், மலையக மக்களின் ஆதரவினால் **மட்டுமே** அரசியல் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்ற தொண்டமானும், இ.தொ.கா. வும் அந்த மக்களின் உரிமை குறித்து **மட்டுமே** கோரிக்கை எழுப்புவது முற்றிலும் நியாயமே. சிங்கள அரசும், சிங்கள கட்சிகளும், மற்றும் சிங்கள நிறுவனங்களும் மலையக மக்களின் அவல நிலை குறித்து அக்கறை கொண்டிராத நிலையில், அம்மக்களிடம் அரசியல் ரீதியில் கடமைப்பட்டிருக்கின்ற தொண்டமானும், இ.தொ.கா. வும் அவர்களுக்காக மட்டுமே பேசுவது எவ்விதத்திலும் தவறாக மாட்டாது.



இதுவரை காலமும் ஐ.தே.க. அரசாங்கத்துடன் இணைந்திருந்து, அளவுக்கதிகமான சலுகைகளை மலையக மக்களுக்குத் தொண்டமான் பெற்றுக் கொடுத்திருக்கிறார் என்பது அப்பட்டமான வரலாற்றுப் புரட்டு. 150 வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் மிகக் கடினமான இடங்களில் வாழ்ந்து, அவற்றை நாட்டின் பொருளாதார முதுகெலும்பாக மாற்றியமைத்த இந்த மலையக மக்களின் அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் இடையே பெரிய வேறுபாடு எதையும் நாம் காணமுடியாது. இன்றுவரை திருத்தப்படாத அதே லயன்; அதே சாக்குக் கம்பளம்; அதே வறுமை; நிராதரவாக விடப்படும் வயோதிபம்... என 150 வருடங்களுக்கும் மேலாக எவ்வித மாற்றமுமின்றி நவீன அடிமைகளாக இந்த மலையக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த துயர மிக்க வரலாற்றில் இவர்களுக்குக் கிடைத்துள்ளதெல்லாம் அரைகுறை பிரஜாஉரிமை ஒன்றுதான். எனினும் இந்த பிரஜாஉரிமையை வழங்கியதற்காக இந்நாட்டின் சிங்கள அரசு பெருமைப்படுவதற்கு எதுவுமே இல்லை. ஒரு வெளிநாட்டுப் பணக்காரன், இந் நாட்டில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாகத் தொழில் செய்தாலே அவனுக்குப் பிரஜாஉரிமை வழங்கலாம் என சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில், 150 வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் அனைத்து வளர்ச்சிகளுக்கும் காரணமாக அமைந்த இந்த மலையக மக்களின் **ஒரு பகுதியினருக்கு** இப்போது தான் பிரஜாஉரிமை வழங்கப்பட்டிருக்கின்றது என்பது அவர்களுக்குக் கிடைத்திருக்கும் சலுகையல்ல; மாறாக இந்நாட்டின் பிரஜைகள் என்ற தமது உரிமையை இதுவரை காலமும் அனுபவிக்க முடியாமல் பௌத்த-சிங்கள பேரினவாதத்தினால் அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே உண்மை.



தொண்டமானும் இ.தொ.கா.வும் தமது மக்களின் அனைத்து உரிமைக்களுக்காகவும், சிறந்த வாழ்க்கை நிலைமைகளுக்காகவும், உத்தரவாதமுள்ள வேலை நிலைமைகளுக்காகவும் இப்போதல்ல; எப்போதோ போராடியிருக்க வேண்டும். ஆனால் அவர்களின் சந்தர்ப்பவாத அரசியலும், தமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும் முதன்மைப்படுத்தாத சுயநல நோக்கங்களும் உறுதியாகப் போராட முடியாமல் அவர்களைத் தடை செய்கின்றன. எனினும் மக்கள் தமது உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் போராட்டங்களைத் தாமே துவக்கும் போது, சந்தர்ப்பவாதத் தலைமைகள் கூட மக்களைப் பின் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதற்கு, தொண்டமானும், இ.தொ.கா. வும் காலந்தாழ்த்தியாவது எடுத்திருக்கின்ற இந்த முடிவுகள் சிறந்த சான்று.

இந்நாட்டிலுள்ள சகல மக்களுக்காகவும் இல்லாமல், மலையக மக்களுக்காக மட்டும் பேசுவதால் தொண்டமான் தவறிழைக்கிறார் என்று கூறுபவர்கள் உண்மையில் இந்த லட்சக்கணக்கான மலையக மக்களின் வேலைநிலைமை மற்றும் வாழ்க்கைநிலைமைகள் குறித்து, தாம் எவ்வித அணுகுமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்? வரலாற்று ரீதியாக நோக்கினால், இந் நாட்டிலுள்ள அனைத்து மக்களிலும், மிக மோசமான வாழ்க்கை நிலைமைகளையும், கடினமான வேலை நிலைமைகளையும் அனுபவித்து வருகின்றவர்களாக இந்த மலையக மக்களே இருக்கின்றார்கள். இவர்களை **இந்த நாட்டின் பிரஜைகளாகக்** கருதுகின்ற எந்தவொரு சராசரி மனிதனும் கூட, இவர்கள் அனுபவிக்கின்ற இந்தத் துயரம் குறித்து அனுதாபம் கொள்வதே நேர்மையான தார்மீக வெளிப்பாடாக இருக்கும் இதற்கு மாறாக இந்த சிங்கள பிரதிநிதிகளோ மலையக மக்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்துவதற்காக இ.தொ.காவினால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கைகள் தோட்ட நிர்வாகங்களினால் நடைமுறைப்படுத்த முடியாதவை என்று வாதிடுகிறார்கள். இதன் மூலம் இவர்கள் பல லட்சக்கணக்கான **இந்த நாட்டு** மலையக மக்களின் நலன்களை விட, 22 தனியார் கம்பனிகளின் நலன்களில் அக்கறை கொள்பவர்களாகத்தான் தம்மை வெளிப்படுத்துகிறார்கள். மக்களின் வரிப்பணத்தில் இருந்து தோட்டங்களைச் சீரமைக்கவென பெற்ற பல கோடிக்கணக்கான ரூபாய்களை அத்தகைய சீரமைப்புகளுக்காகச் செலவிடாமலும் தோட்டங்களிலுள்ள மரங்களை வெட்டி விற்பதன் மூலமும், நாட்டின் தேசிய செல்வத்திற்கும், சுற்றாடலுக்கும் பெரும் சேதத்தை விளைவித்து வருகின்ற இந்தத் தனியார் கம்பனிகளுக்காகப் பரிந்து பேசுவதன் மூலம், இவர்கள் தமது சொந்த மக்களையே கைவிட்டு விடுகிறார்கள்.

**பிரிவினைக்கு எதிராக போராட வேண்டியிருக்கின்ற இக்கட்டான சூழலில் (பூநகரி தாக்குதலின் விளைவாக இந்த இக்கட்டான நிலை தோன்றியிருக்கின்றது) தொண்டமான், ஐ.தே.க. அரசாங்கத்துடனான உறவை முறித்துக் கொள்வது,** இந்தப் போராட்டத்தைப் பலவீனமடையச் செய்யும் என்று இந்தச் சிங்களப் பிரிவினர் வாதிடுகிறார்கள். பிரிவினைக் கோரிக்கை என்பது, ஒரு சிறுபான்மை இனத்தின் அரசியல் உரிமைகளில் உயர்ந்த கோரிக்கை; பெரும்பான்மை இன ஆதிக்கமுள்ள அரசின் கீழ் வாழ முடியாத சூழ்நிலையின் விளைவாக எழுகின்ற கோரிக்கை இது. இங்கு தமிழ் மக்களிடையே நிலவுகின்ற பிரிவினைவாதத்தை அகற்ற வேண்டுமாயின், அவர்களின் உரிமைகளை வழங்குவதில் நேர்மையான அக்கறை செலுத்துவதுதான் பொருத்தமான ஒரே மார்க்கமே தவிர, மலையக மக்களின் உரிமைகளுக்கான கோரிக்கைகளைக் கைவிட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதல்ல. ஒரு சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பலியிட்டு, இன்னொரு சிறுபான்மை இனத்தின் உரிமைகளை நசுக்க முனையும் பேரின ஆதிக்க வெறியின் அப்பட்டமான வெளிப்பாடு இது.

சிங்கள நபர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஆங்கில, மற்றும் சிங்களப் பத்திரிகைகளில் இன்று தொண்டமானுக்கு எதிராகப் பரப்பப்படுகின்ற பிரச்சாரங்கள், இந் நாட்டின் ஐக்கியத்தையும் இங்குள்ள அனைத்து மக்களினதும் உரிமைகளையும் பேண வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக இங்கு வாழ்கின்ற சிறுபான்மை இனங்களின் தனித்துவங்களை நிராகரித்து அவர்களின் உரிமைகளை மறுத்து என்றென்றைக்கும் பௌத்த-சிங்கள பேரினவாதத்தின் ஆதிக்கத்திற்குள் அவர்களைக் கீழ்ப்படுத்தி வைக்க முயல்வதன் வெளிப்பாடுகளே இவை. பௌத்த சங்கங்களும், சிங்கள பாதுகாப்பு இயக்கம் போன்ற அமைப்புக்களும் **பௌத்த சிங்கள உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்** என்று கோரிக்கைகள் எழுப்புகின்ற போது இப் பத்திரிகைகள் இந் நாட்டிலுள்ள சகல மக்களினதும் உரிமைகளின் பெயரால் அவற்றைக் கண்டிக்கவில்லை. ஸ்ரீ.ல.சு.க.விலிருந்து "ஹெல உருமய" என்ற பெயரில் **பௌத்த சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக** தனியான அமைப்பு உருவாக்கப்பட்ட போது இந் நாட்டிலுள்ள முழு மக்களினதும் உரிமைகளின் பெயரால் இப் பத்திரிகைகள் அந்த அமைப்பைக் கண்டிக்கவில்லை. லலித் அத்துலத் முதலி, காமினி திசநாயக்கா போன்றோர் அன்றைய ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பித்த போதும் பின்னர் கட்சியிலிருந்து வெளியேறிய போதும் **பிரிவினைக்கு எதிரான போராட்டம் பலவீனப்படும்** என்று அவர்களை இந்தப் பத்திரிகைகள் கண்டிக்கவில்லை. இப்போது தொண்டமானும், இ.தொ.காவும் ஐ.தே.கவுடனான உறவு குறித்து மீள்பரிசீலனை செய்யும் போதும், மலையக மக்களின் உரிமைகளுக்காக கோரிக்கை எழுப்பும் போதும் மட்டுமே, நாட்டின் ஐக்கியமும் சகல மக்களினதும் உரிமைகளும் இப் பத்திரிகைகளில் முதன்மை பெறுகின்றன.

அமைச்சர் தொண்டமான் மீதான பௌத்த சிங்கள் பேரினவாதத்தின் இத்தகைய வெளிப்பாடுகள் குறித்து இந் நாட்டின் சிறுபான்மை இனம் என்ற வகையில் இலங்கை முஸ்லீம்கள் உதாசீனமாக இருக்க முடியாது. தமது தனித்துவத்தை உறுதியாக நிலைநாட்டவும், தமது உரிமைகளை வென்று கொள்ளவும் முயல்கின்ற இலங்கை முஸ்லீம்கள்

→11

நன்றி - நூலகத்திட்டம்



# ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி
# வவுனியா கல்வியியல் கல்லூரி
## கை நழுவிப் போகிற அபாயம்?

மோகனபாரதி - தம்பு திருநாவுக்கரசு

"இந்த ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மலையக மாணவர்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்" என்று 1989 மே மாதம் இக்கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசும் போது அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார். ஆனால் அதே மேடையில் பேசிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவோ "இதில் சிங்கள மாணவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வீதம் இடம் ஒதுக்கப்படும்" என்று கூறி இதனை ஒரு சிங்களக் கல்வியியல் கல்லூரி ஆக்குவதற்கான முதல் அடிக்கல்லை நாட்டினார்.

ஜே.ஆருடைய 'உம்'களுக்கு விசேட அர்த்தங்கள் உண்டு. தமிழும் அரசகரும மொழியாக கருதப்படும் என்கிற ஜே.ஆர் கால அரசியலமைப்பில் உள்ள 'உம்' நடைமுறைக்கு வருகிறதோ இல்லையோ ஸ்ரீபாதவில் பேசிய சிங்கள மாணவர்க'ளும்' என்பதில் உள்ள 'உம்' இப்போது சிங்கள மாணவர்கள் 'உடைய' கல்லூரியாக மாறுகிற நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறதை அங்கு தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்கள் புலப்படுத்தி உள்ளன.

தகுதிவாய்ந்த ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கோடு இலங்கையில் பத்துக் கல்வியியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. சியன, சாரிபுத்த, ஊவா, மகாவலி, ஹாபிட்டிகம, நில்வள ஆகிய ஆறு கல்வியியல் கல்லூரிகளும் நூறு வீதம் சிங்கள மாணவர்களுக்கு சிங்கள மொழி மூலம் கற்கை நெறிகள் கற்பிக்கப்படுகிறது. இதில் சாரிபுத்த கல்வியியல் கல்லூரியில் பௌத்த பிக்குகளாக உள்ள மாணவர்களுக்கு மட்டுமே கல்வி கற்பிக்கப்படுகிறது.

பஸ்துன்றட்ட கல்வியியல் கல்லூரியில் ஆங்கில மொழிப் பயிற்சி மாத்திரமே கற்பிக்கப்படுகிறது. அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி முஸ்லீம் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் வவுனியா கல்வியியல் கல்லூரியும், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியும் தமிழ் மாணவர்களுக்காகவே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்குறித்த எட்டுக் கல்வியியல் கல்லூரிகளிலும் இன விகிதாசாரத்தை பற்றி அக்கறைப்படாத அரசு வவுனியா, ஸ்ரீபாதக் கல்லூரிகளில் மட்டும் மாணவர்கள் இன விகிதாசார அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. வவுனியாக் கல்லூரியில் 75%மான தமிழ் மாணவர்களோடு 25%மான சிங்கள மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்திய அரசு ஸ்ரீபாதக் கல்லூரியில் 50% மலையக தமிழ் மாணவர்களும், 25% சிங்கள மாணவர்களும் 25% ஏனையோரும் சேர்க்கப்பட வேண்டும் என கட்டாயப்படுத்தியுள்ளது. இந்த ஏனையோரில் இலங்கை தமிழர்களும் முஸ்லீம்களும் உள்ளடக்கம். 92ம் ஆண்டில் 25 முஸ்லீம்களும் 9 இலங்கைத் தமிழர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஏழு கல்வியியல் கல்லூரிகளும் சிங்கள மாணவர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. அக் கல்லூரிகளில் தமிழ் மாணவர்களோ, முஸ்லீம் மாணவர்களோ சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இதே போல் அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரியில் முஸ்லீம் மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அங்கு சிங்கள மாணவர்களோ தமிழ் மாணவர்களோ அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் ஸ்ரீபாதவிலும் வவுனியாவிலும் மட்டும் ஏன் இன விகிதாசாரத்தை வற்புறுத்துகிறார்கள் என்பதுதான் புரியவில்லை என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர்.

ஸ்ரீபாதவிலும், வவுனியாவிலும் 25% சிங்கள மாணவர்களுக்கு இடம் கொடுப்பதாயின் ஏனைய சிங்கள மாணவர்களுக்கான கல்வியியல் கல்லூரிகளிலும் அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரியிலும் ஏன் தமிழ் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கக் கூடாது என்று சூடாகக் கேட்டார் அங்கு பயிலும் ஒரு மாணவர்.

வவுனியாக் கல்லூரியில் 25%மான சிங்கள மாணவர்களும் சேர்க்கப்படுவர் என அறிவிக்கப்பட்டதும் பெரும் திகைப்படைந்த தமிழ்க் கட்சிகளும் தமிழ் அமைப்புகளும், வவுனியாவில் உள்ள பிரஜைகள் குழுவினரும் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தார்கள். இந்த முடிவை மீள் பரிசீலனை செய்து 100% தமிழ் மொழி மூலமான மாணவர்களுக்கானதாக மாற்றும்படி 'அப்பீல்' செய்தார்கள். கோரிக்கைகள் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் முடிவில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

எவ்வாறு சிங்களப் பிரதேசத்தில் உள்ள கல்வியியல் கல்லூரிகள் முழுமையாக சிங்கள மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டதோ அவ்வாறே தமிழ்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள இவ்விரு கல்லூரிகளும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்கிற கோரிக்கையை ஐ.தே.க அரசில் ஒட்டிக் கொண்டிருக்கும் வன்னி எம்.பியும் கல்வி இராஜாங்க அமைச்சருமான இராசமனோகரி புலேந்திரனால் கூட பெற்றுக் கொடுக்க முடியாமல் இருக்கிறதென்பதும் ஒரு கசப்பான உண்மையே.

இதே நிலைதான் ஸ்ரீபாதக் கல்லூரிக்கும் ஏற்பட்டு வருகின்றது. தொண்டமான் அடிக்கல் நாட்டு விழாவில் மலையகத் தமிழ் மாணவர்களுக்காகவே இக் கல்லூரி உருவாக்கப்பட்டது என்று கூறினாலும் இது சிங்கள மாணவர்களுக்கான கல்லூரியாக மாறுவதை அவராலும் தடுத்து விட முடியவில்லை. அல்லது தடுக்க முற்படவில்லை என்றும் கூறலாமோ என்னவோ.

• • •

1992ம் ஆண்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டதற்குப் பிறகு 1993ஆம் ஆண்டுக்கான பயிலுனர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டும், 93 டிசம்பர் மாதமாகியும், இது வரை புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், ஏனைய கல்வியியல் கல்லூரிகள் அனைத்திலும் 1993ம் ஆண்டிற்கான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, பயிற்சி நெறிகள் நடைபெற்று வருவதோடு 1994ம் ஆண்டுக்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களும் வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளன. ஆனால், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

இது தொடர்பாக எழுந்த கேள்விக்கு 'அமைச்சு தான் விளக்கம் தர வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார் கல்லூரியின் பீடாதிபதி திருமதி மாரிமுத்து.

அமைச்சோ காரணம் எதுவும் தெரிவிக்காமல் அமைதியாகத் தூங்கி வழிகிறது.

92ம் ஆண்டு சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான பரீட்சைகள் இம்மாதம் நடைபெற இருக்கிறது. ஆனால் பாடத்திட்டங்கள் எதுவும் பூர்த்தியாக்கப்படவில்லை. 'எமக்குச சுமாராக நான்கு மாதங்கள் தான் விஞ்ஞானப் பாடம் போதிக்கப்பட்டது. விஞ்ஞான விரிவுரையாளர் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்ட பிறகு இன்னமும் விஞ்ஞானம் கற்பிக்க விரிவுரையாளர் எவரையும் நியமிக்கவில்லை. கணித பாடத்திற்கும் விரிவுரையாளர் நியமிக்கப்படவில்லை. இம்முறை வர்த்தமானியிலும் கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றிற்கான விரிவுரையாளர்களை கோராமல் இருப்பது எமக்குச் சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. முக்கியமான பாடங்களுக்கான விரிவுரையாளர்களை நியமிப்பதில் கல்வி அமைச்சு தயக்கம் காட்டி வருகிறது. வர்த்தமானியில் ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரிக்காக சகல விண்ணப்பங்களும் தெளிவற்ற முறையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றினதும் பின்னணி என்ன? என்று கேள்வி எழுப்புகிறார் இன்னொரு மாணவர்.

கல்லூரிக்குப் போதுமான விரிவுரையாளர்களை நியமிக்குமாறு கோர வேண்டியது பீராதிபதியின் பொறுப்பு. நாம் எவ்வளவு சுட்டிக் காட்டியும் அவர் மௌனமாகவே இருக்கிறார் என்கிறார், இன்னொரு விரிவுரையாளர்.

கல்லூரிக்கான நிரந்தரப் பீடாதிபதியையே இன்னமும் நியமிக்கவில்லை. முதலில் கலாநிதி சிரோன்மனி ராசரத்தினம் நியமிக்கப்பட்டார். இவர் இக்கல்லூரியினூடாக மலையக மாணவர்கள் பயன் பெற வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார். புதிய துறையான ஆரம்பக் கல்வியை அறிமுகப்படுத்தி மலையக மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துதல், ஆசிரியர் சேவைக்கு முன்னோடியாக சேவை முன்பயிற்சியை வழங்குதல், இதன் மூலம் மலையகப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்தல் என்கிற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஜேர்மன் அரசின் உதவியுடன் உருவாக்கப்பட்டது இச் ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரி.

விஞ்ஞானம், கணிதம், அடிப்படைக் கல்வி ஆகிய பாடப் பிரிவுகளின் கீழ் மொத்தமாக 240 மாணவர்கள் 1992 பெப்ரவரியில் முதன் முறையாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப் பாட நெறிகள் மூன்று வருட எல்லையைக் கொண்டவை. இரண்டு வருடங்கள் உள்ளகப் பயிற்சியையும் ஒரு வருட வெளிக்களப் பயிற்சியையும் கொண்டது.

னார். கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னால் இயன்றவரை உழைத்தார் என்பது மாணவர்களது அபிப்பிராயம்.

அவர் இடமாற்றப்பட்டதற்குப் பின்னர் கூட ஒரு நிரந்தரப் பீடாதிபதி நியமிக்கப்படவில்லை. பீடாதிபதி நியமனம் பற்றி 93 பெப்ரவரி 26ம் திகதிய வர்த்தமானியில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. பின்னர் அதில் மாற்றம் செய்யும் முகமாக 93 மார்ச் 23ம் திகதிய "டெயிலி நியூஸ்" பத்திரிகையில் பீடாதிபதி பதவிக்கு எந்த மொழி மூலமானவர்களும் விண்ணப்பிக்கலாம் எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதனை மாணவர்கள் எதிர்த்து நிரந்தர பீடாதிபதியாக தமிழ் மொழி பேசுபவர்களையே நியமிக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்து வேட்டை நடாத்தியதோடு கடிதங்களையும் தொண்டமான், ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோருக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் இது வரை இந்நியமனம் தொடர்பான எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை என்கிறார்கள் மாணவர்கள்.

சிற்றூழியர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சமையற்காரர் நியமனங்கள் கூட பெருமளவு பெரும்பான்மை இனத்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியைச் சூழவுள்ள தமிழர்கள் பலர் விண்ணப்பித்திருந்தும் கூட அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. மொழி புரியாத பிரச்சினை காரணமாகச் சிக்கல்கள் ஏற்பட இது வழி வகுக்கிறது. கூடவே இங்கு தற்போது பணிபுரியும் சிற்றூழியர்கள் காலி, மாத்தறை, வியாங்கொடை போன்ற இடங்களிலிருந்து வந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்கு தங்குமிட வசதி இல்லாத காரணத்தால் பயிலுனர் விடுதிகளிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். புதிதாகப் பயிலுனர்கள் சேர்க்கப்பட்டால் இடப் பிரச்சினை ஏற்படும்.பதிலாக இப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வழங்கியிருந்தால் இப்பிரச்சி ஏற்பட்டே இருக்காது என்பது இன்னொரு மாணவரது அபிப்பிராயம்.

இது தவிரக் கல்லூரி நிர்வாகம் தொடர்பாக பல விரிவுரையாளர்கள், மாணவர்களிடம் அதிருப்தி விரவிக் கிடக்கின்றது. விரிவுரையாளர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கலில் தற்போதைய பீடாதிபதி பக்கச் சாபாக நடந்து கொள்வதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது.

கம்பியூட்டர், மனையியல் பயிற்சி நெறிகள் ஒழுங்காக நடாத்தப்படவில்லை. 93 கல்வியாண்டுக்கான பணம் கல்லூரிக்குப் பயன்படுத்தப்படாமலே திரும்பியனுப்பப்பட்டதாம். அதே போல் மாணவர் நலன்புரி சேவைக்கான பணத்திற்கு என்ன நடந்தது?

சில விரிவுரையாளர்கள் விரிவுரைகளுக்கே வராமல் சம்பளம் எடுப்பது எப்படி? நூலகத்திற்கு பொறுப்பானவர் பதவியேற்றதும் சென்று விட்டார். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அவர் திரும்பி வருவதற்குள் எந்த புத்தகக் கொள்வனவும் இடம்பெறப் போவதில்லை என்பது தெளிவு. அவ்வாறானால் நூலகம் எதற்கு? என்று கேட்கிறார்கள் சில மாணவர்கள்.

இது மட்டுமல்ல எல்லாக் கல்வியியல் கல்லூரிகளுக்கும் பெயரிடும் போது அவ்வப் பிரதேசப் பெயர்களையே குறித்து இடப்பட்டது. ஆனால் இங்கு மட்டும் கொட்டக்கலை கல்வியியல் கல்லூரி என்பதற்குப் பதிலாக ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதே ஒருவகையான மேலாதிக்கம் தானே என்பதும் இந்த மாணவர்களது அபிப்பிராயத்தில் ஒன்று.

இறுதியாக ஒரு முக்கியமான விடயம் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது எவரும் காணி வழங்க முன்வரவில்லை. உங்களது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காகத் தான் கல்லூரி அமைக்கப்படுகிறது என்று எடுத்துச் சொன்ன பின் அவர்கள் தங்களது காணிகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களது காணிகளைச் சுவீகரித்து அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத் திற்காக என்று கூறி கட்டப்பட்ட இக் கல்லூரி இப்போது அவர்களுக்குப் பயன்படாமல் சிங்கள மயமாவதும், நிர்வாகம் இந்த மாணவர்களது கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டாமல் இருப்பதும் மலையக மக்களுக்கு செய்யும் மோசடியே என்கிற அபிப்பிராயம் தான் மாணவர்களிடமும், அவர்களது பெற்றோரிடமும் விரவியிருக்கிறது.

அரசினுடைய கல்விக் கொள்ளையில் சிறுபான்மை இனக் குழுமங்கள் எப்போதும் ஒதுக்கப்படுவதும் அதற்கு இம்மாதிரியான நிர்வாகங்கள் துணை போவதும் தொடர்கிற விடயங்கள் தான்

முடிவு எப்போது?

## வவுனியா கல்வியியல் கல்லூரி.

இலங்கையிலேயே அதிக பணச்செலவில் அமைக்கப்படத்தீர்மானிக்கப்பட்ட வவுனியா கல்வியியல் கல்லூரி, நாட்டின் ஏனைய கல்விக் கல்லூரிகளிலிருந்தும் எல்லாவகையிலும் வேறுபட்டுள்ளது.

மூன்று கட்டங்களில் 256 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக் கல்லூரியின் முதலாம் கட்ட வேலைகள் முடிவுற்றதுமே கடந்தமாதம் 40 மாணவர்களைக் கொண்டதாக கற்கை நெறிகள் ஆரம்பமாகியுள்ளன.

வன்னிப்பிரதேசத்தில் வவுனியாவில் அமைந்துள்ளதனால், வன்னிப்பிரதேச மாணவர்களாகிய வவுனியா மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு இங்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

75 வீதம் தமிழ் மாணவர்களும் 25 வீதம் சிங்கள மாணவர்களும் இதில் கல்விபெற வசதி செய்யப்பட்டுள்ளது. கல்லூரியின் நிர்மாண வேலைகள் முற்றுப்பெற்றதும் 100 மாணவர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டு மூன்று வருடங்களில் மொத்தமாக 300 மாணவர்கள் கல்விகற்க வசதியுடையதாகத் திகழும்.

இலங்கையின் எந்தப் பாகத்திலிருந்தும் மூவினங்களையும் சேர்ந்த (தமிழ் முஸ்லிம், சிங்கள) மாணவர்கள் இக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க முடியும். பிரதேச கல்விநிலைக்கான க.பொ.த உயர்தர புள்ளி அடிப்படையில் போட்டிப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

நீண்ட காலமாகவே கல்வியில் மிகவும் பின்தங்கியதாகவும் தொடர்ச்சியாகவே ஆரம்பவகுப்புகளுக்குரிய ஆசிரியர்கள் கணித, விஞ்ஞான, ஆங்கிலப் பாடங்களுக்குரிய ஆசிரியர் பற்றாக்குறை கொண்டதாக விளங்கி வரும் வன்னிப் பிரதேசத்தில் இக்கல்லூரி அமைக்கப்பட்டிருப்பதை வன்னி மாணவர்கள் வரவேற்கிறார்கள்.

வவுனியா கல்விக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இருமாதங்கள் ஆகப்போகிறது. ஆனால் அங்கு நிலவும் நிலைமைகள் மாணவர்கள் பெற்றோர் மத்தியில் திருப்தி தருவதாக இல்லை.

மத்திய கிழக்கு-அரபு நாடுகளின் கட்டிடக் கலையம்சத்தைப் பின்பற்றி கூம்பு வடிவக் கூரையோடு அழகுற இக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. "ஜன்னல், கதவுகளின்" கண்ணாடிச் சட்டங்களைத் தவிர வேறு எந்தத் தேவைக்கும் இக்கட்டிடத்தில் மரமோ பலகையோ பயன்படுத்தப்படவில்லை.

தற்போது ஆரம்பமாகியுள்ள மழைக்கு கூம்புவடிவக் கூரைகள் கண்ணீர் சிந்துவது போல சீமேந்துக் கட்டின் ஊடாகக் கசிந்து வரும் மழை நீரினால் மாணவர்களது விடுதிக்கட்டிடத்தரை தண்ணீரால் நிறைந்து விடுகிறது. இந்த மழை நீரை அப்புறப்படுத்துவதிலேயே அங்குள்ள சிற்றூழியர்களுக்குப் பெரும் பொழுது கழிந்து விடுகிறதாம்.

சுமார் இரண்டு மூன்று வார காலப்பகுதியில் இரண்டு மாணவர்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்படநேர்ந்தது. அவர்களில் ஒருவர் நோயின் கடுமை காரணமாக வவுனியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்

மாணவர்களது கட்டில்களுக்கு, ஏற்கனவே வழங்கப்பட்ட நுளம்பு வலைகளைக் கொழுவி விடுவதற்கு எந்த வசதியுமில்லை. கூம்பு வடிவ சீமேந்துக் கூரையின் உட்பகுதியில் ஆணி கூட அடித்து அவற்றைக் கொழுவ முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளார்கள். நுளம்பு வலைகளோ நேர்த்தியாகச் சுற்றப்பட்டு மூலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதே காலப் பகுதியில் ஒரு நாக பாம்பு உட்பட ஐந்துக்கு மேற்பட்ட விஷப் பாம்புகள் விடுதிக்குள் பிரவேசிக்க முற்பட்டு அடித்துக் கொல்லப்பட்டுள்ளன. அவசரத் தேவைக்கான முதலுதவிப் பெட்டி கூட இல்லாமல் இலங்கையில் இயங்கிவரும் ஒரேயொரு கல்விக் கல்லூரி என்ற பெருமையும் வவுனியா கல்விக் கல்லூரிக்கே சேரும்.

மாணவர்கள் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என்று சுமார் நூறு பேர் வரையில் உள்ள இக்கல்லூரி வவுனியா நகரிலிருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. அவசர அந்தர தேவைக்குக் கூட இதற்கு ஒரு வாகன வசதியின்றி கல்லூரி நிர்வாகமும் மாணவர்களும் தவிக்கின்றார்கள்.

இங்குள்ளது ஒரேயொரு கிணறு. மழை பெய்யத் தொடங்கியும் கூட போதிய நீரை இதிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலுள்ளது. 256 மில்லியன் ரூபா ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியோடு ஆரம்பிக்கப்பட்ட பாரிய திட்டம் இது. இருந்தும் தமிழ் மாணவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கல்லூரி என்றளவில் அதன் அபிவிருத்திகளும், அத்தியாவசியத் தேவைகளும் புறக்கணிக்கப்பட்டே வருகிறது. •

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும் - 4

## இனமுரண்பாட்டை ஏற்படுத்திய கோல்புறூக்கின் பொருளாதார சீர்திருத்தம்

கோல்புறூக் அறிமுகப்படுத்திய பொருளாதார சீர்திருத்தத்தில் முக்கியமானது க ட்டற்ற வர்த்தகத்தை அறிமுகப்படுத்தியமையாகும். இதனால் வர்த்தகம், உற்பத்தி விடயங்களில் அரசுக்கு இருந்த ஏகபோகம் இல்லாமல் செய்யப்பட்டது. கட்டற்ற வர்த்தகக் கோட்பாடு இதேகாலப்பகுதியில் பிரித்தானியாவில் பலமாக எழுச்சியடைந்த ஒரு கோட்பாடு. தாராண்மைக்கட்சியை (லிபரல் கட்சி) சேர்ந்தவர்களே இக் கோட்பாட்டின் பிரதான பிரச்சாரகர்களாக விளங்கினர். இவர்கள் இக்காலப் பகுதியில் முதன் முதலாக பழமை பேண் கட்சியை (கன்சர்வேடிவ் கட்சி) அரசிலிருந்து வீழ்த்தி அதிகாரத்தை கைப்பற்றியும் இருந்தனர். கோல்புறூக்கும் இக்கோட்பாட்டினால் கவரப்பட்ட ஒருவராக இருந்தமையினால் தனது சீர்திருத்தத்தில் அதனை அறிமுகப்படுத்த முன்வந்தார்.

இக்கட்டற்ற வர்த்தகத்தின் அறிமுகமும் இலங்கையின் இனப்பிரச்சினையில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தியது. இக் கோட்பாட்டினூடாகவே பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி செய்யப்பட்டது. இப்பெருந்தோட்டத்துறையில் வேலை செய்வதற்காக இந்தியத் தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டு கண்டியப் பிரதேசப் பெருந் தோட்டங்களில் குடியேற்றப்பட்டனர். வேற்று மொழி பேசும் ஒரு மக்களின் வருகை பின்நாட்களில் இரு இனத்தவரிடையேயும் முரண்பாடுகள் ஏற்படக் காரணமாயிற்று. இம்முரண்பாட்டினால் எழுந்த பிரச்சினைகள் இன்றுவரை இலங்கை அரசியலில் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே உள்ளன. ''இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது எங்களுக்கு இச் சிறுதுண்டு நிலமே உள்ளது. இந்த நாடு எங்களுக்கு வேண்டும் இதனை இந்தியர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும்'' என இலங்கையின் முதற் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா கூறிய கருத்தும் ''பிரித்தானியர் காலத்தில் அந்நியரிடம் பறிபோன எமது நிலத்தை மீளப் பெறுவதற்காகவே மாகாணசபைத் தேர்தலில் நான் போட்டியிடுகின்றேன்'' என மத்திய மாகாண சபை முதலமைச்சர் திசநாயக்கா கூறிய கருத்தும் இவ் இனமுரண்பாட்டின் வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றன.

பெருந்தோட்டத்தில் குடியேற்றப்பட்ட இந்தியவம்சாவழி தொழிலாளர்களை விட கொழும்புத் துறைமுகத்திலும் நகர நிர்மாணப் பகுதிகளிலும் நகர தொழிற்சாலைகளிலும் வேலை செய்வதற்கென மலையாளத் தொழிலாளர்களும் இங்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். கட்டற்ற வர்த்தகத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்ட இவர்களின் வருகையும் இனப்பிரச்சினையில் தாக்கங்களை ஏற்படுத்தின.

இது மட்டுமல்லாமல் மலையாளத் தொழிலாளர்களின் ஆக்கிரமிப்பினாலேயே சிங்களத் தொழிலாளர்களுக்கு தொழில் கிடைக்காமல் உள்ளது என தீவிரமான பிரச்சாரமும் செய்யப்பட்டது. இப்பிச்சாரத்தில் A.E. குணசிங்காவின் தொழிற்சங்கமும் அவரது ''வீரயா'' பத்திரிகையும் மும்முரமாக ஈடுபட்டது. 1931 இல் புகையிரதப் பகுதியில் நாளாந்தச் சம்பளம் பெறும் 3000 பேரில் 1700 பேர் மலையாளிகளாக இருந்து சிங்களத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை பறிக்கின்றார்கள் என A.E. குணசிங்கா குற்றம் சாட்டியிருந்தார்.

1936 இல் அரசாங்கத் திணைக்களங்கள் அனைத்திலும் தொழிலாளர்களில் 26% இந்தியர்களாக இருந்தனர்.

இக்குற்றச்சாட்டு எதிர்ப்புகளுக்கு புறம்பாக மலையாளிகளைப் பகிஸ்கரியுங்கள் என பகிஸ்கரிப்பு இயக்கத்தையும் A.E. குணசிங்கா நடாத்தியிருந்தார். இப்பகிஸ்கரிப்பு தொடர்பாக ''வீரயா'' பத்திரிகை பின்வருமாறு எழுதியிருந்தது. ''அகிம்சை முறையில் 'தார்மயுத்தம்' என்ற முறையில் இப்போராட்டத்தை வெற்றிபெறச் செய்யும் வழிமுறைகளை நாம் சிந்தித்துக் கண்டறிய வேண்டும். தன் தாய்நாட்டையும், தன் சகநாட்டு மனிதனையும் நேசிக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிராமத்திலும், உக்கிரமான இயக்கத்தை நடாத்த வேண்டும். மலையாளிகளுடனான தொடர்புகளையும், வணிகத்தையும் நிறுத்தும்படி கோரவேண்டும். மலையாளிக்கு வீடு வாடகைக்கு கொடுப்பதை நிறுத்தும்படி கேட்க வேண்டும். அமைதியான பகிஸ்கரிப்பு மூலம் எல்லா தொடர்புகளையும் நிறுத்த வேண்டும். இதன் மூலம் எமது கௌரவத்தைக் காக்கவேண்டும்''.

தொழிலாளர்களின் வருகைக்கு புறம்பாக இக்கட்டற்ற வர்த்தகம் யாரும் இலங்கைக்கு வந்து தொழில் முயற்சியை ஆரம்பிக்கலாம் என்ற வகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வரவழைப்பதற்கான வாய்ப்புகளை கொடுத்திருந்தது. இவ்வாறு வருகை தந்த முதலீட்டாளர்களில் பெருந்தோட்டத் துறையில் முதலிட்ட ஐரோப்பிய முதலீட்டாளர்களை தவிர இந்திய வர்த்தக முதலீட்டாளர்களும் பெருமளவில் அடங்குவர். அதுவும் உள்நாட்டு வர்த்தகத்தில் பெரும் பகுதியை இந்திய வர்த்தகர்களே ஆதிக்கம் செலுத்தியிருந்தனர்.

இது பற்றி குமாரி ஜயவர்த்தன பின்வரும் தகவல்களைத் தருகின்றார். "1880 இல் உள்நாட்டு வர்த்தகத்தில் புறக்கோட்டை அரிசி, புடவை வியாபாரத்தின் பெரும் பகுதி 73 நாட்டுக் கோட்டைச் செட்டிக் கம்பனிகளில் தங்கியிருந்தது. பலசரக்கு விற்பனையில் 35 முஸ்லீம் வர்த்தகர்கள் பங்குபற்றினர். இவ்வருடத்தில் தமிழ் அல்லது சிங்களக் கம்பனிகள் ஒன்றாவது இல்லை. மேலும் இவ்வருடத்தில் புறக்கோட்டை வர்த்தகத்தில் 86 செட்டியார் கம்பனிகளும், 64 முஸ்லீம் கம்பனிகளும் முதன்மை பெற்றன. டொன் கரோலிஸ் (தளபாடங்கள்) N.S பெர்ணாண்டோ (உபகரணங்கள்) போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள வியாபாரிகளே காணப்பட்டனர். 1890 இல் குஜராத்தைச் சேர்ந்த புதிய முஸ்லீம் வர்த்தக குழுவினர் போரா கோஷா, மேமன் போன்றோர் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இடம் பெற்றனர். இவர்களே புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானியர்களின் கூட்டுப் பங்குதாரர்களாகவும் அமைந்தனர்''.

இந்திய வர்த்தகர்களின் இவ் ஆதிக்கம், சிங்கள முதலீட்டாளர்களையும் சிங்களத் தேசியவாதிகளையும் கொதிப்படையச் செய்தது. அவர்களால் வர்த்தகத்துறையில் இவர்களோடு போட்டி போட முடியவில்லை **அதுவும் பெருந் தோட்டத்துறையில் சிறிதளவு வருமானத்தை பெற்றுக் கொண்ட உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன.** இதனால் அவர்கள் இவ்இந்திய வர்த்தகர்களுக்கு எதிரான கருத்துக்களையும், பிரச்சாரங்களையும் முன்வைக்கத் தொடங்கினர். இவ்வர்த்தகர்கள் நிலையாக இங்கு காலூன்றி வளர்ச்சி பெற்ற போது இவர்களுக்கு எதிரான பிரச்சாரம் இனவாதப்பிரச்சாரமாக வளர்ச்சியடைந்தது. இப்பிரச்சாரப் போராட்டத்தில் அநகாரிக தர்மபாலா முதன்மையானவராக விளங்கினார். இவரது பிரச்சாரம் இந்திய வர்த்தகர்கள் என்ற வகையில் இந்திய முஸ்லீம் வர்த்தகர்களுக்கும், இந்திய தமிழ் வர்த்தகர்களுக்கும் எதிராக இருந்தது.

1900ம் ஆண்டில் ''சிங்கள பௌத்தய'' என்ற தனது பத்திரிகையில் அநகாரிக தர்மபாலா பின்வருமாறு எழுதினார்.

''நாட்டின் செல்வவளத்தை அந்நியர்கள் எடுத்துச் செல்லும் போது எமது மண்ணின் மைந்தர்களுக்கு போக்கிடம் எங்கே? இந்நாட்டில் வந்து குடியேறியோர் திரும்பிச் செல்வதற்கு அவர்களுக்கு நாடு உண்டு. ஆனால் சிங்களவர் செல்வதற்கு எந்த நாடும் இல்லை. அந்நியர்கள் குதூகலிக்கும் போது மண்ணின் மைந்தர்கள் இழப்புக்கு ஆளாவது என்ன நியாயம்? இங்கிலாந்துக்கு இரவலர் வருவதைத் தடுப்பதற்கு அந்நியர் தடைச்சட்டம் ஒன்று அந்நாட்டில் உள்ளது. ஆனால் உதவியற்ற அப்பாவிச் சிங்களக் கிராமவாசி அவரது மூதாதையரது நாட்டின் செல்வத்தை திருடும் அந்நிய மோசடியாளருக்கு இரையாகின்றான்''.

அநகாரிக தர்மபாலா புறக்கோட்டையில் தளபாட வர்த்தகராக விளங்கிய H. டொன் கரோலிஸ் என்பவரின் மகனாக இருந்தபடியால் வர்த்தகப் போட்டி அவரை பெரிதும் பாதிப்படைய வைத்திருக்கலாம் என கருத இடமுண்டு.

சிங்கள வர்த்தகர்களுக்கும், இந்திய தமிழ், முஸ்லீம் வர்த்தகர்களுக்கும் இடையே இடம் பெற்ற வர்த்தக போட்டியின் கொடூரத் தன்மையை 1915 இல் நடைபெற்ற சிங்கள-முஸ்லீம் கலவரத்திலும் அவதானிக்க முடிந்தது. இக்கலவரத்தில் புறக்கோட்டை சிங்கள வர்த்தகர்களே அதிகளவில் ஈடுபட்டனர். இதில் ஈடுபட்டதறகாக அனகாரிக தர்மபாலாவின் சகோதரனாகிய எட்மண்ட் கேவவிதாரணவுக்கும், புறக்கோட்டை உபகரண வியாபாரி N.S. பெர்ணாண்டோவின் மகனான விஜயசேகராவுக்கும் அரசினால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அது சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டது. இதைவிட முஸ்லீம் கடைகளைத் தாக்குவதற்காக மக்கள் கூட்டத்தை தூண்டினார் என்பதற்காக புறக்கோட்டை வியாபாரி டி.டி. பீரிஸ் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

சிங்கள வர்த்தகர்களின் இப்பிரச்சாரத்துக்கு புறம்பாக சிங்கள பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் கூட இவர்களுக்கு எதிரான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

''சிங்களஜாதி'' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும், நாவல் எழுத்தாளராகவும் இருந்த பியதாச சிறிசேன ''கரையோர முஸ்லீம்களிடமும் கொச்சிக்காரரிடமும் அந்நியரிடமும் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்க வேண்டாம்'' என சிங்கள மக்களை வற்புறுத்தினார். சிங்களத் தினசரியான 'லக்மின' கரையோர முஸ்லீம்களைப் பற்றிக் கூறும் போது '' வெறுக்கத்தக்க இக்கும்பலை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு தகுந்த திட்டம் தீட்டப்படுதல் வேண்டும்'' என்றது. 'தினமின' பத்திரிகை முஸ்லீம்களைப் பற்றி கூறுகின்றபோது ''முஸ்லீம்கள் இங்கு வேரூன்றிய எம்பகைவர்'' எனக்குறிப்பிட்டது.

கோல்புறூக் அரசியல் திட்டத்தின் மூலம், கட்டற்ற வர்த்தகத்தையும் அதன் வழி பெருந்தோட்ட பொருளாதாரத்தையும் அறிமுகப்படுத்தியருக்காவிட்டால் இந்திய வர்த்தகர்களின் ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டிருக்காது. இந்திய வம்சாவழியினர் எனும் சமூகமும் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்க மாட்டாது. அவர்களின் பிரச்சினைகளும் இலங்கை அரசியலில் ஒரு பிரச்சினையாக வளர்ந்திருக்காது. இலங்கையில் அப்போது வளர்ச்சியடைந்திருந்த இரண்டு தேசிய இனங்களான தமிழீழத் தேசிய இனமும், சிங்களத்தேசிய இனமும் தத்தம் பிரதேசங்களை தாங்களே அபிவிருத்தி செய்திருப்பர். தத்தம் பகுதிகளிலிருந்து தேசியத் தலைமைகளையும் உருவாக்கி இருப்பர். காலனித்துவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களைக் கூட இணைந்து நடாத்தியிருப்பர். போராட்டத்தின் வளர்ச்சியில் சுதந்திரம் கிடைக்கும் போது அதனால் கிடைக்கும் அதிகாரங்களையும் கூட தமக்கு ஏற்றவகையில் பங்கிட்டு இருப்பர். கட்டற்ற வர்த்தகத்தினால் நலிவடைந்திருந்த உள்ளூர் விவசாயத்தையும் கூட வளம்படுத்தியிருப்பர். ஆனால் கட்டற்ற வர்த்தகம் இவை எல்லாவற்றையும் இல்லாமல் செய்துவிட்டது.

* * *

## செம்பாட்டான்

### ஆங்கிலக் கல்வியின் அறிமுகம்

கோல்புறூக் அரசியல் திட்டத்தின் மூலமே இலங்கையில் முதன்முதலாக ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி ஆரம்ப கல்வி தொடக்கம் உயர்கல்விவரை ஆங்கிலம் போதனா மொழியாக்கப்பட்டது. இவ் ஆங்கிலக் கல்வியின் பிரதான நோக்கம் கீழ்மட்ட இடைமட்ட தர உத்தியோகத்தர்களுக்கான ஆங்கிலம் கற்ற அணியை உருவாக்குவதாகும். ஆங்கிலேயர்களை இப்பணியில் ஈடுபடுத்துவதற்கு, ஆட்கள் பற்றாக்குறையாக இருந்ததாலும் அவர்களுக்கு வேதனமும் அதிகளவில் கொடுக்கவேண்டியிருந்ததாலும், சுதேசிகளை இவ்வேலைகளில் பயன்படுத்த பிரித்தானியர் இக் கல்விமுறையை கொண்டு வந்தனர்.

இவ் ஆங்கிலக்கல்வியும் அதன் வழியிலான பிரித்தானியர்களின் கல்விக் கொள்கையும் இனரீதியிலும், தேசிய ரீதியிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.

ஆங்கிலக்கல்வியைப் பரப்பிய கிறிஸ்தவ மிஷனரிகள் யாழ்ப்பாணத்திலேயும், கொழும்பிலேயும் அதிக கவனம் செலுத்தினர். இதனால் ஆங்கிலம் படித்த கற்றோர் கூட்டமாக அதிகளவில் தமிழர்களே வளர்ச்சியடைந்தனர். யாழ்ப்பாணச் சமூக அமைப்பின் இயல்பும் குடாநாட்டின் வரண்ட தன்மையும் கூட ஆங்கிலம் கற்ற கூட்டத்தை அதிகமாக்கியிருந்தது. இதைவிட மிஷனரிகளுக்குப் போட்டியாக ஆறுமுகநாவலர், இந்துபோட் ராஜரத்தினம் என்பவர்களின், முயற்சிகளினால் இந்துப் பாடசாலைகளும் யாழ்ப்பாணத்தில் அதிகளவில் வளர்ச்சியடையலாயின. இந்நிகழ்வு போக்குகளும் கற்றோர் குழாமை அதிகளவில் உருவாக்குவதற்கு தூண்டு கோலாக அமைந்தன.

மாறாக கொழும்பு தவிர்ந்த சிங்களப் பிரதேசங்களில் மிஷனறிகள் பெரியளவில் அக்கறை செலுத்தாததினாலும், மக்கள் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததினால் கல்வியில் அதிகளவில் அக்கறை செலுத்தாததினாலும் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியடைந்தது போன்ற ஆங்கிலம் கற்றோர் குழாம் வளர்ச்சியடையவில்லை.

## 'புதைந்து புதைந்து புதிய பிரதேசம்

நான்;
இறந்து போனேன்.
என்னை;
அன்று மண்ணில் புதைத்தார்கள்
ஆறடி ஆழத்திற்கு

நான்;
நாளடைவில் புதைந்து புதைந்து
பூமியின் நீர்ச்சுரப்பில் சேர்ந்தேன்.
அதில்;
இன்னும் புதைந்து புதைந்து
அடிநீல வாயுக்களில் புதைந்து மிதந்து
மீண்டும் தாழ்ந்தேன்.

அதில்;
இன்னும் தாழ்ந்து தாழ்ந்து
மையவெளி எரிக்குழம்பில் இருந்தேன்.

அதில்;
இருந்து விழுந்து தாழ்ந்து
புவி மையத்தில் நிலையாய்த் தரித்தேன்.
புவி;
சிறிது சிலிர்த்து உசும்பிக் கொண்டது.

கதீர்

நன்றி - நூலகத்திட்டம்



# துப்பாக்கியின் காலம்

அக்குறணை இளைய அப்துல்லாஹ்

கறுவல் வந்தான். துவக்கோடு வந்தான். துவக்கின் இரண்டு குழலும் புகை கக்கியது.

''யாரைச் சுட்டனி'' மணியம் கேட்டான்.

கறுவல் பேசவில்லை. கறுவல் முறைத்தான்... உள்ளுக்குள் கோபம் வந்தாலும் துவக்குப் பேசும் என்பது அறிந்ததே.

யார் இயக்கத்தைப் பற்றித் தப்பாய்ச் சொன்னாலும் இரண்டு குழலுக்குள்ளாலும் துப்பாக்கி புகையைக் கக்கிக் பார்க்கும்.

எடேய் மணியம் ''தட்டாரக் குணத்தைத்தான் சுட்டனான்''

''ஏனடா கறுவல் குணத்தார் என்ன செய்தவர். சொன்னவர்.''

கறுவல் முன் கோபக்காரன். முன்கோபக்காரன் கையில் கொலைக் கருவியைக் கொடுத்தது யார்? யாராய் இருந்தால் என்ன? அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே. மணியத்தார் குற்றுயிராய்க் கிடந்தார்.

''முந்திக் கறுவல் வட்ட அவையிலை இருக்கேக்கை குணத்தார் வீட்டிலை தான் மூண்டு நேரம் சாப்பாடு. அவிச்சுப் போட்ட குணத்தாரை மனிசி நாகம்மாவை வெள்ளையாடையோடு பார்க்கிற விருப்பத்திலை சுட்டவனே கறுவல்'' ஒருவன் வாயோரியாகக் கேட்டான்.

''சட...புட....சட..புட'' பிறகும் சத்தம். கறுவல் காம்பின் பின் பக்கம் நின்று சுட்டான்.

''அடே உவனுக்கு என்ன நடந்தது.சும்மா தோட்டாக்களை வீணாக்குகிறான்.

ஒரு வேளை இவன் மற்றவரின் ஆளோ..'' மனிதனின் சந்தேகம் தானே எல்லாத்திற்கும் அடி .

''போ, போய்ப் பார். கவனமெடா கறுவல் இன்டைக்கு என்னவோ ஆவேசத்திலை நிக்கிறான்''.

கண்கள் ரத்தமாக; உடம்பெல்லாம் வேர்க்க விறுவுறுக்க தோட்டா முடிஞ்சு போக; உறுமலுடன் இரட்டைக் குழல் துப்பாக்கியை நிலத்தில் வீசி எறிந்தான்.

''குமார் இங்கே வா! ராசனிட்டை போய்ச் சொல்லு உந்த ஏ.கேயைக் கொண்டு வரட்டாம் என்று. குமார் எதுக்குமே பயப்படாதை கட்டை கறுவலின் சன்னதத்தைக் கண்டு மிரண்டு போனான். பயந்து போனவன் காம்ப் தலைவர் ராசனிட்டை போய் கறுவல் சொன்னதைச் சொன்னான்.

''டேய் ராசன்'' ஒரு கப்டனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை ஒன்றையும் கறுவல் கொடுக்காததாலை மிரண்டு போனவன், கோபப்பட்டான்.

''சிவம், பாலன், சிறீ, கௌரி, ஆனந்தன் இஞ்சே ஓடி வாங்கோ. கறுவலைப் பிடியுங்கோ''.

உத்தரவு நொடியாக முதல்.. 'கட்டுங்கோ....'' கறுவல் கருங்காலி மரத்தில் பிணைக்கப்படான். ''டேய்...டேய்'' இன்னும் கத்தினபடியே இருந்தான்.

* * *

சொட்டுச் சொட்டாய் மணியத்தாரின் உடம்பில் குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது; எத்தனையோ மாதங்களாய் சவுக்காரம் காணாத ஆஸ்பத்திரி பெட்சீட்டின் மேல் படுத்திருந்த மணியத்தாட்க்கு கட்டிலின் மூட்டைக் கடி வேறு. மயக்கம் வருவதும் போவதுமாக இருந்தது.

''மிருதங்கத்துக்கு இரண்டு பக்கமும் அடியடி நாகம்மா..'' இன்னும் சாகாமல் இருந்தவரை- ''கொஞ்சம் பேசாமல் இருங்கோ....'' என்றபடி கண்கலங்கினாள்.

''ஏன் பேசாமை இருக்கச் சொல்லுகிறாய். இண்டைக்கு எங்கடை நிலைமை என்ன? ம் எண்டால் ஆமிக்குப் பயப்பிட வேணும். புறகு உவையளுக்குப் பயப்பிட வேணும். கொஞ்சம் வாய் பேசினால் போச்சு. துவக்கு வில்லு தட்டுப்பட்டிடும்''.

''எணை அப்பா தயவு செய்து பேசாதையுங்கோ.. இப்ப நீங்கள் இருக்கிற நிலைமையிலை இது நல்லாயில்லை''. இரண்டாவது மகள் வாசந்தி தனது தரப்பில் அப்பாவை அமைதிப் படுத்தினாள்.

''என்ன மகள் சொல்லுறாய்... இப்ப என்ரை உயிர் போயிடும் எண்டு நான் நினைக்கேல்லை. உவன் கறுவல் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வானென்று நான் கனவிலும் நினைத்துக் கூடப் பார்க்கேல்லை. ஆனால் அவன் நல்ல பெடியன் ஏன்தான் திடீரென்று இப்படி ஆயிற்றுதோ தெரியாது. நான் அவனோடை எப்பவும் போலத்தான் பேசினன் என்னத்தைக் கண்டானோ தெரியாது. திடீரென்று துவக்கை நீட்டிச் சுட்டுப் போட்டான். நான் உதுக்குப் பயப்பிடேல்லை. உதுக்குப் பயப்பிட்டால் எங்கட உலகத்தில வாழ ஏலுமே...

மகள் நீ சின்னப் பிள்ளையில்லை. உனக்கும் விளங்கும். இண்டைக்கு எங்கட நிலமையளைக் கொஞ்சம் சிந்திக்க வேணும் புள்ளை. இயக்கம் இயக்கம் எண்டு சொன்னா அதுக்குள்ளையும் பாம்பிடைநாக்குப் போல இரண்டு பக்கமாய் விரியுதே. புறகு எங்கை நிம்மதி.. மணியத்தார் இரண்டு தரம் விக்கினார்; கண்மை மூடினார். டொக்டர்- ஓடிவந்து நாடி பார்த்து விட்டுச் சொன்னார் மயக்கம் தான்.



குணத்தார் கண் திறந்தார். மயக்கம் தெளிந்ததாய்; அவர் தலைமாட்டில் பார்க்க..நாலைந்து இயக்கப் பெடியன்கள் துவக்குகளோடு வந்து நிற்பதைக் கண்டார்.

''குணமண்ணை உவன் கறுவலுக்குப் பைத்தியமாம்- பக்கத்திலை தான் அறையிலை போட்டிருக்காங்கள். இடைக்கிடை கத்துறான். உங்களுக்கு மயக்க மாயிருந்ததிலை ஒண்டும் விளங்கேல்லை''.

கறுவலைக் கட்டியிருந்த மரத்தைச் சுத்தி ஆட்கள் வந்துவிட்டார்கள். '' என்ன கூத்துப்பாக்கிறியளே....நானென்ன பாம்பாட்டியே...? இல்லாட்டிப் பைத்தியக் காரனோ?,..'' ராசனுக்குக் கேட்டது.... ''இல்லாட்டிப் பைத்தியக் காரனோ''? ''அடக்கடவுளே...'' ராசன் ஏங்கிப் போனான்- ஒருவேளை அப்பிடி இருக்குமோ பொறிதட்டியது. மனம் பாரமாகியது ''ச்சீ... எங்கடை ஆக்களை எத்தினையிலை இழக்கிறது. யுத்தம் மஞ்சள்க் காய்ச்சல், வாந்திபேதி, மலேரியா... இப்ப இதுவுமா...'' ஒரு அழிவின் ஆரம்பம் போல கறுவல் கருங்காலி மரத்தில் கட்டியிருந்தபடியே நின்றிருந்தான். ராசனின் சிந்தனை விரிந்து போனது. இப்படியே போனால்....

அவசர வாகனம் வயர்லஸ்ஸின் சொல்லுக்கு வந்து நின்றது. கறுவல் கட்டுக் கடங்காததால் கட்டியே ஏற்றப்பட்டான். வைத்தியப் பரிசோதனை முடிவில் பைத்தியம் உண்மையாக்கப்பட்டது. மற்றப் போராளிகளையும் இப்பிடித்தாக்கினால் பைத்தியங்களை வைத்து....

அவருக்குப் பெருமூச்சொன்று தானாய் வந்தது குணத்தார் ராசன் வந்ததைக் கண்டு அவனைக் கூப்பிட்டார். பின்னர் கண்கலங்கினார். அவனின் கையில் தன் கையை வைத்து அழுத்தினார். மீண்டும் கண் கலங்கினார். பின்னர் சொன்னார். ''இவ்வளவு காலமும் எங்கடைசனத்திலை தான் பைத்தியக் காரர் இருந்தினம். புள்ளையளைப்பறி கொடுத்தவையள் தகப்பனைப் பறி கொடுத்தவையள், தேப்பனைத் தின்னி, தாயைத் தின்னி... எண்டெல்லாம் பைத்தியம் பிடிச்சுது... இதுக்குப் புறகு வெளிநாட்டிலை இருந்து வந்து டொக்டர்மார் முடிவைச் சொல்லீட்டுப் போயிட்டினம். எங்கடை வடமராட்சியிலை அதிகமாக மனம் தான் பாதிக்கப்படும் எண்டு.

அவையள் சொல்லாமலேயே எங்களுக்கு விளங்கிச்சு. நடை முறையிலை கிழடு, கட்டையளையும் விட்டுப் போட்டு வெளிநாடு அது இதெண்டு புள்ளையள் போனாப் போலையும் இஞ்சை இருக்கறது களை யுத்தத்திற்கு அனுப்பிப்போட்டு பிரேதத்தை எதிர்பாக்கிற நேரத்திலையும் பாதிக்கப்படுறது மனம் தானே. முந்தியெண்டால் ஆயிரத்திலை ஒண்டு அதுவும் உதிலை இருக்கிற மந்திகையிலை கொண்டு போய்ப் போட்டாச் சரி.. ஏதோ சுகமாயிடும்.

இப்ப மனநோய் எண்டு என்ன அங்கோடைக்கு கொண்டு போக ஏலுமே. அங்கை போனாலும் உவன் தமிழன், புலி-ஏதோ உளவு பாக்கிறதுக்குத் தான் பைத்தியக்காரன் போல நடிச்சு இஞ்சை வந்திருக்கிறான். தற்கொலைப் படையிலை உள்ளவன் போல எண்டு சொல்லுவினம். பைத்தியத் தோடையே கொண்டு போய் ''பூசா'' விலை தொங்கப் போட்டுடுவினம்

இண்டைக்கு எங்கடைநிலைமை இப்படிப் போயிட்டுது''. குளுக்கோஸ் ஏறுவதில் தாமதம் ஏற்பட்டது. குணத்தார் மெதுவாய் செருமினார். குண்டு நல்லாப் பாஞ்சிருக்கு. ரத்தம் பெருகியிருக்கு. ஒரு நல்ல மனிசனை இழக்கப் போறம் என நினைத்தான் ராசன்.

குணத்தார் கண்ணை மூடித்திறந்தார்-ஏதோ மின்னலடித்தது. கண்களில் வெளிச்சம் வந்து இருளும் வந்தது. நாகம்மாவும், வாசந்தியும் விலகி நிற்க குணத்தார் ராசனின் கைகளையே பற்றியபடி படுத்திருந்தார். இப்போது அவரின் சிந்தனை இறப்பதற்கு முன்னால்....., என்பதாகவே இருந்தது.

''எங்கடை குஞ்சு குருமன்களை எல்லாம் யுத்தத்திலை தாரை வார்த்தாச்சு... இருக்கிற மிச்ச சொச்சமும் வருத்தத்திலை சாகுதுகள்......... இப்படியே போனால் இதின்ரை முடிவைத் தான் என்ன வாகுமெண்டு சொல்லேலாமல் இருக்குது. கடைசியிலை யாருக்குச் சுதந்திரம் வாங்குறது. சொல்லப் போனால் கட்டடங்களும் இப்ப இல்லையே. மனிசன் எங்கை இருக்கப் போறான். இருக்கிறவையளுக்கும் பைத்தியம் வியாதி---- இப்பிடியே எங்கடை இனமெண்டு ஒண்டு இருந்ததெண்டு வந்து குடியேறினவை சொல்லப் போகினம். அதுக்கு வாய்ப்பிருந்தா துறந்த வீட்டிலை அது நுழைஞ்ச மாதிரி வருவினம். இல்லாட்டி ஆயுதங்களோடை; அதுவுமில்லாட்டி உரிமையைச் சொல்லி எங்கடை பூமி எண்டு கொண்டு.....

கடவுளே உப்பிடிப்போனா... சுண்ணாகம், கந்தரோடையிலை பழையதுகள் மிதக்கிற மாதிரி எங்கடை நிலமும் புதைஞ்சு மிதக்கும்.

அதுக்காக வெண்டாலும் நீங்க போங்கோ.... இஞ்சை ஏதோ இரைஞ்சு கேக்குது.. ஹெலி போல.... ஆசுப்பத்திரி சிவப்பு குருசும் அவங்களுக்குத் தெரியாது.

''ராசன் என்ரை குஞ்சு'' என்றபடி... குணத்தாரின் கைப்பிடி இறுகியது.

ஒரு முறை தான்...

கை கொஞ்சம் கொஞ்சமாகச் சோர்ந்தது.

ராசனின் கண்கள் பனித்தன

குணத்தாரின் மூச்சு நின்று போக... ஆஸ்பத்திரி வார்ட் அழுகுரலால் நிரம்பியது.

தோளில் ஏ.கே.அழுத்தத் தூக்க முடியாத மனப்பாரத்துடன் ராசன் நடந்து கொண்டிருந்தான்.

## நெஞ்சத்தைப் பிய்க்கிற நேற்றுகள்


சீய்...
இப்படி வாழ்கிறதும் ஒரு வாழ்க்கையா?
ஒரு துவக்கு,
ஒரு தோட்டா,
ஒரு சுட்டுவிரலின் சுண்டுகை,
இவைகளுக்குப் பயந்து;
மனச்சாட்சி உறுத்த உறுத்த
செத்துச் செத்து பிழைத்து...
சீய்...

மிச்சமாய் இருக்கிற நாட்களையும்
இவ்வாறு வாழ்ந்து தொலைத்து
செத்துப் போவதில்
இணக்கமில்லை...
எனக்கும் என் மக்களுக்கும்.

நேற்றுக்களை நினைக்க நினைக்க
பெரிய அவமானமாயும்,
தலை குனிச்சலாயும் இருக்கிறது.

உயிரினிலான ஆசையால்
சாவுக்குப் பயந்து
உறவுகளையெல்லாம் மறந்து
ஒருவரை விட்டொருவர் ஓட்டம்பிடித்த
நாட்களும் அவற்றுள்

நெருப்புப் பிடித்து எரிகிற சதையோடு
உதவி கேட்டு ஓடி வந்த உயிரை
வெறுமனே புதினமாய் பார்த்து விட்டு வந்த
இயலாமையும்



மேலும்
எங்களுக்கான வானம் காகங்களாலும்,
காற்று ஒப்பாரிகளாலும்,
வீதிகள் செருப்புகளினாலும் நிரம்பிப் போய்
அந்த செருப்புகள்
சோடி இழந்ததுமாய்,
சோடி மாறியதுமாய்,
சிலதில்
இரத்தம் உறைந்ததுமாயும் கிடந்த பொழுதுகளும்
உள்ளடங்கலாக

யாருக்குத்தான் இஸ்டமிருக்கும்?...
நடுரோட்டில் பற்றிய குறையில்
கரியாகிக் கிடக்கிற உடலிலும்,
மின்கம்பத்தில் கட்டுண்டு;
கண்பிதுங்கி, நாக்கு வெளித்தள்ளி,
தலை சரிந்து கிடக்கிற உடலிலும்
உறவுகளின் முகங்களைத் தேடி
வாழ்கிற அவலத்தில்....

ஏயெம் றஸ்மி

நன்றி - நூலகத்திட்டம்



# வன்முறைக்கு மாற்றுவழி?

## வட-அயர்லாந்தில் புதிய ஒளி!

பிரிட்டனுக்கும் அயர்லாந்துக்கும் இடையிலான பிரச்சினை மூன்று நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. பிரிட்டனின் பிரதான நிலப்பகுதியின் இயற்கையான ஒரு நீடிப்பாகவே அயர்லாந்தினைப் பிரிட்டிஷார் கருதி வந்துள்ளனர். இதுவே ஆரம்ப முனை. ஆனால் பிரச்சினையின் புதுவடிவம் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே கருக்கொண்டது எனலாம். தமது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த மக்களை ஈவிரக்கமின்றி அடக்கிய பிரிட்டிஷார் அத்துடன் நின்றுவிடாமல் அங்கே கலவரங்களை அடக்க முன்வரும் பிரிட்டிஷாருக்கு அயர்லாந்தின் நிலப்பகுதியைத் துண்டுபோட்டுக் கொடுக்கவும் தலைப்பட்டனர். இதனால் பல 'குட்டித் தளபதிகள்' பிரிட்டனிலிருந்து அயர்லாந்துக்குப் போய் கண்ணுக்கெட்டிய தூரம் வரையான காணிகள் தமக்கென பங்கெடுத்ததாக வரலாறு கூறுகிறது. இதனை ''புரட்டஸ்தாந்துப் பயிர்ச் செய்கை'' என சிலேடையாகக் குறிப்பிடுவதுமுண்டு. இங்ஙனம் வடகரையில் இறங்கிக் குடியேறியவர்களினால் வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தினர் பெரும்பான்மையாகி விட்டனர்.

முழு அயர்லாந்தினதும் மொத்தப்பரப்பளவு 32,595 சதுர மைல் இதில் 5,242 சதுரமைல் பரப்பளவு கொண்டதே வட அயர்லாந்து. இன்றைய கணிப்பீட்டில் மக்கள் தொகை வட அயர்லாந்தில் 1.6 மில்லியன் என்றும் அயர்லாந்துக் குடியரசில் 3.5 மில்லியன் எனவும் அண்ணளவாகக் கூறலாம். 1801 இல் முழு அயர்லாந்தும் பிரிட்டனின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டது. 1916 இல் ஐரிஷ் மக்களின் கிளர்ச்சி தோல்வியில் முடிவடைந்து தலைவர்கள் தூக்கிலிடப்பட்டுள்ளனர். 1919 இல் குடியரசுவாதிகள் அயர்லாந்தில் பெரும்பான்மையான பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றினர் ( ஆனால் பிரிட்டனின் பாராளுமன்றத்துக்கு போக வேண்டும்) 1977 இல் இலங்கைப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வட-கிழக்கில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றதை ஒத்த நிலை இது. ஆனால் நம்மவர்கள் கொழும்பு வந்ததைப் போல அவர்கள் பிரிட்டனுக்குப் போகாமல் தேசியப் பாராளுமன்றத்தைப் பிரகடனப்படுத்தி அமைத்தனர். 1919-20 காலப்பகுதியில் சுதந்திரப் போராட்டம் வெடித்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் 1920 இல் அயர்லாந்து அரசாங்கச் சட்டம் (GIA) என்பதை நிறைவேற்றி அயர்லாந்தைத் துண்டு போட்டது. அடுத்த ஆண்டில் புதிய வட அயர்லாந்துப் பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாகச் செயற்படத் தொடங்கியது. 1922ல் ஐரிஷ் அரசு (அயர்லாந்து அரசு) சுதந்திரமாகிற்று. இது 1932 இல் குடியரசாக மாறியதுடன் 1949 இல் பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியும் கொண்டது.

இங்ஙனமாக ஏற்கனவே இருந்து வந்த உளரீதியான பிளவுகள் 1920 இல் பௌதீக ரீதியாகவும் சட்டரீதியாகவும் பிரிவினையாகப் போய் முடிந்தன. அயர்லாந்துப் பிரச்சினையும் காஷ்மீரைப் போலவே மூன்று விதமான திசைகளில் இழுக்கப்படுகின்றது. அதாவது வட அயர்லாந்து தனியொரு நாடாக மிளிர வேண்டுமா, பிரிட்டனுடன் இணைந்து விட வேண்டுமா அல்லது ஐரிஷ் குடியரசுடன் சேருவதா என்பதே இந்தக் கேள்விகள். பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என நிற்பவாகள் 'யூனியனிஸ்ற்' என அழைக்கப்படுகிறார்கள். இதை எதிர்ப்பவர்கள் தேசிய வாதிகள் எனப்படுகிறார்கள். இருபகுதியினருமே தமது தரப்புக்கு ஆதாரமாக சுயநிர்ணய உரிமையை முன்வைக்கிறார்கள். வட அயர்லாந்திலுள்ள ஆறு மாவட்டங்கள் (கன்ரீஸ்) இந்த இருதரப்பு வாதங்களுக்கும் நிலைக்களனான பகுதிகள். ஐரிஷ் குடியரசில் 26 மாவட்டங்கள் உள்ளன. IRA எனப்படும் தீவிரவாத இயக்கத்தின் தோற்றம் 1919 வரை முன்கூட்டிப் போகக்கூடியது. கெரில்லாப் போர் முறைமூலம் தாம் பிரிட்டனை ஒருமுறை தோற்கடித்தோம் ஏன் அதனை இம்முறையும் செய்யக்கூடாது என்பதே தேசியவாதிகளது வினாவாகும். இதைவிட INLRA என்ற இன்னொரு ஆயுதக் குழுவும் அங்கே உண்டு. IRA இன் அரசியல் பிரிவின் பெயர் ''சீன் பெயின்'' என்பது.

கடந்த வாரம் பிரிட்டனில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய விவகாரம் இதுவே. இந்த அரசியல் பிரிவான சீன் பெயின் என்பதுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்திய விவகாரம் அம்பலமாகி விட்டது. ஆனாலும் ஜோன். மேயர் தான் பதவி விலகப் போவதில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். பேச்சுவார்த்தையில் இவர்கள் இதயசுத்தியுடன் கலந்து கொண்டனர் என்பதற்கு ஆதாரம் இவர்களது உறுதி.

### சிறுபான்மைச் சிந்தனைகள்

உலகில் எந்த இனம் அல்லது பிரிவை எடுத்தாலும் அது ஏதோ ஒரு விதத்தில் சிறுபான்மையாகவே இருக்கும் என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இந்த உணர்வே உலகில் பிரச்சினைகள் மலிவதற்கு அடிப்படைக் காரணம். அயர்லாந்துப் பிரச்சினை இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு என்பது மட்டுமல்ல இலங்கையிலுள்ள உளப்பிரச்சினைக்கும் காரணம் கண்டறிய உதவுகிறது. பிரிட்டன் தங்களைக் கைவிட்டுப் போய் விடக் கூடாது என்பதில் தீவிரமாக இருக்கும் 'யூனியனிஸ்ட்' கட்சியினர் வட அயர்லாந்தின் ஓரங்குலம் கூட கத்தோலிக்கர் ஆட்சியினுள் வரவிட மாட்டோம் என ஆர்ப்பரிக்கின்றனர். தங்களுடைய விசேடத்துவம், பாரம்பரியம், சிந்தனை வளர்ச்சி யாவுமே கத்தோலிக்கர் ஆட்சியில் சிதறிப் போய் விடும் என புரட்டஸ்தாந்து மதத்தினர் அஞ்சுகின்றனர். ஐரிஷ் குடியரசுக்கும் தங்களுக்கும் இடையிலான எல்லையை எப்படிக் கவனமாகப் பேணுவது என்பதை வைத்தே தேர்தல் முடிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. சமூக, அரசியல், பொருளாதார விஞ்ஞாபனங்கள் தேர்தலில் முன்வைக்கப்பட்டு தோற்றுவிடுகின்றன.

அரசியலாள்ர் கூறும் 'இரட்டைச் சிறுபான்மை' சிந்தனைதான் இலங்கை, காஷ்மீர், வட அயர்லாந்து என்பவற்றில் பிரச்சினைகள் இழுபடக் காரணமாகிறது. இலங்கையில் வட-கிழக்கில் தனிநாடு ஒன்று உருவாகினால் அல்லது ஓரளுவுக்கேனும் சுயாட்சி பெற்றால் கூடப் போதும், தமிழர்கள் இந்தியாவின் தென்கோடித் தமிழர்களோடு சேர்ந்து தம்மை ஆக்கிரமித்து விடுவார்கள் என நிஜமாகவே நம்பும் சிங்கள மக்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களல்லர். இங்கே தாற்பாரியம் -இரண்டு இனங்களுமே தம்மைச் சிறுபான்மையினர் எனக்கருதுவதால் முரண்பாட்டுக்கான தீர்வு பன்மடங்கு சிக்கலாகிறது. வட அயர்லாந்திலும் இதுதான் நிலைமை. அங்கே புரட்டஸ்தாந்து மதத்தினர் கத்தோலிக்கரை விட இருமடங்கிலும் கூடுதலாக உள்ளனர். ஆனால், முழு அயர்லாந்தையும் சேர்த்துப் பார்த்தால் (ஐரிஷ் குடியரசுடன்) கத்தோலிக்கர் மூன்று மடங்கிலும் கூடுலாகி விடுகின்றனர். எனவே புரட்டஸ்தாந்து மதத்தினர் தம்மைச் சிறுபான்மையினர் எனக் கருதுகின்றனர். ஆகவே இருதரப்பிலும் இயல்பான, நியாயமான அச்சம் நிலவுகிறது. உண்மையில் மத அடிப்படையில் இவர்கள் ஏன் இந்தளவுக்கு வேறுபட வேண்டும்? ஏனைய நாடுகளில் இவ்விரு மதப்பிரிவினரும் இப்படி மோதுகிறார்களா என்றால் இல்லையென்ற பதில் தான் கிடைக்கும். சிறுபான்மை என அடையாளங் காட்டுவது வேறுசில அச்சங்களுக்குப் போர்வையிடப் பொருத்தமான ஆயுதமாகிறது. அங்கு பெயரை வைத்தே ஒருவர் ஆங்கிலேயரா அல்லது ஐரிஷா எனக் கூறிவிடுவார்கள். எனவே கத்தோலிக்கராக இருப்பது மட்டுமல்ல - ஐரிஷாக இருப்பதும் பாராட்சம் காட்டப்படுவதற்கு முக்கிய காரணம் என தேசியவாதிகள் குற்றஞ் சாட்டுகின்றனர். மறுபுறத்தில் புரட்டஸ்தாந்து மதத்தினர் யதார்த்தபூர்வமான, நிதர்சன உண்மைகளை வைத்து தமது அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர். ஐரிஷ் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 2 -தேசிய ஆள்புல எல்லையானது முழு அயர்லாந்துத் தீவினையும் உள்ளடக்கியதாகும்- எனக் கூறுகின்றது. வடக்கேயுள்ள ஒவ்வொரு கத்தோலிக்கரும் இதனை பூரணமாக ஆதரிக்க புரட்டஸ்தாந்தவர் பலத்த ஆட்சேபனை கிளப்புகின்றனர். இந்த ஆட்சேபணையில் உள்ள நியாயத்தை தெற்குப் புற (ஐரிஷ்) அரசியல்வாதிகள் கவனத்தில் எடுப்பதேயில்லை. இது முற்றுமுழுதான வெறுப்புணர்வை இருதரப்பிலும் வளர்க்கிறது. இந்த உறுப்புரையைத் திருத்த கத்தோலிக்கர் முயல்வதாக இல்லை.

இதே போன்று, வெறுமனே மத வேறுபாட்டுக்கும் மேலாக ஆட்சி செலுத்தும் பிரிவினை முறைகள் சிலவற்றையும் இங்கு குறிப்பிடலாம். ஐரோப்பாவின் கடுமையான பிற்போக்குவாத நாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுவது ஐரிஷ் குடியரசு. அதற்குள் தாம் உள்வாங்கப்பட்டால் -அதுவும் சிறுபான்மையினர் என்றளவில்- தமது நிலை 'அதோகதி' தான் எனப் புரட்டஸ்தாந்தினர் உள்ளூர அரண்டு போயுள்ளனர். மேலும் அங்கு அரசுக்கும் மதத்துக்கும் இடையிலான நெருக்கம் மற்றைய ஐரோப்பிய நாடுகளைவிட அதிகம். கருத்தடை வில்லைகள் பாவிப்பு, கருச்சிதைவு உரிமை, விவாகரத்து உரிமை, என்பவற்றில் கத்தோலிக்க திருச்சபை முற்று முழுதான கட்டுப்பாட்டை வகித்து வருகின்றது. திருமணஞ் செய்தவர்களுக்கு மட்டுமே அதுவும் மருத்துவரின் சிபார்சின் பேரில் மட்டுமே கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஐரிஷ் குடியரசின் இந்த நிலைப்பாடு வட அயர்லாந்துத் தேர்தலில் 'யூனியனிஸ்ட்' கட்சியினர் அமோக வெற்றி பெற வழிவகுக்கின்றது பிரிட்டனிலுள்ள சட்டங்களின் தாராளத் தன்மையை வட அயர்லாந்து புரட்டஸ்தாந்தினர் அனுபவிக்க யூனியனிஸ்டின் வெற்றி வழிவகுக்கின்றது.

**சிசைரோ-**

அரசியல் கலாசார இடைவெளிகளுடன் சேர்ந்து பொருளாதார இடைவெளி அல்லது ஏற்றத்தாழ்வும் நிலவுகிறது. பொருளாதாரம் பிரிவினையை வலுப்படுத்துகின்றது. ஐரிஷ் குடியரசிலுள்ளவர்களின் சராசரி வருமானம் வடக்கிலுள்ளவர்களிலும் மிகக் குறைவு. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் குடியரசு இணைந்த பின்பும் இந்த 'குறைவு' பெரிதாக மாறிவிடவில்லை. வட அயர்லாந்தில் சமூக நலக் கொடுப்பனவுகளுக்கு பிரிட்டன் மானியம் வழங்குகின்றது. குடியரசின் கீழ் வந்தால் இந்த நலன்கள் அடிபட்டுப் போய்விடும். பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்பவற்றின் நிதியுதவி இல்லாமல் புதிய அயர்லாந்தின் வாழ்க்கைத் தராதரம் வீழ்ச்சியடையும் என ஆய்வறிக்கைகள் வெளியாவதால் இணைப்பு பலவீனப் பட்டுப் போகின்றது.

### வன்முறை வளர்ந்ததேன்?

இக்காரணங்களின் மீதான பிளவு எழுபது வருடங்களாகத் தொடர்கின்றன. இருபகுதியிலுமுள்ள தலைமைகளின் கடந்தகால அணுகுமுறைகள் தொடர்ந்தும் தோல்வியைத் தந்தன. இதன் விளைவாகவே 1960 களிலிருந்து வன்முறைக்கலாசாரம் வேர்விடத் தொடங்கியது. வட அயர்லாந்திலுள்ள கத்தோலிக்கரின் பெரிய கட்சி SDLPஎன்பது. இதற்குப் போட்டியாகச் செயற்படும் IRA குடியரசு வாதத்தை முன் வைக்கின்றது. 1960களின் பின்பே IRAஇன் வன்முறைக் கவர்ச்சி ஆதரவு பெற்றது. குடியியல் உரிமைகளுக்கான போராட்டத்தை அடுத்து 1968 இல் பரவலான வன்முறைகள் வட அயர்லாந்தில் இடம் பெற்றன. 1969 ஓகஸ்டில் பிரிட்டிஷ் இராணுவம் தலைநகர் பெல்பாஸ்ற்றுக்கு அழைக்கப்பட்டது. 1970இல் கத்தோலிக்கர் பகுதியில் ஊரடங்கு உத்தரவு சகஜமாகி விட்டது. அடுத்த வருடம் கடுமையான சட்டங்கள் அறிமுகமாகின. விசாரணையற்றுத் தடுத்து வைப்பு, குற்ற ஒப்புதலை சான்றாக ஏற்றல், பாரதூரமான சித்திரவதைகள் என நிலைமை மோசமாகிச் சென்றது. மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐரோப்பிய நீதிமன்றம் பிரிட்டனை அடிக்கடி கண்டிக்க வேண்டியதாயிற்று.

கத்தோலிக்க மக்கள் குறிப்பிட்ட பகுதிகளில் செறிந்து வாழுமாறு மதகுருவானவர்களால் தூண்டப்பட்டனர். ஒருவர் பகுதிக்குள் மற்றவர்கள் அணிவகுப்பு நடாத்த முடியாத நிலை. மீறிச் சென்றால் வன்முறை வெடிக்கும். ஐரிஷ் மக்களின் கலாசாரத்தில் அடிக்கடி அணிவகுப்பு நடாத்துதல் முக்கியமானதொரு அம்சம். 1972 இல் இப்படியான அணிவகுப்பில் 13 பேரை பிரிட்டிஷ் இராணுவம் சுட்டுக் கொன்றது. இவ்வாண்டில் இறந்தோர் எண்ணிக்கை 467. 1975 இல் கொல்லப்பட்ட 245பேரில் 215பேர் பொதுமக்கள். 1981 இல் IRA உறுப்பினர் பொபி சாண்ட்ஸ் எம்.பி உண்ணாவிரதமிருந்து மேஸ் சிறையில் இறந்தார். அடுத்த இரு மாதங்களில் மேலும் 10 பேர் இவ்விதம் இறந்தனர். 1983இல் புதிய பயங்கரவாதச் சட்டம் பிரிட்டனில் நிறைவேற்றப்பட்டது. தொழிற் கட்சி முதன்முறையாகத் துணிந்து இதனை எதிர்த்து வாக்களித்தது. 1984 இல் பிரிட்டனின் பிரைட்டன் நகரில் பிரதமர் மார்க்கிரட் தட்சர் தங்கியிருந்த கிராண்ட் ஹோட்டலில் குண்டு வெடித்தது. இக்காலப்பகுதியில் குண்டு வெடிப்புகள் பெருகத் தொடங்கியது. இடைக்கிடை சிறிய பேச்சுவார்த்தைகள். சில சலுகைகள். மறுபுறத்தில், 1971 இல் விழிப்புக்குழு என்ற பெயரில் UDA அமைப்பு உருவானது. இதுவும் வன்முறையில் இறங்கிக் குண்டு வெடிப்புகளை நடாத்தி வருகிறது. கத்தோலிக்கரை முக்கியமான இடப்பகுதிகளிலிருந்து அகற்றுவது இதன் பணி. நம்நாட்டு சிங்களப் பாதுகாப்பு முன்னணி, ஜாதிக சிந்தனய என்பவற்றோடு ஒப்பிடக் கூடியது. ஆனால் பின்னையவை இன்னும் வன்முறையைக் கையாளத் தொடங்கியதாகத் தெரியவில்லை. மற்றொரு அமைப்பான UVF(Uister Volunteer Force)கடவுளுக்காகவும் அள்ஸ்ரார் நகருக்காகவும் என்ற கோஷத்துடன் IRA உறுப்பினர்களை அழிப்போம் எனக் கூறுகிறது. இன்று இது தனிப்பட்ட முறையில் முக்கிய கத்தோலிக்கப் பிரமுகர்களைக் கொல்வதில் அக்கறை காட்டி வருகிறது.

### அரசியல் தீர்வென்ன?

குடியரசுவாதிகளுக்கு ஆதரவு வழங்குவோரில் கணிசமானோர் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா நாடுகளில் குடியேறியுள்ள ஐரிஷ் இனத்தவரே. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் தந்தை இங்ஙனம் குடியேறியவர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. சோசலிஸ நாடுகள் IRAயின் போராட்டத்தை நியாயப்படுத்தி வந்தன. பிரச்சாரத்தில் பெருமுதவி அமெரிக்காவிலிருந்து கிடைக்கிறது. வட அயர்லாநது நிலைமையைத் தென்னாபிரிக்காவின் நிலைமையுடன் ஒப்பிட்டு பொருளாதார சமத்துவத்தை அமெரிக்கா வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயுதங்களும் அமெரிக்காவிலிருந்தே வருகின்றன. IRA உறுப்பினர்கள் என வேண்டப்படுபவர்களை அமெரிக்கா பிரிட்டனிடம் ஒப்படைப்பதில்லை.

பிரிட்டனின் குழப்பமும் இதுதான். அரசியல் தீர்வா? இராணுவத் தீர்வா? இராணுவத் தீர்வென்றால் -வட அயர்லாந்தில் மோதும் குழுக்களின் விடயத்தில் நடுநிலை வகிக்காமல் 'பயங்கரவாதத்தை' முறியடிப்பது. ஆளுங்கட்சியிலுள்ள தீவிர வலதுசாரிகள் இதனை ஆதரிக்கின்றனர். அரசியல் தீர்வென்றால் -அங்கே இருதரப்பினரையும் சமரசத்தில் இறங்க வைப்பது. இதில் இருதிறமும் திருப்தியான கூட்டு முயற்சியில் இறங்கினால் மட்டுமே ' பயங்கரவாதம்' முற்றுப் பெறும் என்பது. இராணுவத் தீர்வுக்குச் சாத்தியமில்லை. ஏனெனில் பிரிட்டனின் ஜனநாயக அபிப்பிராயம், ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், அமெரிக்கா என்பன இதற்கு முட்டுக்கட்டை. மேலும் இது எங்கே போய் முடியும், இறுதியில் உருவாகப் போகும் சமூகம் எத்தகையது என்பதும் நிச்சயமில்லை. நேரடி ஆட்சி என்பது குடியேற்றவாதமே என்பதை பிரிட்டன் மறைக்க முடியாது. இரு புறத்திலும் உள்ள தீவிரவாதத்தைக் குறைக்க பிரிட்டன் உடன்படிக்கை ஒன்றை ஐரிஷ் குடியரசுடன் செய்து கொண்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் பிரச்சினையின் வன்முறைப் பரிமாணத்தை அப்புறப்படுத்தலே. இதனை இருபக்கத் தீவிரவாதிகளும் எதிர்த்துள்ளார்கள் என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. மொத்தம் 3,000 இறப்புகளுக்குக் காரணமான போராட்டம் இந்த உடன்படிக்கையுடன் முற்றுப் பெறப் போவதில்லை.

இந்நிலையில் தான், பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் துணிந்து ஒரு தகவலை வெளியிட்டார். தனது அரசுக்கும் IRA யின் அரசியல் பிரிவின் தலைமைக்கும் இடையில் இரகசியப் பேச்சுவார்த்தை நடப்பதான தகவல் இது. பிரஸ்ஸலில் நடைபெற்ற சந்திப்பின் பின் பிரதமரும் ஐரிஷ் தலைவர் அல்பேட் றெயினோல்ட்ஸும் கூட்டறிக்கை விடுத்துள்ளனர். சீன் பெயினை அங்கீகரித்து அதன் தலைவர் ஜெரி அடெம்ஸுடன் பேச்சுவார்த்தை நடாத்தப் பிரதமர் உடன்பட்டுள்ளார். ''பயங்கரவாதிகளுடன் உறவில்லை ஆனால் புதிய கதவுகள் அவர்களுக்காகத் திறக்கப்படும் '' என அறிக்கை கூறுகிறது. யுத்த நிறுத்தம் நீடித்தால் இரு நாடுகளும் கூடுதலாக ஒத்துழைக்க உள்ளன.

நமக்குரிய பாடம் இங்கே தானுள்ளது. அரபாத்தும் ரொபினும் கைகுலுக்குகிறார்கள். நெல்சன் மண்டேலாவும் கிளார்க்கும் நோபல் பரிசைப் பங்கிடப் போகிறார்கள். கம்போடியா கண் சிமிட்டுகிறது. தற்போது மிகப் பழைய 'பகைமை'யான ஐரிஷ் போர் பேச்சுவார்த்தை நோக்கித் திரும்பியுள்ளது. புரட்டஸ்தாந்து தீவிரத் தலைவர் கியூமைலும் கத்தோலிக்கத் தீவிரத் தலைவர் அடெம்ஸையும் உத்தியோக ரீதியில் உயர்த்திப் பிடிக்காமல் அவர்களுடன் இரகசியத் தொடர்புகளை சந்திப்புக்களை ஏற்படுத்தி தீர்வை எட்ட முயற்சிக்கப்படுகின்றது. IRA உலகிலுள்ள மிகப் பெரிய கெரில்லா இயக்கம் என்கிறார்கள். ஆனால் அதனை விடப் பெரியது விடுதலைப் புலிகள் இயக்கம். ஆனால் போராட்டம் காலத்துக்குக் காலம் 'அடையாளப் பிரச்சினை'க்கு உட்படுவதால் எமது நாட்டில் பேச்சுவார்த்தை எட்டி எட்டிப் போகிறது. இயக்கங்களை வெளிப்படையாக அங்கீகரித்துப் பேசக் காட்டப்பட்ட தயக்கம் பி.எல்.ஓ-இஸ்ரேல் விடயத்தில் உடைந்தது. எனவே இனியும் தயக்கங்கள் ஏன் எனக் கேட்கத் தோன்றும்.

→ 11

நன்றி - நூலகத்திட்டம்



## தமிழ்க் கட்சிகளின்...

பொறுக்கியெடுத்த நம்பகமான ஏஜென்டுகளாகத் தொழிற்பட்டதும் தெரியவரும்.

1987 ஒக்டோபரில் தொடங்கிய இந்தியப்படையின் 'அமைதிகாக்கும்' யுத்தம் அகதி முகாம்களுக்குக் கூட ஷெல்லடிக்கும் அளவுக்குப் போன பின்னரும் இப்போதும் கூட இந்தியப்படையே தமிழ் மக்களின் உண்மையான பாதுகாவலன் என்று கொழும்பிலிருந்து கொண்டு (Sunday Times)அறிக்கைவிடவும் அது தயங்கியதில்லை. ஈழக்கோரிக்கையை கைவிட்டு (புரட்சியையும் சேர்த்துத்தான்!) மாகாண சபைக்குத் தாவிய போதும் சரி, ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்ட போதும் சரி அதுபற்றி தமிழ்மக்களுக்கோ, தியாகமடைந்த தனது சொந்த உறுப்பினர்களுக்கோ கொடுக்கவேண்டிய அடிப்படை மதிப்பையாவது கொடுத்து அதற்கான காரணங்களை விளக்கியதில்லை. ஈழக் கோரிக்கைக்கான தேவை இல்லாமல் போய்விட்டதா என்பது பற்றி வாய் திறக்கவில்லை. தாம் ஏன் மாகாண சபையை ஏற்றுக்கொண்டார்கள், அந்த 'இடைக்காலத்' தீர்வு எப்படி தமிழ்மக்களுக்கு உதவும் என்று கூறியதில்லை.

சரி, அதைத்தான் விட்டாலும் திம்புக் கோரிக்கையைக் கூடக் கைவிட்டு என்ன அடிப்படையில் இவர்கள் மாகாண சபையை ஏற்றுக் கொண்டார்கள்? அது வெறும் 'இடைக்கால' தீர்வு தான் என்றால், அந்த நிரந்தர தீர்வு எது? அது என்ன ஈழமா? அல்லது வேறேதுமா?

மாகாண சபை போனபின் தாலம்சக் கோரிக்கையை வைத்து தெரிவுக்குழுவுடன் பேசினார்களே அது எதற்காக? மாகாணசபைக்குத்தானா அல்லது மாவட்ட சபைக்கா?.....

இவ்வாறான கேள்விகள் எதற்கும் இது வரை இவர்களிடமிருந்து உருப்படியான பதில்கள் எதுவுமில்லை. ஆக, அரசியல் ரீதியாக எந்த உறுதிப்பாடும் இல்லாமல் ஒவ்வொரு சிறு காற்றசைவுக்கும் ஆடிக்கொண்டிருக்கும் இவர்கள் இப்போது கோரும் 'சாத்தியமான' தீர்வு என்பது தமிழ்மக்களுக்கு எதைத் தான் பெற்றுத்தரப் போகிறது? இடைக்காலத் தீர்வு என்ற போர்வைக்குள் எதை மறைத்துக்கொள்ள முயல்கிறது ஈ.பி.ஆர்.எல்.எப்.

அவர்கள் எல்லாக் கணக்கும் பிழை, என்றால் சரியாகச் செய்வது எப்படி? என்று கெட்டித்தனமாகக் கேட்கும் போதே கணக்கு செய்வதாக தாம் கணக்கு விடுவதை மறைக்கிற முயற்சி நிர்வாணமாக தெரிந்து விடுகிறது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்று கூறிக் கொள்ளும் இவர்கள், அதற்குள் என்ன தீர்வு சாத்தியம் என்று கூறவேண்டுமென்று இப்பத்தியில் எழுதினால், அது தீர்வு என்ன என்று கேட்டு விடுகிறதை ஒரு சரியான பதில் என்று நினைக்கிறார்கள் போலும்.

தீர்வு எதுவெனத் தெரியாவிட்டாலும் எனது சிற்றறிவுக்கெட்டியவரை தெளிவாகத் தெரிவது என்னவென்றால்

(1) ஒற்றையாட்சி முறைக்குள் எந்தத்தீர்வும் சாத்தியமில்லை.

(2) சிங்கள பௌத்த பேரினவாத அடிப்படையை மாற்றியமைக்காதவரை எந்தத்தீர்வுக்கும் அரசு முன்வரப் போவதில்லை.

(3) தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை தீர்க்கக்கூடிய எந்தத் தீர்வும் வெறும் பேரம் பேசலால் பெற்றுவிடப்படமுடியாது.

(4) சமஷ்டி முறையிலான ஒரு அமைப்பு முறை முழுமையாக அங்கீகரிக்கப்படுமானால் மட்டுமே நாடு பிளவுபடுவதற்கான நிலைமையைப் பாதுகாக்க முடியும்.

(5) எந்தத் தீர்வும் இரு தேசங்களின் பிரச்சினை என்ற அடிப்படையில் எடுக்கப்பட்டதாக இருப்பின் மட்டுமே அது சாத்தியமாகும். அதாவது சுயநிர்ணய உரிமை ஒரு முன் நிபந்தனையாகும்.

(6) அதுவரைக்கும் ஈழக் கோரிக்கைக்கான நியாயப்பாடுகள் இல்லாமல் போய்விடப் போவதில்லை.

ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேயே இப்பத்தியில் நான் எழுதுகிறேன்.

கட்சி எடுக்கும் முடிவுக்கு ஏற்றவிதத்தில் பேனைபிடிக்கும் தோழரடிப்பொடிகளின் பிரச்சினை ஒரு உண்மையான பத்திரிகையாளனுக்கு எப்போதும் இல்லை, அதை அவன் அனுமதிக்கப் போவதும் இல்லை.

அவ்வளவுதான்!

## வடக்கிலிருந்து....

முஸ்லீம் குழுக்களினால் பெருமளவு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதற்குப் பதிலாக ஒரு வன்முறை வெடிப்பதைத் தடுக்கவே நாம் அவர்களைப் போகச் சொன்னோம். ஆனால் நிலைமை சுமுகமானதும் அவர்கள் திரும்பி வர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் நாம் கூறினோம். நீங்கள் இந்த விளக்கத்தால் திருப்தி அடைவீர்கள் என நான் நினைக்கவில்லை.

**கௌ.பொ: ஆம். ஏனென்றால் 14 வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ் போதித்த பேராசிரியர் நு·மான் போன்றவர்கள் குறித்து என்ன சொல்லப் போகின்றீர்கள்? தெற்கிலே சிங்களப் பேரினவாதிகளும் இதைத் தானே செய்தார்கள்? கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் போன்றதல்லவா, இதுவும்?**

அ.பா: பிரச்சினை என்னவென்றால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் எவ்வாறு கொடுமைக்குள்ளானார்கள், எவ்வாறு ஆயிரக்கணக்கில் இந்தியாவுக்கு ஓட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பது பற்றிய எமது பிரச்சினையை உங்களால் பார்க்க முடியவில்லை என்பதே. கிழக்கு மாகாணத்திலிருந்து 8,000 தமிழர்கள் துடைத்தெறியப்பட்டார்கள். இவற்றில் பல அரச பின்பலத்துடன் முஸ்லீம் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டவையே.

**கௌ.பொ: அதுதான் முக்கியமான விடயம். இந்த விடயங்கள் எவ்வளவு தான் உண்மையானதாக இருந்த போதும் இந்தக் கொலைகளையிட்டு முஸ்லீம் சமூகம் ஒரு சமூகம் என்ற முறையில் எதையாவது செய்திருக்க முடியுமா? உதாரணமாகப் பயங்கரவாதத் தாக்குதல்களையும் குண்டு போடுதல்களையும் பற்றி நடக்கும் விவாதங்களைப் பாருங்கள். இந்தத் தாக்குதல்களையிட்டு தமிழர்கள் என்ற முறையில் அவர்களால் எதையாவது செய்ய முடியுமா? கொழும்பில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு ஒன்று புள்ளிவிபர அடிப்படையில் ஒரு தமிழரால் வைக்கப்பட்டிருப்பதற்கான நிகழ்தகவே அதிகமாக இருப்பதால் நூற்றுக்கணக்கில் தமது அன்றாட அலுவல்களைக் கவனித்துவரும் அப்பாவித் தமிழர்களைக் கைது செய்வதையோ, துன்புறுத்துவதையோ நியாயப்படுத்தி விட முடியுமா?**

அ.பா: அப்படியானால் ஏன் சிங்களப் பொதுமக்களிடமிருந்து பரந்தளவில் சிங்களப் பேரினவாத இனஅழிப்பு நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் போது எதிர்ப்பு ஏதும் கிளம்பவில்லை.

**கௌ.பொ: திரும்பவும் 50,000 முஸ்லீம்கள் வெளியேறுமாறு கோரப்பட்ட போது தமிழர்கள் ஏன் மௌனமாக இருந்தார்கள் என்ற அதே கேள்வி எழுகிறதல்லவா?**

அ.பா: இதில் எந்தவொரு முஸ்லீமும் வன்முறைக்குள்ளாக்கப்படவில்லை; எம்மினால் கொல்லப்படவோ அல்லது துன்புறுத்தப்படவோ இல்லை.

**கௌ.பொ: பாரம்பரியத் தாயகக் கோட்பாடு மிகத் தெளிவாகக் காட்டுவது என்னவென்றால் தமது சொந்த இடத்திலிருந்து அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றுகின்ற மிகப் பெரிய வன்முறையையே என்று தான் இதனைக் கருத வேண்டியிருக்கிறது. வடக்குக் கிழக்கில் இனச் சுத்திகரிப்பைச் செய்வது விடுதலைப்புலிகளின் ஒரு கோட்பாடாக உள்ளதா?**

அ.பா: இல்லை.

counter pointக்கு அன்டன் பால சிங்கம் அளித்த பேட்டியிலிருந்து

நன்றி:Counter point

## சிசில் போட்ட...

அவர்கள் வெறுமனே அதற்காக தள்ளப்படுபவர்கள்.
தோல்விக்கான பழியை மட்டும் எப்போதும் சுமக்க வேண்டியவர்கள்!
'மனோநிலைபாதிப்படையும்' என அங்கலாய்க்கும் அவர்களுடைய யுத்த மேனியா அவர்களுக்கு உண்மைகளைப் பார்க்க அனுமதிப்பதில்லை.

வெற்றியும் - தோல்வியும் -வெற்றியும் என்ற சுழற்சிக்குள் அகப்பட்டுப் போய் அதுவே தமது உலகமாகிப் போனவர்கள், அவர்கள்.
ஆனால் இறுதி வெற்றி இதற்கும் அப்பால் இருந்து தீர்மானிக்கப்படுகிறது.
இதையறியாத 'அவர்களில்' ஒருவர்தான் -பாவம் -இந்த சிசிலும்! அதனால் தான் அவருக்கும் இந்த உண்மை தெரியவில்லை.
இறுதி வெற்றி பற்றி அவரால் பேச முடியாது; அவர் பேசுவதெல்லாம் இன்னொரு கிளாலி பற்றியோ, பூநகரி பற்றியோ தான்.
திட்டமிட்ட இனஒதுக்கல் வெற்றி பெறுவதற்கு முயல்வதால் உருவாக்கப்பட்ட 'யுத்த காரணிகள்' பற்றி அவருக்கும் தெரியாது; அடுத்து வரப் போகிறவருக்கும் தெரியாது.
ஆக, யுத்தங்கள் தொடரும். தளபதிகள் வருவர்; போவர். நடாத்துபவர்கள் தமது தோல்விகளை இராணுவத்தின் தலையில் கட்டுவர். சாவிலும், பிணக்குவியல்களிலும், அழிவுகளிலும் தமது அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பும் அவர்கள் யுத்தங்களை நாடாத்துவது தவிர்க்க முடியாதது.
நடாத்துபவர்கள் முடிவுக்கு வராத வரை 'ஈடுபடுபவர்கள் பற்றி பேசி என்ன பயன்?'
இதுதான் நிலைமை என்றானபின் இங்குள்ள மக்களின் நிலை என்ன என்ற கேள்வி எழுகிறது.
நுளம்பை ஒழிக்க நுளம்பின் உற்பத்தி நிலைகளை அதற்கான காரணிகளை அகற்றுவதற்குப் பதில், நுளம்புத்திரி உற்பத்தி செய்வதில் ஊக்கங் காட்டும் நாடு இது. இந்நாட்டு மக்களுக்கு உள்ள வழி ஒன்றே ஒன்றுதான்.
யுத்தத்துடன் வாழப் பழகிக் கொள்வது!

## வெயிலோ...

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜனநாயக மறுப்பினால் சொல்லொணாத் துன்பம் அனுபவிக்கிறார்கள்.

இரண்டு அடக்கு முறைகளையும் ஒரே தட்டில் வைத்து நிறுத்துப் பார்க்க முடியாது.

முக்கியமாகச் சில சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களின் நலன் புலிகளின் நலன்களுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. அதனாலும், புலிகளைச் சார்ந்து நிற்க வேண்டிய தேவை யாழ்ப்பாணத்து மக்களிடம் காணப்படுகிறது.

ஆனால் மக்களுக்கான விடுதலையைப் புலிகள் பெற்றுத் தரமாட்டார்கள் என்பதும் தெளிவு. முஸ்லீம் மக்களை அடித்துத் துரத்தியவர்களால் எவ்வாறு தமிழ் மக்களுக்கான விடுதலையைப் பெற்றுத்தர முடியும் என்பதும் ஒரு கேள்வி...

சில வேளை 'தமிழு'க்கான விடுதலை பெறலாம். அதனால் மக்களுக்கு எது வித பயனும் ஏற்படப் போவதில்லை.

ஆனால் இது தெரிந்தும் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களால் தமிழ் மக்கள் புலிகளுடன் சமரசப் பட்டு நிற்கிறார்கள்.

சிறீலங்காவின் இனவாத அரசு, தொடர்ந்தும் தனது இனவாதத்தைக் கட்டியெழுப்பும் வரைக்கும் புலிகளின் வெற்றியையும், வளர்ச்சியையும் ஒரு வராலும் தடுத்து நிறுத்தி விடமுடியாது.

இத்தகைய பின்னணியில் யாழ்ப்பாணத்து மக்களின் மனநிலையை, அத்தகைய மனநிலையினூடான துன்பத்தை, துன்பத்திற்கும் மேலாக வாழ முயல்வதை, வாழ்வதற்காகப் போராடுவதை, போராடுவதற்காக வாழ்வதை இக்கட்டுரை சுட்ட முயல்கிறது.

அவ்வகையில் இக்கட்டுரையானது ஓர் எவுக்காயினும், யாழ்ப்பாணத்து இன்றைய அனுபவங்களை வாசகர்களுக்கு தொற்ற வைத்திருந்தால், மகிழ்வேன்.

வாழ்வில் பிடிப்புக் கொண்டவர்கள்; வாழ்வில் உறுதி கொண்டவர்கள். வாழ்வினை எதிர் கொள்பவர்கள். அவர்களை எச்சரித்தாலும் அழித்து விட முடியாது. சிறீலங்கா அரசாயினும் சரி, புலிகளாயினும் சரி, இந்திய அமைதிப்படையாயினும் சரி.

வேருக்குள் உறுதி கொண்ட வேம்புகள் அவர்கள்.

## தொண்டா விவகாரம்

-குறிப்பாக வட-கிழக்கு முஸ்லீம்கள்-பௌத்த சிங்களப் பேரினவாதம் குறித்து தெளிவும் எச்சரிக்கையும் கொண்டிருந்தாலன்றி தமது இலக்கை அடைய முடியாது. இந்த பௌத்த-சிங்களப் பேரினவாத உணர்வலைகள் ஆங்காங்கே அவ்வப்போது எழும்பித் தணிந்து விடுகின்ற ஒன்றல்ல. மாறாக இந்த உணர்வுகள் அரசின் உயர்மட்டத்தில் இருந்து மிகச் சாதாரண கிராமச் சங்கம் என நாட்டின் சகல நிறுவன அமைப்புக்களிலும் ஆழமாகவும் வலுவாகவும் புதைந்திருக்கின்றன. இதனால்தான் ஏதாவது ஒரு சிறுபான்மை இனத்தின் மிகச் சிறிய உரிமைக்கான கோரிக்கை முன்வைக்கப்படுகின்ற போதும் கூட பேரினவாத உணர்வலைகள் மிக இலகுவாக வெடித்துக் கிளம்ப முடிகின்றது.

இலங்கை முஸ்லீம்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காக சிங்கள மக்களின் நல்லெண்ணத்திலும் ஒரு சிங்கள அரசியல் தலைவரின் ஆளுமையிலும் நம்பிக்கை வைப்பது எவ்வளவு தவறானது என்பதை நிரூபிக்கும் விதத்திலேயே இந் நாட்டின் ஒவ்வொரு முக்கிய நிகழ்வும் அமைகின்றது. இதுவரை காலமும் இவ்வாறு நம்பிக்கை வைத்து வந்திருந்தும்கூட இலங்கை முஸ்லீம்கள் அரச உயர் அதிகார மட்டங்களினால் கவனிக்கத் தேவையற்றவர்களாக அரசியல் முக்கியத்துவமற்றவர்களாகவே இன்னமும் கணிக்கப்படுகின்றனர். இதை நிரூபிக்க வருடக்கணக்காக அகதிகளாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்ற வடபகுதி முஸ்லீம்களை விட வேறு உதாரணம் தேவையா?

முஸ்லீம்களை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்து அதன் மூலம் அரசியல் பேரம் பேச முனைகின்ற ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைமை போன்ற அரசியல் தலைமைகள் முஸ்லீம்களின் அடிப்படை உரிமைகளை வென்று கொள்வது ஒருபுறமிருக்க, மிகச் சாதாரண கோரிக்கைகளுக்கான பேரம் பேசுதல் கூட அவ்வளவு இலகுவாக சாத்தியமாகாது என்பதைப் புரிந்து கொள்வது நன்று. சிங்கள அரசின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்வதல்ல, மாறாக நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி வலுப்பெற்றுள்ள பௌத்த-சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறை வெளிப்பாடுகள் குறித்த தெளிவான புரிதல்களை ஏற்படுத்துவதும் சகல முனைகளிலும் பேரினவாதத்திற்கெதிராக போராடுவதும் தான் இலங்கை முஸ்லீம்களின் தனித்துவத்தையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான சரியான மார்க்கமாக இருக்கிறது. இதைச் சாதிக்கக் கூடிய துணிவும், சமூக நேர்மையும் கொண்ட தலைமைத்துவத்தை இன்னமும் பெற்றுக் கொள்ளாதிருப்பதுதான் இலங்கை முஸ்லீம் சமூகத்தின் இறுதிப் போயுள்ள இன்றைய அவலங்களுக்கெல்லாம் அடிப்படை.

## புது இரத்தம்...

ரோட்டில்/ அலாது பட்டு சைக்கிளோட்டி வீட்டுக்குப் போனோம்''.

இவர் கவிதைகளில் படிமம் குறைவாகவே காணப்படுகின்றது. அது சில சமயங்களில் இவர் வெற்றியையும் அதிகப்படுத்துகிறது; வித்தியாசப்படுத்துகிறது. இவரது கவிதைகளின் பார்வைப் பரப்பும் புதிதாக இருக்கிறது பாருங்கள்- / '' இனி, அனைத்தையும் கழுவிக் கொண்டு போக/ சத்தமில்லாத மழை நீண்ட நேரம் அமர்ந்தமர்ந்து தூறியது/ கிறவல் பாதையில் புதைந்து புதைந்து வந்தேன்/ ஈனஸ்வரத்தில் பூனையைப் போல மயில்கள் அகவின./ பட்டி மாடுகள் நிலவில் மேய்ந்து பிறகும் நனைய நின்றன''./ எனும் ந.செ மின் வரிகள் அனுபவத்தை அழகாகத் தருகின்றன.

ஒரு உண்மை இது தான். 80களின் இறுதியில் கவிஞர்களுக்குச் சூழல் துன்பம், மரணம், இழப்பு, என விதவிதமான அனுபவங்களை வழங்கியது. அக்கவிஞர்களின் கவிதை அவ்வனுபவங்களின் தளத்திலிருந்து முளைத்தெழுந்தது. ஆனால் 90களின் ஆரம்பம்- அவ்வாறல்ல. இக்கவிஞர்களுக்குக் கிடைக்கிற சிறுசிறு அனுபவங்களையும் அலாதியான கவிதையாக்கி விடுகிறார்கள். அதுவே சிறப்பு.

ஈழத்துக் கவிதை பற்றி நாங்களே சொல்வதற்கு சிரமமாக இருந்தாலும் சொல்லித்தான் ஆக வேண்டும்: ''என்றோ ஒரு நாள் இருந்து பார்'' உலகத்தரத்தில் ஈழத்தின் கவிதை அதன் உச்சத்தைத் தொடும்.

## வன்முறைக்கு

வட அயர்லாந்து பிரிட்டனின் ஒரு பகுதியல்ல, அப்பகுதி விடயம் பிரிட்டிஷ் பாராளுமன்ற நடவடிக்கைகளை இனியும் ஆக்கிரமிக்கமாட்டாது, அங்கு தேசிய வாதம் (கத்தோலிக்கர்) இணைப்புவாதம் (புரட்டஸ்தாந்தினர்) என்பவற்றுக்கு இடையில் அரசியல் சமநிலை காணல், ஐரிஷ் மக்கள் ஒன்றாக இணைதல் இயற்கையாகவும் தவிர்க்க முடியாததாகவும் அமையலாம் - என்ற நான்கு அடிப்படைகளை முன்வைத்து நடத்தப்படும் பேச்சுவார்த்தை ஒரு தீர்வினைத் தரலாம் என நம்பப்படுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

# கடத்தப்பட்ட பொறியியலாளர் கொலை

## பின்னணியில் எழுகின்ற கேள்விகள்

கரன்

கொழும்பு நகர்ப் பகுதியில் வைத்து 'காணாமல் போன' பொறியியலாளர் திரு.குமாரவேலு ஹரன் என்பவரின் உடல் கொழும்பு பிரதான வைத்தியசாலைச் சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகச் சரியாக ஒரு மாதத்தின் பின் தெரிய வந்துள்ளது. கொழும்பு காலி கடுகதிப் புகையிரதத்தில் மோதுண்டு இறந்ததாகக் கூறப்பட்ட இவரது உடல் பெற்றோரினால் அடையாளம் காணப்பட்டது. கொழும்பு ஆமர் வீதியில் வைத்து வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களால் கடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இவரது உடல் வைத்தியசாலைச் சவச்சாலைக்கு வந்து சேர்ந்தது எவ்வாறு என்பது சந்தேகத்திற்கிடமாக்வே உள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலக்கம் 551/2 வன்றோயன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய குமாரவேலு ஹரன்(பாபு) 1993/11/14ம் திகதி கொழும்பில் வைத்து காணாமல் போனார். 1982ம் ஆண்டு மேற்படிப்பை மேற்கொள்வதற்காக இந்தியா சென்ற இவர் 1989இல் கட்டிடப் பொறியியலாளராக சமக்கோன் லிமிடெட்டில் இணைந்து கொண்டார். கண்டியை வேலைத்தளமாகக் கொண்ட இவர் தீபாவளியைக் கொண்டாடுவதற்காக கொழும்பில் உள்ள பெற்றோரிடம் வந்த பொழுதே 'காணாமல் போனார்'.

இவர் காணாமல் போனது தொடர்பாக பெற்றோர் கொழும்பில் உள்ள மனித உரிமைகள் குழுக்களிலிருந்து தமிழ்க் குழுக்கள், பொலிஸ் நிலையங்கள், பாராளுமன்ற எம்.பிக்கள் ஈறாக முறையீடு செய்ததோடு அவரைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளில் இறங்கினர். ஆனால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இது பற்றிய செய்தி ஒன்றை சரிநிகரும் வெளியிட்டிருந்தது.

இடையில் வெள்ளவத்தையில் இடம் பெற்ற புகையிரத விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாக பெற்றோர் அறிந்து பொலிஸ் நிலையம் சென்று விசாரித்துள்ளனர். ஆனால் விபத்தில் இறந்தவர் 45வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸ் நிலைய முறைப்பாட்டில் எழுதப்பட்டிருந்தது. அதனால் அது தொடர்பாக அக்கறை செலுத்தாமல் தொடர்ந்தும் தேடிக் கொண்டிருந்தனர்.

இதேவேளை கொழும்பில் நடக்கும் அண்மைக்கால கடத்தல்கள் போன்றே தன் மகனும் கடத்தப்பட்டுள்ளார் எனக் கருதிய தாயார் அவரை விடுதலை செய்யுமாறு வேண்டி காலிமுகத் திடலில் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதற்கு ஆயத்தமானார். ஆனால் ஏனோ பின் அம்முயற்சி கைவிடப்பட்டது.

நீண்ட இடைவெளியின் பின் கடந்த டிசம்பர் 3ம் திகதி வீரகேசரியில் மேற்படி ஹரனின் அடையாள அட்டை இருப்பதாகவும் உரியவர் வந்து பெற்றுக் கொள்ளும்படியும் வெளியிடப்பட்ட விளம்பரத்தை அடுத்து பெற்றோரினால் அடையாள அட்டை பத்திரிகைக் காரியாலயத்தில் இருந்து பெறப்பட்டது. இவ் அடையாள அட்டையைக் காரியாலயத்தில் சேர்ப்பித்தவர் ஹாமஸ் அவெனியூ லொட்ச் ஒன்றைச் சேர்ந்தவர் என்று பின்பு தெரிய வந்தது.



ஹரன

இவ் லொட்ஜில் இது தொடர்பாக விசாரித்த போது வேறு ஒருவரே கண்டெடுத்துத் தம்மிடம் ஒப்படைத்ததாகக் கூறியுள்ளனர். மேலும் 11ம் மாதம் 14ம் திகதி வெள்ளவத்தையில் புகையிரதத்தினால் மோதுண்டு ஒருவர் இறந்ததாகவும் பொலிஸ் நிலையத்தில் இது பற்றி விசாரிக்கும் படியும் கூறியுள்ளனர்.

மீண்டும் பொலிஸ் நிலையம் சென்ற பெற்றோர் இது தொடர்பாக விசாரித்த பொழுது கொழும்பு சவச்சாலையில் பிரேதம் ஒப்படைக்கப்பட்டதாக பொறுப்பதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது. இவ் விபத்து தொடர்பான முறைப்பாட்டில் 1993/11/14ம் திகதி இரவு 7.40க்கு காலி மாத்தறை கடுகதிப் புகையிரதத்தில் மோதுண்டு இறந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப் பிரேதம் புகையிரதசாரதியினால் வெள்ளவத்தை புகையிரத நிலைய அதிபரிடம் கொடுக்கப்பட்டு பின் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது.

உடனடியாகவே சவச்சாலைக்குச் சென்ற பெற்றோர் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் விசாரித்த பொழுது பிரேதம் புதைக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் புதைக்கப்பட்ட பிரேதத்தை கிளறி எடுப்பதற்கான கல்கிசை நீதிமன்ற உத்தரவுடன் மீண்டும் சென்று சவச்சாலைப் பொறுப்பதிகாரிக்ளிடம் விசாரித்த பொழுது இன்னும் புதைக்க்ப்பட வில்லை. இன்றுதான் புதைப்பதற்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. உடன் நிறுத்துவதற்கு முனையுங்கள் எனக் கூறியுள்ளனர். பின் பெற்றோரின் தீவிர முயற்சியினால் பிரேதம் மீட்கப்பட்டு 93.12.12ல் தகனம் செய்யப்பட்டது.

ஆனால் இம்மரணம் தொடர்பாக இன்றுவரை அனைவர் மத்தியிலும் சந்தேகமே எழுந்துள்ளது. காரணம் இவர் காணாமல் போன 14ம் திகதி மாலை 6.45ற்கும் 7.00மணிக்கும் இடையில் இவரது சகோதரன் 155ம் இலக்க பஸ்சில் இவர் கொட்டாஞ்சேனை நோக்கிச் சென்று கொண்டிருந்ததை வெள்ளவத்தை விஹாரலேன் பஸ்தரிப்பில் கண்டுள்ளார். அப்படியிருக்க 7.40ற்கு எவ்வாறு புகையிரத நிலைய வீதியில் நடந்து சென்றிருக்க முடியும்?

சாதாரணமாக புகையிரத வீதியில் நடந்து செல்பவர் ஒருவர் புகையிரதத்தால் மோதப்பட்டால் பிரேதம் தூக்கி எறியப்படுவதோ சின்னாபின்னமாக்கப்படுவதுதான் சாத்தியம் அதுவும் கடுகதி புகையிரதத்தினால் மோதப்பட்ட ஒருவரின் உடலில் எவ்வாறு தலையிலும் காலிலும் மட்டும் சிறு காயம் இருத்தல் சாத்தியம்?

விபத்தில் மோதப்பட்ட நபரின் சேட்டும் நீளக்காற்சட்டையும் பெரியளவில் பாதிக்கப்படாத நிலையில் எவ்வாறு அடையாள அட்டை அவரின் பொக்கற்றுக்களில் அல்லது அருகில் இருக்காமல் வேறு இடத்திற்கு சென்றிருக்க முடியும்?

இரகசியப் பொலிசாரினால் எடுக்கப்பட்ட படத்தில் பிரேதம் உருக் குலையாமல் இருந்ததை குறிப்பாக முகம் சிதையாமல் இருந்ததைப் பெற்றோர்கள் பார்த்துள்ளனர். ஆயின் 28 வயதுள்ள ஒருவரை 45 வயதுள்ளவராக எவ்வாறு மதிப்பிட்டிருக்க முடியும்?

சவச்சாலையில் சென்று முதலில் பிரேதத்தைத் தருமாறு கேட்டபொழுது புதைக்கப்படாமல் இருந்த பிரேதம் ஏன் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது?

இனம் புரியாமல் இருந்த ஒருவரின் பிரேதம் சவச்சாலையில் ஒப்படைக்கப்படுமாயின் பத்திரிகைகளில் அது தொடர்பாக ஏன் விளம்பரப்படுத்தப்படவில்லை?

சந்தேகத்திற்கிடமான முறையில் கொல்லப்பட்ட ஒருவராக இருப்பதால் ஏன் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. உட்படுத்தப்பட்டிருப்பின் அது தொடர்பாக ஏன் வெளிப்படுத்தப்படவில்லை?



யூட் அருள்தாஸ்

இந்தக் கேள்விகளும் வழமையான எல்லாக் 'காணாமற்போன' அப்பாவிகளினதும் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்களின் கேள்விகளைப் போல பதிலற்ற கேள்விகளாய்த்தான் போகுமோ என்னவோ? இதற்கிடையில், யூட் அருள்தாஸ் அருளப்பு என்ற மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். கடத்தல்காரர்கள் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தெரிவித்து விட்டே கடத்திச் சென்றுள்ளார்கள் என்று தெரிய வருகிறது. ஆயினும் பொலிஸ் நிலைய அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர்!

# மணிவாசகம்

### முடிவு அதுதான்

''அமைச்சர் தொண்டமானின் தோட்டத்தொழிலாளர் ஏலத்திற்கு எந்தச் சிங்கள அரசியல் கட்சியும் அகப்படவோ அல்லது அனுகூலம் தெரிவிக்கவோ வேண்டாம்! எந்தச் சிங்களக் கட்சியும் இந்தப் பொறியில் அகப்பட்டால் அக்கட்சியின் முடிவும் அதுவாகும்.''

**அமறபுற மஹா சங்க சபையின் வருடாந்த பிரதிநிதிகள் மகா சங்க சபை 04.12.1993 அன்று கல்கிஸ்ஸ தர்மபாலாறாம மஹாவிகாரையில் கூடிய போது மடிகே பஞ்ஞாசீஹ மஹா நாயக்க தேரர்' - லங்காதீபவில் -07.12.1993**

### பலியாக வேண்டாம்

''சிறுபான்மை இனக்குழுக்களின் வாக்குகளினால் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் சிங்கள இனத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டாம். தொண்டமானின் வாக்கு ஏலத்திற்கு பலியாவதைத் தவிர்க்குமாறு இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமும் கோருகிறோம்.''

**சர்வதேச பௌத்த சகோதர அமைப்பு -திவயினவில் -07.12.1993**

### தமிழ்ப் பத்திரிகைகளும் இனவாதத்தை தூண்டுகின்றன.

''சிங்கள இனவாதத்தைத் தூண்டும் செய்திகளை வெளியிடுவதாக ஐ.தே.க. உறுப்பினரும், உப தலைவருமான புத்திரசிகாமணி மத்திய மாகாணசபையில் சிங்களப் பத்திரிகைகள் மீது குற்றஞ்சாட்டினர். ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளாலும் தமிழ் இனவாத உணர்ச்சிகளைத் தூண்டும் செய்திகளை வெளியிடும் இயக்கமொன்று நடக்கிறது. அதனால் சிங்களப் பத்திரிகைகள் மீது மட்டும் குற்றஞ் சாட்டக் கூடாது.''

**மாத்தளை மாவட்ட ஸ்ரீ.ல.சு.க. மத்திய மாகாணசபை உறுப்பினர் ஜனக்க பீ.தென்னக்கோன் -திவயினவில் -07.12.1993**

### அப்பாவிகள் மீது இல்லை!

''அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் வடக்கில் எல்.ரீ.ரீ.ஈ. இடங்களைக் குறி பார்த்தே குண்டுகளைப் போடுகிறது. அங்குள்ள அப்பாவிப் பொது மக்கள் வாழும் இடங்களில் குண்டுகள் போடுவது இல்லை.''

**பாராளுமன்ற விவகார, சுற்றாடல் துறை அமைச்சர் விமல் விக்ரம சிங்ஹ -லங்காதீபவில் -09.12.1993**

### ஏன் இந்த அவலம்?

''இன்று எமக்கு இனம் என்ற வகையில் பயத்துடனும், சந்தேகத்துடனும் வாழ வேண்டியுள்ளது. எக்கணத்தில் குண்டுத் தாக்குதல்கள், புலித் தாக்குதல்கள் நடைபெறும் எனக் கூற முடியாதுள்ளது.''

**றத்மலானை பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபையின் பதிவாளர் அத்துடாவே பியறதன தேரர் -லங்காதீபவில் -09.12.1993**

### தொண்டமானின் உதவி

''மத்திய மாகாண சபையின் புதிய மாகாண அரசாங்கமொன்றை அமைப்பதற்காக எதிர்க்கட்சிகளின் கட்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவதாகக் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் எஸ்.தொண்டமான் எனக்குக் கூறினார்.''

**எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க -திவயினவில் -09.12.1993**

### தமிழரும் உதவி

இவ்யுத்தத்தில் இனவாதம் இல்லை. யுத்தம் செய்யப் பட வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும். அநீதிக்கும், அநியாயம் செய்பவர்களுக்கும் எதிராகப் போராட வேண்டும். துட்டகைமுனு மன்னனும் அன்று செய்தது அதுவேயாகும்.

இன்று நடைபெறும் யுத்தம் அவ்வாறானதொன்றாகும். இவ்யுத்தத்தை இரு சாரரும் எதிர்க்கிறார்கள். யுத்தக் களத்திலுள்ள சிப்பாய்களுக்கு உதவிகள் சேர்க்கும் போது கொழும்புச் சிங்களவர்களை விடத் தமிழ் இனத்தவர்களே உதவி அளித்தனர்.''

**ஸ்ரீ லங்காப் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் காமினி பொன்சேக்கா -திவயினவில்- 09.12.1993**

### அரச அதிபரும் அவர்கள் பக்கம்

யாழ்ப்பாண அரச அதிபர் எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளினால் அப்பாவிக் கிராமவாசிகள் கொல்லப்படும் போது எதுவும் பேசவில்லை. ஆனால் இன்று இராணுவம் வடக்கிற்கு குண்டு போடுவதால் சாதாரண மக்கள் கொல்லப்படுவதாக அவர் கூறுகிறார்.

**கொழும்பு மாவட்ட ஸ்ரீ.ல.சு.க.ப் பா.உ. ஜினதாச நியத்தப்பால -திவயினவில் -11.12.1993.**

### இ.தொ.கா. இரண்டாவது பயங்கரவாத முன்னணி

''தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் எஸ்.தொண்டமானின் வாக்கு ஏலத்திற்குக் கீழ்ப்படிந்து, எதிர்க்கட்சி 145இலட்சம் சிங்கள மக்களை மிகப் பயங்கரமான பாதாளத்திற்கு இழுத்துச் செல்லுகிறது. நாட்டின் சுதந்திரத்தை மீண்டும் பெறுத் தரும் என மக்கள் நம்பிக்கை வைத்துள்ள எதிர்க்கட்சிகள், மத்திய மாகாண சபையின் 11 ஆசனங்களுக்கான மலையகத்தின் இரண்டாவது பயங்கரவாத முன்னணியொன்றை உருவாக்கத் தொண்டமான் உட்பட்ட குழுவுக்கு இடம் கொடுக்கின்றன''

**சிங்கள மஹா சபை -திவயினவில்- 2.12.1993**

### கொம்யூனிஸ்ட்டின் பார்வை/ கொம்யூனலிஸ்ட்டின் பார்வை

''உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியினதும் ஆலோசனைப்படி இந்நாட்டின் வளங்கள் அந்நிய நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இனப் பிரச்சினைக்குப் பின்னணியில் உள்ளது ஏகாதிபத்தியவாதிகளின் சதித்திட்டமாகும். இந்நிலைமையின் கீழ் மனித, தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுப்பதற்காக இடதுசாரிகள் அனைவரும் ஐக்கியப் பட வேண்டும்.''

**லங்கா சம சமாஜக்கட்சியின் தலைவரும் ஸ்ரீ லங்கா மேல் மாகாண சபை அமைச்சருமான பேனாட் சொய்சா -லங்காதீபவில் -02.12.1993**

### பத்திரிகையாளர் பணி

எழுத்துச் சுதந்திரமும், வெளியீட்டுச் சுதந்திரமும் இல்லாத இடத்தில் சுதந்திரமான பத்திரிகையாளர்கள் உருவாவது இல்லை. பத்திரிகையாளன் எப்போதும் மக்களின் சுதந்திரத்திற்காகவும், மக்களின் உரிமைகளுக்காகவுமே எழுதுவான்.''

**வட-மேல் மாகாண முதலமைச்சர் ஜீ.எம்.பிறேமச்சந்திற -திவ்யினவில் -02.12.1993**

சீ.சாத்தனார்

சரிநிகர் மாதமிருமுறை இதழ். இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணான். 1993.12.17

அச்சுப்பதிவு: 334 காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.